
# முல்லைக் கொடி

புலவர் கா.கோவிந்தன் எம்.ஏ.,



# முல்லைக் கொடி


புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.

முன்னாள் தலைவர்

தமிழ்நாடு சட்டப்பேரவை



தமிழ்த்தாய் பதிப்பகம்

8, மத்துவர் தெரு

சிட்லபாக்கம், சென்னை–600 064.

## நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | முல்லைக் கொடி |
| ஆசிரியர் | : | புலவர் கா. கோவிந்தன், எம். ஏ. |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு : 2001 |
| நூலின் உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| நூலின் அளவு | : | கிரவுன் 1 × 8 |
| பயன்படுத்திய தாள் | : | 10.5 கிலோ வெள்ளைத் தாள் |
| பக்கங்கள் | : | 192 |
| அச்சுப் புள்ளிகள் | : | 11 புள்ளிகள் |
| ஒளி அச்சு | : | எல். கே. எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், சென்னை—17. |
| அச்சகத்தார் | : | பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை. |
| நூல் கட்டு | : | சாதா அட்டை |
| விலை | : | ரூ. 50—00 |
| பதிப்பாளர் | : | தமிழ்த்தாய் பதிப்பகம் சென்னை - 64 |

---

**MULLAIK KODI : PULAVAR K. GOVINDAN, M. A. :**
**PRICE Rs. 50-00**

---

**PUBLISHER : TAMIZHTHAI PATHIPPAGAM, CHENNAI - 64**

# முன்னுரை

**ச**ங்க இலக்கியம் பயிலத் தொடங்கிய நேரம். அதற்குத் துணை நிற்கும் என்பதால், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடாகிய தமிழ்ப் பொழிலைத் தொடர்ந்து படித்து வந்தேன். அதில், தோரமங்கலம் ஆசிரியர் வரத நஞ்சையப் பிள்ளையவர்கள் கலித் தொகைப் பாடல்களுக்கு அளித்து வந்த விளக்கப் பேருரை, அறிவுக்கு விருந்தளிக்கும் ஆழம் உடையதாய் அமைந்திருந்தது.

அதைப் படிக்கும் பொழுது கலித்தொகையின் ஒவ்வொரு பாட்டின் கருப் பொருளும் எந்தச் சூழ்நிலை யினைச் சுட்டி நிற்கிறது என்பதை விளக்கும் விரிவான உரையை முன்னுரையாக அளித்துப், பாடற் பொருளை விரித்துரைப்பதால், ஒவ்வொரு பாட்டின் பொருளையும் தெளிவாக உணர முடியும்; ஒவ்வொரு பாட்டின் விளக்கமும் ஒரு சிறு கதை போல அமைந்து, படிப்பவர்க்குச் சுவையூட்டுவதாயும் அமையும் என உணர்ந்தேன்.

அவ் வகையில் எழுதப்பட்ட கலிப் பாக்களில், முல்லை சார்ந்த கலிப் பாக்கள் பதினேழின் விளக்கம், ‘முல்லைக் கொடி’ என்ற பெயர் தாங்கி வெளிவருகிறது. இந்நூலை வெளியிடும் தமிழ்த்தாய் பதிப்பகத்தாருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

அன்பன்

**கா. கோவிந்தன்**

# பொருளடக்கம்


பக்கம்

1. ஏறும் வருந்தின . . . . . . . . . . . . . . . . . . 43
2. மடவரே நல்லாயர் . . . . . . . . . . . . . . . . 54
3. அஞ்சுவானைப் புல்லாள். . . . . . . . . . . . . 63
4. பாடுகம் வம்மின் . . . . . . . . . . . . . . . . . 76
5. இன்று கொடுப்பது எவன்? . . . . . . . . . . . 91
6. கை பிணைந்து அயர்வர் . . . . . . . . . . . . 104
7. அவன் கண்ணி அன்றோ? . . . . . . . . . . . 113
8. காஞ்சிக் கீழ்ச் செய்தேம் குறி . . . . . . . . . 120
9. மோரோடு வந்தாள் . . . . . . . . . . . . . . . 133
10. ஏடா! எமர் காண்பர் . . . . . . . . . . . . . . 139
11. சிற்றில் புனைகோ சிறிது!. . . . . . . . . . . . 145
12. சொல்லலோம்பு என்றார்! . . . . . . . . . . . . 153
13. எல்லை வருவான் விடு!. . . . . . . . . . . . . 161
14. இருமணம் இயல்பன்று . . . . . . . . . . . . . 170
15. அடைசூழ்ந்தார் நின்னை . . . . . . . . . . . . 176
16. நாடி வருவை நாணிலி!. . . . . . . . . . . . . 182
17. சேரிக் கிழவன் மகளேன் யான்! . . . . . . . . 188

# முல்லைக் கொடி

## (முன்னுரை)

முல்லைக் கொடி என்னும் இந்நூல் ஆயரினத்தவரின் வாழ்வுபற்றி எடுத்துக் கூறுவதாகும். செந்தமிழ் இனிமை செறிந்த கலித்தொகையுள், முல்லைக்கலியினைச் சுவைபட விளக்குவது இது. இதன்கண் அமைந்த பதினேழு பாடல்களையும் மிக விரிவாக, நூலின் சுவை மிகுமாறு திறம்பட விளக்கி, ஆசிரியர் **திரு. கா. கோவிந்தன்** அவர்கள் எழுதியுள்ளனர்.

தமிழகத்தில் வாழ்ந்த பண்டைத் தமிழ்ப் பெருமக்களுள், சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தவர் ஆயர் இனத்தவர். தமிழ் இலக்கியங்களைக் கற்பவர் இதனை நன்கு அறிவர். இயற்கையின் அமைதியோடு ஒட்டியமைந்தது ஆயர்களின் வாழ்வு. எழிலும் வளமும் வாய்ந்த இயற்கையைத் தம் வாழ்வின் நலத்துடன் பிணைத்துக் கொண்டவர் இவர். இதன் மூலம் நலமான வாழ்வும் இன்பமும் கண்டு பீடுடன் வாழ்ந்தவர். ஆண்மை, கடமையில் உறுதி, நேர்மை, கபடற்ற தெளிந்த உள்ளம், இனக் கட்டுப்பாடு முதலிய அரிய பண்புகள் பலவும் அவர்பால் அமைந்து விளங்கின.

அன்று வாழ்ந்த ஆயரின் பல்வகைச் சிறப்புக்களையும் இன்றும் தென்னாட்டில் நாம் நேரிற் காணலாம். தென்னாட்டின் பல பகுதிகளில் வாழும் ஆயர் குடிப் பெருமக்கள், தம் பழஞ்சிறப்புச் சற்றேனுங் குறையாமல், இன்றும் வீறுடன் வாழுகின்றனர். அன்று போலவே,

ஆநிரைகள் இன்றும் ஆயர்பாடிகளிலே மலிந்து விளங்கு கின்றன.

மேய்ச்சல் நிலங்கள் உலகெங்கும் பல பகுதிகளில் உள்ளன. அங்கு வாழ்வாரும் நம் நாட்டு ஆயர்களைப் போன்ற வாழ்க்கையையே அமைத்துக் கொண்டு வாழு கின்றனர். ஆநிரை மேய்த்தும், ஆடும், எருமையும் வளர்த்தும், அவற்றால் பெறும் பயன் கொண்டும் வாழ்வதே அவர்கட்கும் இயல்பாக விளங்குகின்றது.

**மஞ்சி விரட்டு** என்னும் ஏறுதழுவுதல் ஆயரிடை விளங்கி வந்த ஓர் ஆண்மைச் செயலாகும். இதனையும் உலகெங்கும் உள்ள ஆயரிடை விளங்கக் காணலாம். ஆயரிடை மட்டும் நிலவிய இவ்வழக்கமே, இன்று மற்றைய பிற இனத்தவராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது கண்கூடு.

முன் காலத்தில், ஆயர்களின் தனி உரிமையுடைய விழாவாக விளங்கிய ஏறுதழுவுதல், இன்றோ, பல்வேறின இளைஞரும் கலந்து கொள்ளும் ஆற்றல் மிகுந்த மஞ்சி விரட்டாக விளங்குகின்றது. விழாவிற் கலந்து கொள்வார் நிலையால் மாறுபட்டது போலவே, விழாவின் நோக்கமும் பெரிதும் மாறிவிட்டது.

அக் காலத்தில், ஏறுதழுவி வென்றே ஆயர்குல இளைஞர் தம் காதலியரை மணந்து இல்லறம் புகுவர். இளைஞர், தம் காதலியரை அடைவதற்குத், தவறாது கொல்லேறு தழுவியேயாதல் வேண்டும். அதன்கண் வெற்றி பெற்றாலன்றிப், பெண்ணின் பெற்றோர் அவர்க்குத் தம் மகளிரை மணஞ் செய்து தருவதற்கு

இசையார். எத்துணை உளங்கலந்த காதலராயினும், காதலின் பயனான இல்வாழ்வினை ஏற்குமுன், ஏறுதழுவி ஆண்மையைக் காட்டியேயாதல் வேண்டும். கொல்லேறு அஞ்சுவானை ஆயமகள் என்றும் விரும்பவே மாட்டாள். இந்த நிலை அன்று. அதனால், கொல்லேறு தழுவுதல் இளைஞர் வாழ்க்கைப் பொறுப்பினை ஏற்கும் தகுதிக்கு உரியவராய் விட்டனர் என அறிந்து கொள்வதற்கான தேர்வுப் போட்டியாக அந்நாள் விளங்கிற்று.

ஓரோ வொருகால், பெற்றோர் முலைவிலை கொண்டும், தம்மக்களின் காதல் உளம் அறிந்தும் மணங் கூட்டுவிப்பது நேர்வதும் உண்டு. ஆனால், இஃது ஆயரினப் பெருங்குடித் தலைவர்பால் பெரும்பாலும் நிகழ்வதில்லை.

ஆனால், இந்நாளிலோ, பொங்கல் புதுநாள் விழாக் கொண்டாடி மகிழ்ந்ததன் பின், மறுநாள் மாட்டுப் பொங்கல் விழாநாளில், மஞ்சி விரட்டில் இளைஞர் பலரும் கலந்து கொள்வது என்று ஏற்பட்டு விட்டது. மற்போர், சிலம்பம், வாள்வீச்சு போன்ற உடலுறுதி காட்டும் போட்டியாக இந்நாள் அவ்விழா விளங்கு கின்றது. விழாவினை நடத்தும் குறிக்கோள் அடியோடு மாறிவிட்டது; என்ற போதிலும், விழா நடைபெறுகின்றது; அன்று முழங்கிய அதே ஏறு கோட்பறையின் ஒலியே இன்றும் களத்தில் ஒலிக்கின்றது.

## சிறப்பும் ஆசிரியரும்

கலித்தொகை மிகச் சிறந்த தமிழ் நூல்; 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்று, புலவர்களால் போற்றி உரைக்கப்படும்

பெருமையுடையது. ஐவகை நிலத்தைக் குறித்தும் ஐந்து பகுதிகள் இதன்கண் உள்ளன. அவை ஒவ்வொன்றுமே கற்பனையூற்றின் களஞ்சியங்கள்தாம். என்றாலும், முல்லைக் கலியில் நாம் சந்திக்கும் அதே ஆயர்களின் மரபினரை இன்றும் கண்ணெதிரே காண்பதாலும், அவர் இன்றும் தம் பழைய குடிச்சிறப்பின் பல நயங்களையும் உடையவராக விளங்குவதாலும், முல்லைக்கலியிலே நாம் தனித்த ஒரு பேரின்பச் சுவையை உளங்கனிந்து அநுப விக்க முடிகின்றது.

பதினேழு பாடல்களையே கொண்டது என்றாலும், பாக்களின் அமைப்பிலே ஆட்சி செலுத்தும் செந்தமிழின் இனிமையும், வண்மையும் நம்மைப் பெரிதும் மெய் சிலிர்க்க வைக்கின்றன. வசந்த காலப் பொதியத் தென்ற லின் இனிமையையும், குற்றமற்ற நல்யாழிலே இசை வல்லான் ஒருவன் திறன்பட மீட்டி எழுப்பும் இன்னொலியையும், பெண்மையின் எழிலெலாம் ஓருருக் கொண்ட நற்கன்னியொருத்தி, தாளத்தின் முறை எள்ளள வும் பிசகாமல், தக்க அபிநயங்களுடன் ஆடிக்காட்டும் நடனத்தின் இனிய நலனையும், குதலைச் செவ்வாய்க் குறுமதலையரின் மழலைச் சொற்களிலே தவழும் உளம் பிணிக்கும் ஆற்றலையும், இம் முல்லைக் கலியிலே நாம் அறிந்து அநுபவிக்கின்றோம். ஆசிரியர், தம் உறுப்பினரைப் படைத்துச் சொல்லோவியங்களிலே அவர்களைத் தீட்டி யுள்ள செவ்வியைச் சொல்லால் வருணித்துப் போற்றுதல் நம்போல்வார்க்கு எளிதல்ல. அவர்களெல்லாம், நம் கண்ணெதிரே நின்று நடித்துக் காட்டினாற்போலும், அவர்கள் உரையாடல்களிலும் பாவங்களிலும் நாமுங்

கலந்து மெய்ம்மறந்து நிற்பது போலும், ஓர் இன்ப மயக்கம், பொருள் நயம் உணர்ந்து படிக்கும் போதெல்லாம், நம்மை யறியாமலேயே நம் உள்ளங்களில் ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாறு, நயங்கள் பலவாக, ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் தமிழ்த் தேனை அள்ளியள்ளிச் சொரிகின்றன, முல்லைக்கலியின் பாடல்கள்.

மிகமிகச் சிறந்த காவியப் பண்பின் நிலைக்களனாக விளங்கும் வண்ணம், தம் நுண்மாண் நுழைபுலச் செவ்வியால், முல்லைக் கலியினை ஆக்கித் தந்த செந்தமிழ்ச் சான்றோர்க்கு, நாம் என்றென்றும், வழிவழி கடமைப்பட்டுள்ளோம்; இத்தகைய செறிவுடைய தமிழ் நுல்கள் பல உள்ளதனால்தான், தமிழ் அன்னை, தன் அன்றைய எழிலும் நலனும் இன்றும் குன்றாதவளாக, மென்மேலும் பாவலரும் நாவலரும் பணிபல புனைந்து போற்ற, என்றுங் கன்னியாக ஏற்றமுடன் விளங்கு கின்றாள்.

முல்லை என்பது அகத்துறை நூல்களில் இருத்தலும், இருத்தல் நிமித்தமும் பொருளாகக்கொண்டு, கற்று வல்ல சான்றோர் சுறையுற ஆக்கும் செய்யுட்களைக் கொண்ட தாகும். தனித்துக் கண்டு, உளங்கலந்து களவில் உறவாடி மகிழ்ந்த தன் காதலனை, என்று மணந்து இன்புறுவது, இல்லறங் காண்பது எனக் கன்னி நல்லாள் ஒருத்தி எண்ணி எண்ணி ஏங்குதலும், ஆற்றியிருத்தலும், அதன் நிமித்தமாக நிகழும் பல்வேறு சம்பவங்களும், பிரிந்து வினைமேற் சென்ற காதலனின் வரவை எதிர்நோக்கிக் காத்துக் காத்து, நாளொற்றித் தேய்ந்த விரலுடன்,

துயரத்தின் எல்லையுள் துடிக்கும் காதல் மனைவி ஒருத்தி ஆற்றியிருத்தலும், அதன் சார்பாக நிகழும் நிகழ்ச்சிகள் பலவும் இம் முல்லைத் துறையுள் அடங்கும்.

"மாயோன் மேய காடுறை யுலகமும்" என்ற சான்றோர் வாக்கின்படி, முல்லைக்கு உரிய தெய்வம், மாயோன் ஆகும். அதிலும் மாயோனின் அவதாரமாகிய கண்ணனையே ஆயர்கள் பெரிதும் போற்றி வழிபட்டு வந்தனர். கண்ணன், திருமாலின் அவதாரமாவதுடன், தம் இனத்தோடு வாழ்ந்து, தம் குடி மரபின்படி ஒழுகி வந்ததால், ஆயர்க்குக் கண்ணன் வடிவில் மாயோனை வழிபடுவதிலே ஒரு தனித்த மன நிறைவு உண்டு என்றும் நாம் கூறலாம். கோகுலத்திலே வளர்ந்து, வெண்ணெய் திருடி உண்டு, நிரை மேய்த்து, ராதையின் காதலனாக விளங்கிய கண்ணனை, ஆயர் போற்றியதில் தெய்வ பக்தியுடன், இனப் பற்றும் கலந்து ஒளி வீசுகின்றது என்றே நாம் கருதலாம்.

ஆயர்குடித் தலைமக்கள் குறும்பொறை நாடன், தோன்றல், அண்ணல் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப் பெறுவர். அதே போன்று, தலைவர் குடிப் பிறந்த ஆய்ச்சியர் கிழத்தி, மனைவி என வழங்கப் பெறுவர். தலைமக்களன்றிப் பொதுவான பிற ஆயர் குடி யினரான ஆண்கள் கோவலர், இடையர், ஆயர், பொதுவர் என்றும், பெண்கள் இடைச்சியர், கோவித்தியர், ஆய்ச்சியர், பொதுவியர் என்றும் அழைக்கப் பெறுவர்.

காடும் காடு சார்ந்த நிலப் பகுதியுமே ஆயர் வாழும் பகுதியாதலின், அங்கே பல்வகைப் பறவையினங்களும்

விலங்கினங்களும் மிகுதியாகக் காணப்படும். எனினும் கானக் கோழியும், சிவலும் ஏராளமாக வாழும் பறவை யினங்கள் என்றும், முயல், சிறுமான், உழை முதலியன பெரும்பான்மையாகக் காணப்பெறும் விலங்கினங்கள் என்றும் கூறுவர்.

பெரும்பாலும், ஆயர்கள் காடுறை வாழ்வே மேற் கொண்டவர். அதனையொட்டியே அவர்தம் ஊர்களும் அமைந்து விளங்கும். அவை பாடி, சேரி, பள்ளி என்று கூறப்படும்.

காட்டிலே ஆயர்க்கும், அவர் பேணும் நிரைகட்கும் நீரூட்டி வாழ்விப்பன கான்யாறுகள் ஆகும். மரங்களில் கொன்றை, காயா, குருந்து முதலியனவும், பூக்களில் முல்லை, தோன்றி, பிடவம், தளவம் என்பனவும், முல்லை நிலத்திற்கு உரியனவாகும்.

ஆயர்களின் உணவுக்குப் பெரிதும் பயன்பட்ட தானிய வகைகள் வரகு, சாமை, முதிரை முதலிய புஞ்சைப் பயிர்களாகும். ஏறுகோட் பறையும், முரசும், முல்லை யாழும் ஆங்கே வழங்கிய இசைக் கருவிகள். சாதாரிப் பண் இசைத்து மகிழ்வது ஆயர்க்குரிய வழக்கம் ஆகும்.

வரகு முதலியன விதைத்தல், களைகட்டல், அறுத்தல், கடாவிடுதல் முதலியனவும், நிரை மேய்த்தலும் ஆயர்களின் தொழில்கள். அவர்களிடையே நிகழும் செய்திகளும் மேற்குறித்தவை பற்றியதாகவே மிகுதியாகக் காணப்படும்.

முல்லை நிலத்திற்குரிய பெரும் பொழுது கார்காலம் ஆகும். அக் காலமே ஆயர் தம் ஊரில் குடும்பத்தோடு வாழும் காலம். ஆதலின், அவர் அக வாழ்விற்குரியது அதுவேயாகத் திகழ்வதாயிற்று. முல்லைக்குச் சிறு பொழுது மாலைக் காலம்.

இனி, இம் முல்லைக் கலியினைப் பாடிய தமிழ்ச் சான்றோர் **சோழன் நல்லுருத்திரன்** என்போராவர். இவர் தம் இயற்பெயரான நல்லுருத்திரன் என்பதனோடு, சோழன் என்ற அடைமொழியும் வழங்குதல் கொண்டு, இவரைச் சோழ நாட்டிற் பிறந்தவர், அதிலும் சோழ மன்னர் மரபிலே வந்து தோன்றியவர் என்பர் தமிழறிஞர். அவ்வாறு கருதுவது ஓரளவிற்கு இயல்பே என்றாலும், முல்லைக் கலியினை நாம் நன்கு ஆராய்ந்தால், அக்கருத்தி னுக்கு அரண் செய்வதற்கானவை யாதும் காண இயலாத வராகின்றோம்.

முல்லைக் கலியின் பல பாக்களுள், ஆயர்கள் வாய்மொழியாகப் பாண்டியர் பெருமையும், உயர்வும் பல படியாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆயர்கள் குடியின் தொன்மையைப் பற்றிக் கூறும்போது கூட, ஆசிரியர் தென்னவனின் துணை நின்ற தொன்மை சால் மரபினர் என்றே அவர்களைக் குறிக்கின்றார். இதனால், அவர் பாண்டிய நாட்டின்பால் பெருமதிப்பு உடையவர் எனவும், பாண்டிய மன்னரை வாழ்த்திப் பாடும் பான்மை யுடையவர் எனவும், நாம் தெளிவாக அறிகின்றோம். அறியவே, 'இவர் சோழ நாட்டவராயிருத்தல் கூடுமா? சோழ மன்னர் மரபினராயிருத்தல் ஒவ்வுமா?' என்ற ஐயங்களும் கூடவே நம் மனத்துள் எழுகின்றன.

சோழ நாட்டின் பெரும் பகுதி மருத நிலப் பகுதி யாகும். எனவே, ஆயர்குடிப் பெருமக்கள் அங்கே பண்டை நாளிற் சீருடன் வாழ்ந்திருத்தல் இயற்கையின் நியதிக்கும் ஏற்புடையதன்று. மேலும், ஏறு தழுவுதல் இன்றும் தென்பாண்டி நாட்டிலேயே நிலவிடக் காணுகின்றோம். ஆதலின், இவ்வாசிரியர் பாண்டிய நாட்டின்கண் வாழ்ந்தவர் என்றுதான் நாம் கருத வேண்டியதாகின்றது.

பாண்டிய நாட்டவரான இவர், பல காலம் சோழ நாட்டிற் சென்று தங்கியவராதலின் 'சோழன்' என்று குறிப்பிடப் பெற்றாரோ என்றும் கருதலாம். இதுவும் நம் யூகமாகவே தோன்றும்.

அல்லது, சோழ நாட்டினின்றும் பாண்டிய நாட்டின்பாற் போந்து, அங்கேயே தங்கி வாழ்ந்து, புலமைச் செங்கோல் ஓச்சி உயர்ந்த நிலையுடைய வராதலின், பாண்டி மண்டிலப் புலவருள் இவரைத் தனித்துக் குறித்தற் பொருட்டுச் **சோழன்** என வழங்கினர் என்றும் சிலர் கருதுகின்றனர்.

இந்நாளிலும், தென்பாண்டி மாவட்டங்களினின் றும் பிறவூர் சென்று தொழில் நடாத்தி வருபவரை, அவ்வப் பகுதிகளிற் கொழும்பு முருகையாப் பிள்ளை, பட்டினத்து அண்ணாமலைப் பிள்ளை, கருவூர் சோம நாதன் செட்டியார் என்றாற்போல அடைமொழியிட்டு வழங்குவதை நாம் காணலாம். இஃதேபோல் அற்றை நாளில் நம் புலவர் பெருமகனாரும் அழைக்கப் பட்டிருத்தல் கூடும்.

எனவே, சோழ நாட்டவரா அன்றிப் பாண்டிய நாட்டவரா இவர் என்று நம்மால் அறுதியிட்டுக் கூறவியலாது எனினும், முல்லைக் கலியின் பாடல்கள் இவரைப் பாண்டி நாட்டார் என்றே காட்டுகின்றன என்று மட்டும் முடிவாகக் கூறலாம்.

மேலும், மன்னர் மரபுள் வந்தவர் இவர் என்பதும் ஐயத்திற்கு இடன் தருவதேயாகும். ஆயர்களுடன் ஒன்றிக் கலந்து உறவாடி வாழ்ந்த வாழ்வினராயிருக்க வேண்டும் என்பதற்கு, இவர் நூலின் அமைவே சான்றாக நின்று வலியுறுத்துகின்றது.

முல்லைக் கலியுள் வரும் பாடல்கள் பலவும், காட்டும் திட்பஞ் செறிந்த ஆயர் குடியினரின் வாழ்வு நுணுக்கங்கள் பலவும், ஆயருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் இவர் என்பதை, நமக்குச் சொல்லாமற் சொல்லிக் காட்டுகின்றன.

ஆயர் குடியிற் பிறந்த பெரும்புலவர் இவர் என்றோ, அல்லது, வேறு எக்குடிப் பிறந்தாரேனும், ஆயர் குடியினரோடு பலகால் கலந்து பழகி உறவாடி வாழ்ந்த நிலையினர் இவர் என்றோ, அல்லது ஆயர்தம் வாழ்வின் நயத்தை அறிந்து, அதனைப் பாடும் ஆசை மேலெழ, அதற்காக ஆயரிடை சென்று நுணுகிக் கண்டு உரைத்தவர் என்றோ நாம் இவரைக் கருதலாம். நிலையான முடிவு எதுவும் நாம் கொள்வதற்கில்லை. எனினுங்கூட ஆயர் வாழ்வினை நன்கு அறிந்த இயல்பினர், பாண்டியர் புகழ் பாடும் பாவலர் என்று மட்டும் இவரைப் பற்றி நாம் தெளிவாக ஐயத்திற்கிடன் இன்றிக் கூறலாம். அறிஞர்

பெருமக்கள் தீர ஆய்ந்து முடிவு செய்தற்கு உரிய செய்தி இது.

## ஆயரின் வாழ்வு

தமிழறிஞர் வகுத்த ஐவேறு வகையான நிலப்பகுப்பி னுள், ஆயர் குடியினர் காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்தின்கண் வாழ்ந்தவராவர். இந்நிலப் பகுதிகள் மேய்ச்சல் தரைகள் நிறைந்ததாக விளங்கும் எனக் கண்டோம். தம் நிரைகளை ஓட்டிச் சென்று வளமான புல்வெளிகளிலே வயிறார மேய்த்துக் கான் யாறுகளிலே நீரூட்டிக் குழலிசைத்து வாழ்ந்து மகிழ்வது ஆயரின் இயல்பு. ஆயர் அனைவரும் இவ்வாறு ஊரை அடுத்தும் தொலைவிலுமாக அமைந்த மேய்ச்சல் பகுதிகளிலே பொழுதெல்லாம் தொழில் - மேற்சென்று வாழ்வர்.

அவர்க்குப் பொழுதுக்குக் கஞ்சி கொண்டு செல்வதும், கறந்த பால் குடங்களிற் சுமந்து வீடு கொணர்வதும், அதனைக் காய்ச்சி உரை குத்தி மோராக்கிக் கடைந்து, மோரும் தயிரும் நெய்யும் மருத நிலங்களின் ஊர்களிற் சென்று விற்பதும், ஆய்ச்சியர் மேற்கொண்ட பணிகளாகும். மேலும் நிரைகளைத் தொழுவத்தினின்றும் ஆயர் ஓட்டிச் சென்ற பின்னர், கன்றுகளைத் தளைந்து காப்பதும், பிறவும் ஆயர் மகளிர் இயல்பாயிற்று.

ஆநிரைகள் பசும்புல் மேய்ந்து வளமான உடற்கட்டுடன் அந்நாளில் விளங்கின. காட்டிலே மனம் விரும்பிய அளவு வளமான புல்லை வயிறாரத் தின்ற

அவை, கட்டுடன் வன்மையுடன் விளங்கியதில் சிறிதும் வியப்பில்லை. ஆகவே, அவற்றைக் கண்காணிக்கும் ஆயரும் அவற்றிடையே திமிர் கொண்ட அடலேற்றையும் அடக்கியாளும் வல்லமையுடன் விளங்கினர். ஆயர், அவ்வாறு வலிய உடற்கட்டுடன் விளங்க வேண்டும் என்பதே, அந்நாளைய ஆயர் குடியினரின் வழி வழி வந்த மாறாத குறிக்கோள்.

அத் தகுதியில்லாதவர் தம் ஆநிரைகளைக் காத்து நிற்கவியலாது, அவற்றின் போக்கிலே விட்டுவிட நேரும். அதனால், அவை கட்டுப்பாடற்றுத் திரிந்து, இவர்தம் கட்டுப்பாடுள் நிலையாக நில்லாது போய் விடவும் ஏதுவாகும். எனவே, ஆயர் தம் கன்னியர்க்குரிய மணவாளரை உறுதி செய்யும்போது, அவர்தம் உள்ளம் காதலாற் பிணிப்புண்டதா எனக் கருதுவதுடன் மட்டும் அமையாது, கொல்லேறு தழுவினானுக்கே எம்மகள் கொடைக்கு உரியர் என்றே உரைப்பர்.

ஐவகை நிலத்தவருள், ஆண்மை யுடையார் எங்கணுமே பாராட்டப் பெறுவர் என்றாலும், அவர்க்கே எம்மகள்; அதற்கு அவர் தகுதியற்றார் எனின், எம்மகளும் அவர்க்கு இல்லை என உரைத்தல் கிடையாது. இவ்வாறு, திருமணம் செய்து தனிக் குடும்பத்தின் தலைவனாக விளங்கப் போகும் ஒருவன், கொல்லேறு தழுவும் ஆண்மையாளனாக இருத்தல் வேண்டும் என்று வகுத்த ஆயரின் வாழ்வு இலக்கணம் எவ்வளவு சிறப்புடையது எனக் காணுங்கள்!

தத்தம் நிரைகளோடு காட்டகத்தே சென்று விடுபவர் ஆயர். அவர்தம் இல்லத் தலைவியரோ கன்று

பேணியும், உணவு சமைத்தும் ஆக வேண்டிய இல்லக் கடமைகளில் ஈடுபடுவர். அவர்க்குப் பிறந்த மக்கள், தக்க வயதும் பருவமும் வந்ததும், ஆண் மக்கள் தந்தைமாருக்கு உதவியாகவும், பெண் மக்கள் தாய்மார்க்கு அவர்தம் தொழிலில் உதவியாகவும் இருத்தல் இயல்பு.

தகப்பன்மார்க்கு உதவியாகக் காளையர், தம் நிரைகளோடு காட்டகத்தே சென்று, அவற்றைக் காத்து நிற்கக், கன்னியர் தம் பெற்றோர்க்கும், உடன் பிறந்தார்க்கும் உணவு கொண்டு செல்வர்; அங்கே கறந்த பால் வீடு கொணர்வர். மோரும் தயிரும் நெய்யுமாக மாற்றிய பின், அதனைத் தலைமேற் சுமந்து சென்று மருத நிலத்து ஊர்களிலே விற்று வருவர். அவர் சென்று வரும் ஒயிலே ஒரு தனியழகு என்பர் இலக்கிய ஆசிரியர்கள்.

இவ்வாறு, குலத்தொழில் மேற்கொண்டு, காளையர் காட்டகத்தே தனித்துச் செல்வதும், கன்னியர் தனித்துச் செல்வதும், ஆயர் வாழ்வின் இயல்பாகவே, அவருள் யாதாமொரு ஆயர்குல இளைஞனும் கன்னியும், தம்முள் தாமே கண்டு கலந்த காதல் உடையராவதும், இயற்கையின் நியதிக்கு ஒத்ததாயிற்று.

இவ்வாறு, காதல் வலையிலே பிணிப்புண்டு, களவிலே உறவாடி மகிழ்ந்த ஆயர்குலக் கன்னியும், காளையும் ஊரறியப் பெற்றோர் இசைவுடன் திருமணம் செய்து கொள்ள வேண்டும்; அதன் பின்னரே அவர் தம் தனித்த இனித்த இல்வாழ்வு தொடங்கும்.

அந்தக் கன்னியின் பெற்றோர், நல்ல ஆனேற்றுக் கன்று ஒன்றினை, வளமுடன் வளர்த்து வருவர். கண்டவர்

அஞ்சும் கொடுமை யுடையதாக அது திண்மையுடன் வளரும். அதனை அஞ்சாது தழுவியடக்கி வெற்றி கொண்டவனுக்கே தம் மகள் மாலைசூடி மணந்து கொள்வதற்கு உரியவள் என்றும் அவர் அறிவித்து விடுவர்.

இவ்வாறு, ஓர் ஊரிலே கன்னியர் பலரும் காளையர் பலரும் மணம் நிகழும் காலத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பர். கார்காலந் தொடங்கியதும், ஆயர் எல்லாம் வீடு திரும்பி விடுவர். அப்போது, 'மணப் பருவம் உள்ள மகளிரை மணக்க விரும்பும் இளைஞர் ஏறுதழுவி வென்றி கொளும் ஆண்மையுடையவரானால் முன்வரலாம்!' எனப் பறையொலியோடு அறிவிப்பர்.

தனித்தனியே, "இன்னின்ன காளையைத் தழுவி வெல்பவன் இன்னின்னாரை மணந்து வாழும் உரிமை யுடையவன்," என்றும் அறிவிக்கப் பெறும். கொல்லேற்றைக் கண்டு அச்சம் கொள்பவர் பலரேனும், காதல் உள்ளம் கொண்ட இளைஞர் நிலை அவ்வாறு இருப்பதில்லை.

எவ்வாறேனும் குறித்த ஏற்றினை வென்று தத்தம் காதலியரை அடைய வேண்டும் என்ற தளராத ஊக்கம் அவர் உள்ளத்துள் எழும். இயல்பிலேயே உடல் வலிமிகுந்த ஆயர்குல இளைஞர் ஆதலாலும், ஏறு தழுவுதல் ஆயர்தம் குலமரபு என அறிந்து, தாமும் பலகால் அம்முறையிற் பயின்றவர் ஆதலாலும், அவர் உள்ளத்துள் கட்டுக்கு அடங்காத காதல் எழுந்து விளங்குவதாலும், கொல் லேற்றை எவ்வாறேனும் வென்று விடவேண்டும் என்ற ஆண்மையும் ஊக்கமும் முயற்சியும் அளவற்று அவர்பால் கிளர்ந்து எழும்.

ஆசையும் ஆர்வமும் தோன்றவே, கானாற்றிலே நீராடித், தெய்வங்களை வெற்றி வேண்டித் தொழுது, பன்மலர்க் கண்ணி சூடிச், செந்துவர் ஆடையணிந்து, துணிபுடன் ஏறு தழுவ முன்வருவர் ஆயர்குல இளைஞர். தம் காதலர் ஏறுதழுவ முன்வந்ததும், காதலியர் துடி துடிப்பர். என்னாகுமோ எனக் கவலையுறுவர். பரண்மேல் வீற்றிருக்கும் கன்னியர் பலரிடையே தன் காதலியையும், அவள் முகத்திலே தன் வெற்றி குறித்து ஒளிரும் ஆர்வத்தை யும் நோக்குவான் இளைஞன். அந்த அளவிலேயே, அப்போதே ஆயிரம் யானைப் பலம் அவனுக்கு உண்டாகி விடும். தொழுவினுள் குதித்து ஏற்றுடன் மற்போரிடுவான்.

சீறிவரும் கொல்லேற்றையும், எதிர்நிற்கும் இளை ஞனையும் கண்டு, ஆயர் எல்லாம் வாயடைத்து நிற்பர். 'ஐயகோ, இவன் நிலை என்னமோ?' என்பாரும் பலர். ஆனால், அவன், அதோ! கொல்லேற்றின் கோட்டிடையே புகுந்து அதனைத் தழுவி வெற்றி கொண்டான் எனக் கண்டதும், அவன் காதலி அகமலர்ந்து களிப்பாள். களவுக் காலத்தே, தாயும் தந்தையும் சினந்ததும், ஊர் அலர் உரைத்ததும் கண்டு வெதும்பிய அவள், 'இனி அவர் என் செய்வர்? அவனையே நான் மணந்து தீரா இன்பத்தில் திளைப்பேனே!' என இறுமாந்து விளங்குவள். அந்த இறுமாப்பு அவள் குறுகுறுத்த கண்களிலே நிழலாடும்.

தாம் வெல்லுதற்கு அரிது என வளர்த்த கொல்லேறு, இளைஞனின் வலிமைக்கு ஆற்றாது அடங்கி வலியழியக் கண்ட ஆயர், முதலில் ஓரளவுக்குக் கவலையுற்றாலும் பின்னர்த் தம் மகளின் திருமணம் அதனாற் கைகூடி விட்டது எனக் களிப்புடன் மகட்கொடையை அறிவிப்பர்.

அதனால் உளங்களித்த கன்னியர், ஊர் மன்றிற் சென்று கூடிக் கொல்லேற்றை வென்ற காளையரையும் அவர் குறித்த கன்னியரையும் பொருளாக வைத்துப் பாடியாடிக் குரவைக் கூத்து நிகழ்த்தி மகிழ்வர். பின்னர்த் திருமணம் நடைபெற்றதும், புதிய இல்லங் கண்டு, அங்கே புதிய வாழ்வு தொடங்குவர், காதலர்.

இவ்வாறமைந்த காதலும் கடிமணமும் ஆயரிடையே காணப்பட்ட ஒரு தனித்த பண்பாகும். கொல்லேறு தழுவலால் பலர் புண்படவும் உயிர் துறக்கவும் நேர்ந்த போதிலும், தம் குடிப் பெருமையையும், மரபையும் மறவாது போற்றும் இயல்புடையரான ஆயர், அதனைக் கைவிடாது உறுதியுடன் ஓம்பியே வந்தனர்.

இத்துணைத் திறனும் வல்லாண்மையும் கொண்ட ஆயர்கள், அவரவர் பேணிவந்த நிரைகளின் காரணமாகப் பழைய தமிழகத்தில் மூவேறு வகையினராகத் திகழ்ந்தனர். குலத்தால் குடியால் ஒருவரே யெனினும், நிரை காரணம் பற்றி வழங்கலான பெயர்கள் நாளடைவில் தந்தையின் மகன் என வழிவழி நின்று நிலவுவதும் ஆயிற்று.

எருமைகள் உடையவர் கோட்டினத்து ஆயர் என்றும், ஆநிரைகளைப் பேணி வாழ்ந்தவர் கோவினத்து ஆயர் அல்லது நல்லினத்து ஆயர் என்றும், ஆட்டினம் கொண்டு வாழ்ந்தவர் புல்லினத்து ஆயர் எனவும் குறிக்கப் பெற்று வந்தனர்.

இம் மூவகையினரும் தாம்தாம் கொண்டிருந்த மிகுதியான நிரைகளின் காரணமாக, வேறு வேறு பெயருடன் அழைக்கப்பட்டாலும், ஏறுதழுவலும் பிறவும்

அனைவருக்கும் பொதுவே. ஓரினத்து ஆயமகன், மற்றோரினத்து ஆயமகளைக் கண்டு காதலிப்பதிலும், ஏறுதழுவி வென்று மணந்து வாழ்வதிலும், எவ்விதத் தடையும் கிடையாது. ஆனால், மூவகை நிரையினும் ஆநிரை சிறப்பாகக் கருதப்படுவதும், கோவினத்தாயர் பிறரினும் சிறப்புடன் மதிக்கப்படுவதும் இயல்பு.

மணம் பெற்றவர், தனி இல்லம் அமைத்து வாழ்வு தொடங்குவதே அக்கால ஆயர் மரபு. அஃதன்றித் தம் பெற்றோருடன் வாழ்தல் தம் பெருமைக்கு ஏற்றதல்ல என்றே அவர்கள் கருதினர். 'தாமே உழைத்துப் பெறும் பயனல்லது பெற்றோர் உழைப்பால் வரும் பயனை உண்டு களித்து வாழ்பவரை, வாழ எண்ணுபவரை ஆய மகள் ஒருத்தியும் தன் மணாளனாக ஏற்றுக் கொள்ளாள்!' என்று முல்லைக் கலியுள் வரும் தொடர் ஒன்று இதனை வலியுறுத்துகின்றது.

தனித்தனிக் குடும்பங்களாக வாழும் ஆயர் பலரும், தனிவாழ்வில் ஒதுங்கி வாழ்ந்து வருபவரும் அல்லர். நிரை மேய்த்தல் முதற்கொண்டு ஏறுதழுவல் குரவை அயர்தல் முதலிய பல செயல்களிலும் தம் ஊர்த் தலைவனின் தலைமையில் பலரும் ஒன்று கலந்து இயற்றுவதே அவர் மரபு.

கோடை காலத்து, ஆயர்பாடியை யடுத்த பகுதி களில் புல் கிடையாது போகும். அக்காலத்தே, வளமுள்ள தொலைவான இடங்களுக்கும் ஆயர் தம் நிரைகளை ஓட்டிச் செல்வர். அப்போது, பலரும் தத்தம் நிரைகளை ஒருங்கு கூட்டிச் சென்று மேய்ப்பதும், பின்னர் மழை பெய்து ஊர்ப்புறத்தே புல்வளம் பெருகியதும், திரும்பி

வந்து, தத்தம் நிரைகளைத் தமக்குள் பிரித்துக் கொள்வதும், ஆயரிடை பண்டுதொட்டு நிலவும் ஒரு வழக்கம் ஆகும். இதனை நிரை பிரித்தல் என்பர் சான்றோர்.

"இன்றும், மேய்ச்சல் நிலப் பகுதிகள் மிகுந்துள்ள உலக நாடுகள் பலவற்றுள், குதிரைமீது அமர்ந்து ஆநிரை மேய்ப்பதும், தப்பிச் சென்றவற்றைச் சுருக்குக் கயிறு வீசிப் பிடித்துக் கொணர்ந்து நிரை சேர்ப்பதும், நிரை பிரிப்பதும் பிறவும் உண்டு," என்பர், உலக மக்கள் நாகரிகம் பற்றிய நூற்களின் ஆசிரியர் பலரும்.

'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள் தோள்' என்ற கலியடியும், 'கொல்லேறு கொண்டான் இவள் கேள்வன்' என ஊரவர் போற்றும் உரையை விரும்புவள் ஆயமகள் எனக் கலியில் வருஞ் செய்தியும், ஆயரிடை ஏறுதழுவுதல் எனும் துணிகரச் செயல் எந்த அளவு வன்மையாக வேரூன்றி இருந்தது எனக் காட்டுவதாகும்.

இவ்வாறாகப் பல பல சிறப்புக்களுடனும் அமைந்து விளங்கிய ஆயர்தம் வாழ்வில், காதலும், ஏறுதழுவி மணத்தலும் ஆகிய இரு பகுதியினையும், பல்வேறு நிகழ்ச்சிகளின் வழியாகச் சுவைபடக் கூறிச் செல்லு கின்றார், முல்லைக் கலியின் ஆசிரியர் நல்லுருத்திரனார்.

## முல்லைக் கலியுள் வரும் செய்திகள்

### பழைமை

தமிழகத்து வாழ்ந்த பழம் பெருங்குடியினர் பலரையும் போன்றே, தொன்றுதொட்டு வாழ்ந்து வரும்

பெருமை யுடையவர் ஆயரும் என்பர் நல்லுருத்திரனார். குமரி முனைக்குத் தென்பால், நெடுந்தொலைவ் நிலவிய நாட்டிற்கு உரியவனாகிய பாண்டியன், ஒரு காலத்தே அந்நிலப் பகுதியைக் கொடுங்கடல் கொள்ள, இழந்த தன் நிலப்பகுதிக்கு ஈடு செய்யும் பொருட்டுத், தன் அண்டையில் இருந்த சேர சோழ நாடுகளின்மேற் படையெடுத்துச் சென்றான். அவ்வாறு, தென்னவன் படைகொண்டு, அப் பகுதிகளிற் பறந்த வில்லும் புலியும் நீக்கி, அங்கெல்லாம் கயற்கொடி நாட்டிச் சிறந்தான்; அவன் புகழ் மீண்டும் பரவியது. அப்போது அவனுடன் அவனுக்குத் துணையாக நின்று போராடி வெற்றி தேடித் தந்த துணைவர்களுள் ஆயர்கள் ஒருவர். அத்துணைப் பழைமையும் பெருமையும் உடைய நற்றமிழ்ப் பழங்குடியினர் என்று கூறுகின்றது, இம் முல்லைக் கலியுள் வரும் நான்காவது பாடல்.

## தெய்வ நம்பிக்கை

ஆயர்கள் இயற்கையோடு கலந்த வாழ்வினர். இயற்கையோ, என்றும் ஒரே அளவாக நன்மையே விளைத்து நிற்பதில்லை. ஓரோஒருகால் இயற்கை தன் நிலை பிறழ்ந்தும் விடுவதுண்டு. ஆயரின் ஆற்றல் மிகுதி எனினும், அவர்க்கு அச்சந்தரும் செயல்களும் வியப்பூட்டும் செயல்களும் பல நிகழலாயின. அதனால், அவர் தம்மை அவற்றினின்றும் காப்பதற்காகத் தம்மிலும் பெருவலியுடைய சக்தியை வேண்டத் தலைப்பட்டனர். அதுவே படிப்படியாகத் தெய்வ வணக்கங்கள் ஆயரிடை நிலவுவதற்குக் காரணம் ஆயிற்று என்பர் ஆராய்ச்சியாளர்.

பொதுவாக, ஆயர் அனைவரும் மாயோனையே தம் குல தெய்வமாகப் போற்றி வாழும் இயல்பினர். எனினும் பல சிறுசிறு தெய்வ வணக்கங்களும் அவரிடையே நிலவின. அதனைப் பல இடங்களில் முல்லைக் கலியுள் நாம் காணலாம்.

ஏறு தழுவுவதற்குச் செல்லுமுன்னர், தம் பெரு வலியில் தளராத உறுதியுடையவரேனும், "தமக்கு வெற்றி தேடித் தருமாறு, நீர்த் துறைகளிலும், ஆலடிகளிலும், மராமரங்களிலும் உறையும் தெய்வங்களை ஆயரிளைஞர் வழிபட்டனர்" என்பர், இதன் ஆசிரியர். கடம்பு அமர்ந்த தெய்வத்தை வழிபடுவதும் ஆயர் வழக்கம் என்று நாம் அறிகின்றோம்.

அத் தெய்வங்களுக்கு மாலைகள் பல புனைந்து போற்றுவர். புதிய மாலைகளைச் சூட்டுங்காலத்தே கழற்றிய பழைய மாலைகளைப் புறத்தே விட்டெறிவ தில்லை. கடவுளர்க்கு அணிவித்த மாலை, பிறர் காலால் மிதிபடுவது கூடாது என்று, அந்நாளைய ஆயரும் எண்ணினர் போலும். எனவே, அவற்றை, அவ்வத் தெய்வங்கள் அமர்ந்திருந்த மரக் கிளைகளின் மேல் வீசி எறிவர். இவ்வாறு, நாள்தோறும் கழற்றி எறிந்த மலர் மாலைகள் பல அம் மரக் கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் (பாடல் : 6).

பல தெய்வங்களை வழிபட்டது போலவே, தம் குலத்திற்கு உரிய தெய்வமாகிய நீலவண்ண நெடியோனை யும் அவர்கள் போற்றினர். ஒலிக்கும் பாற்கடலில், பாம்பு

அணைமீது பள்ளிகொண்ட, நேமிப்படையேந்தியவனைப் பரவுதும் (பாடல் : 5) என வருவது காண்க.

மேலும், தெய்வ வழிபாட்டில் உளஞ்செலுத்தியது போன்றே, எதிர்பாராது நடக்குஞ் செயல்கள் எல்லாம் தெய்வத்தின் திருவுளக் கட்டளையால் நேர்வது என்றும் ஆயர் நம்பினர். ஒன்றைக் குறித்துப் பேச்சு எழுங்காலத்தே, எதிர்பாரா வகையில் ஆயர்களின் குழலோசை கேட்குமாயின், அக்காரியம் தவறாது பலிக்கும் என்பதன் அறிகுறி அது, என்று கருதினர். (பாடல் : 1)

சந்திர கிரஹணத்தைப் பற்றி முல்லைக் கலியுள் வரும் ஆயர் கொண்டிருந்த நம்பிக்கை என்ன தெரியுமா? 'பாம்பு வந்து பான்மதியை மறைக்கின்றது' என்பதாகும். கிரஹணம் நீங்குவது எவ்வாறு? 'திருமால் அப்பாம்பை ஓட்டி நிலவை விடுவிப்பான்.' (பாடல் : 4)

கொல்லேறுடன் ஆயரிளைஞன் போரிடுங்காலத்து, அவன் மார்பின் மாலையை அது கொம்பால் தூக்கி எறிய, அது அவன் காதலிபாற் சென்று விழ, அவள் தன் காதலன் அணிந்த மாலை எனும் ஆசையால், குழலில் சூட்டிக் கொண்டாள். எதிர்பாராது நிகழ்ந்த இதனைத் 'தெய்வ மால் கூட்டிற்று' என்று கருதினர், அவள் பெற்றோர். (பாடல் : 7)

தம் மன உறுதியைக் காட்டத் தெய்வத்தின் பெயரால் சூள் உரைப்பதும், அதனைக் கேட்டவர் அவன் உறுதியாகச் செய்வானென நம்புவதும், தெய்வ நம்பிக்கைக்கு மற்றோர் சான்று. (பாடல் : 8)

மேலும், ஆய மகளிர், 'என்றும் தேயாத பெரும் புகழ்த் தெய்வத்தையே போற்றிப் பரவினர்,' என்பது, 'தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்' (பாடல் : 3) என்பதால் வெளிப்படுகின்றது.

## ஆடலும் பாடலும்

சிலப்பதிகாரத்து ஆயர் சேரியிலே, கண்ணனைக் குறித்துக் குரவையாடியதாகப் படிக்கும் நாம், இளைஞரை யும் அவர் காதலியரையும் பாடற் பொருளாக வைத்து ஆயர்மகளிர் குரவையாடுவதையும், முடிவில் தாம் வாழும் நாட்டின் இறைவனான பாண்டியன் புகழை வாழ்த்தி அதனை முடிப்பதனையும், முல்லைக் கலியுள் காண் கின்றோம். இதனால், குரவைக் கூத்து இறைவனை வேண்டியும், களிப்பின் காரணமாகவும், பல்வேறு நிலைகளில் ஆயரால் ஆடப்பெற்று வந்தது என்று நாம் கருதலாம். 'காதலர் கைகோத்து ஆடுவதும் உண்டு,' என்று ஓரிடத்தில் கூறப்படுகின்றது.

கொல்லேறு தழுவும் விழாவின் முடிவில் 'ஏறும் வருந்தின, ஆயரும் புண் கூர்ந்தார்.' விழா அத்துடன் அன்றைக்கு நிறுத்தப்பட்டது. அதுவரை அந்தப் பயங்கர நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆயரின் மனம், அஃது நின்றதும், இன்பக் களியாட்டில் சென்றது. உடனே, 'பொது மகளிர் எல்லோரும், புணர் குறிக்கொண்டு, பொதுவரோடு, முல்லையம் தண்பொழில் சேர்ந்தார்' என்பர் ஆசிரியர் (பாடல் : 1). இதனால், ஆடவரும் மகளிரும் கூடிக் களித்தலும், பொழில் விளையாட்ட யர்தலும், ஆயரிடை வழக்கமாகத் திகழ்ந்தது எனலாம்.

மகளிர் தனித்து நறுமண மலர்சூடி ஊர் மன்றத்தே அகமகிழ்ந்து ஆடுவதும் உண்டு. அம்மன்றம் வேலியிட்டும், சுவர் தடுத்தும் மறைக்கப் பெறாது, பலரும் கண்டு களிக்கும் திறந்த வெளி அரங்கமாகத் திகழும். ஆண்கள் பலர் அதனைக் கண்டு களிப்பதும் உண்டு. இளைஞர் அவ்வாடலில் கலந்துள்ள கன்னியரின் அழகிலும் ஆட்டத்திலும் மதிமயங்கி அவரைக் காதலிப்பதும் உண்டு. (பாடல் : 2)

ஏறு தழுவி ஒருவன் வெற்றி பெற்றதும், ஆயர் ஊர் மன்றிற்கூடி, அம்மகிழ்ச்சியைப் பாடியாடிக் கொண்டாடுவர். அப்போது, காளையை அடக்கிய இளைஞன், அவன் செந்நிற ஆடை, அவன் ஆற்றல் முதலியவற்றுடன், அவனை மணக்கவிருக்கும் கன்னியின் எழில்நலம் முதலியவற்றையும் குறித்துப் பாடி, அனைவரும் குரவையாடி மகிழ்வர். (பாடல் : 2)

பலரும் கொல்லேறு தழுவித் தத்தம் காதலியரை மணக்கவும், தன் காதலன் மட்டும் அதற்குத் துணியாது வாளாவிருப்பதும் கண்டு வருந்திய ஆயர் மகள், தன் தோழியின் துணையோடு, மன்றத்தில் சென்று, கொல்லேறு அஞ்சுவானை ஆயமகள் என்றும் மணக்க மனங்கொள்ளாள்! எனவும், உயிர்க்கும் அஞ்சாது கொல்லேறு தழுவும் ஆண்மையாளனையே அவள் விரும்புவாள் எனவும், கொல்லேற்றுக் கோட்டிடை அஞ்சாது தழுவி வெற்றி கொள்வானுக்கு ஆயர் பரிசுப் பொருள் ஏதும் பெறாமலே தம் மகளிரைத் தருவர் என்றும்' தன் குல மரபினை நினைவுபடுத்தி, அவள்

காதலன் கேட்குமாறு பாடி, அவனை ஊக்கப்படுத்துவதும் உண்டு. (பாடல் : 3)

மணஞ் செய்து தருவதாகப் பெற்றோர் உரைத்ததும், அவனுக்கு அவள்பால் என்றுமில்லாத ஓர் உரிமை வந்து விடுகிறது. அவள் ஆயத்துத் தன்னோடொத்த மகளிரோடு ஆடி மகிழ, அது கண்டு அவன் பொறாது உருத்து நோக்குவதும் உண்டு. (பாடல் : 4)

கணவன்மார் கொல்லேறு தழுவிப் புண்பட்டால், அதனைப் போற்றி, எவ்வாறு ஆயர் மகளிர் அணைத்து மகிழ்வர் என்பது குறித்துக் கன்னிப் பெண்கள் குரவையும் கூறிப் பாடுவது அவர் உளத்தின் பெண்மையை விளக்குவதாக அமைந்துள்ளது. (பாடல் : 5)

இவ்வாறு, ஆடியும் பாடியும் களித்து வாழ்ந்தனர் ஆயர் எனின், அவர் உடல்நலம் மனநலம் பெற்றிருந்ததில் வியப்பேயில்லையன்றோ?

## அணிகளும் ஆடைகளும்

ஆயர்குடிக் கன்னியர் காளையர் இருவருமே தம் கூந்தலை நறு நெய்யிட்டு நன்கு பேணி வளர்த்து வந்தனர். வெண்மை, செம்மை, நீலம் முதலிய பலநிற மலர்களால் மாலைகளைக் கட்டித் தம் கூந்தலில் அணிவது அவர்கட்கு வழக்கமாயிருந்தது. பிடவம், காந்தள், காயா, கொன்றை முதலிய நறுமண மலர்களை அவர்கள் சூடி மகிழ்ந்தனர். அதனால், அவர் கூந்தல் எப்போதுமே நறுமணங் கமழ்ந்து விளங்கும் என்பர்.

மேலும், தலையிற் பூவணிவது போலவே, கழுத்திலும் இடையிலும் மலர் மாலைகளை அணிந்து கொள்வதும் விழாக் காலங்களில் அவர் இயல்பு.

பூக்களில், சூடும் பூ எவை, சூடாப் பூ எவை என்று ஆயரிடை சில வரையறைகளும் இருந்தன. சூடும் பூக்கள் மட்டுமே அவரால் அணியப்பெறும்.

காயாம்பூக் கண்ணி சூடிக் கருந்துவர் ஆடை யணிந்து, மேயும் நிரைமுன்னர்க் கோலூன்றி நின்று, குழலூதித் தம் நிரை காப்பவர் ஆயர். கருந்துவர் ஆடை போன்றே, செந்துவர் ஆடையும் ஆண்கள் அணிவர். கன்னியர் விரும்பியணிவது பூங்கரை தாழ்ந்த நீலச் சிற்றாடையே யாகும். *(பாடல் : 11)*

## நாட்டுப் பற்று

பழந்தமிழ் நாட்டு ஆயர்குடிப் பெருமக்கள் பெரிதும் நாட்டுப் பற்று உடையவராயிருந்தனர். அவர்கள் பாடும் குரவைப் பாடல்கள் அதனைக் காட்டுகின்றன. பல சமயங்களில் ஆடிப் பாடி மகிழும்போது, நாட்டையும் நாட்டின் தலைவனையும் வாழ்த்த அவர்கள் மறப்பதே இல்லை!

'எங்கோ வாழியர் இம்மலர்தலை உலகே' *(பாடல் : 3)*, 'வாடாச் சீர்த் தென்னவன்' *(பாடல் : 4)*, 'தென்னவற்கு ஒருமொழி கொள்ள இவ்வுலகு உடன்' *(பாடல் : 4)*, 'அமைவரல் அருவி ஆர்க்கும் இமையத்து உம்பரும் விளங்குக' *(பாடல் : 5)*, 'ஏற்றவர் புலம் கெடத் திறை கொண்டு, மாற்றாரைக் கடக்க எம் அறங்கெழு கோவே' *(பாடல் : 6)*, என்றெல்லாம் தம் நாடாளும் பாண்டிய

மன்னனை அவர் பாடுகின்றார். அங்கே ஒலிக்கும் தமிழ் நாட்டுப் பற்றினை ஓர்க.

## காதல் வாழ்வு

காதல் வாழ்விலே, இளைஞன் எந்நேரமும் தன் இச்சையைத் தீர்த்து இன்புறுதலையே முதன்மையாகக் கருதுகின்றான். அவன் காதலியோ, அதில் அவனோடு மகிழ்ந்தாலும், விரைவில் மணம் பெற வேண்டும் என்றே விரும்புகின்றாள். பெற்றோர் தம் தகுதிக்குத் தக்கவனா, போட்டியில் வெல்வானா என்பதிலேயே கருத்தாயிருக் கின்றனர். தோழியோ, காதலனையும் உற்சாகப்படுத்திக் காதலியையும் தேற்றித் திருமணத்திற்குத் திட்டமிடு கின்றாள். இவ்வாறாகக் காதலும் மணமும் திறன்படக் காட்டப்படுகின்றது இந்நூலுள்.

எத்துணைதான் காட்டிலே தனித்துக் கண்டு இளைஞன் வற்புறுத்தினாலும், அவனுக்குப் போக்குக் காட்டிவிட்டு மீளவே முயல்கின்ற பெண்மையின் இயல்பு மிகவும் அருமையாகப் பல இடங்களில் காட்டப் பட்டுள்ளது.

ஒருவனை விரும்பிக் காதலித்தவள், அவனையே மணந்து வாழ விரும்புவாள். எக்காரணங் கொண்டும் வேறொருவனை விரும்புவதில்லை. பெற்றோர் வற்புறுத்தி னாலும் அவள் இசைவதில்லை. 'அருநெறி ஆயர் மகளிர்க்கு இருமணம் கூடுதல் இல் இயல்பு அல்ல!' என்று (பாடல் : 4) ஆசிரியர், ஆயமகள் வாயிலாகக் கூறுவது மிகவும் சிறப்புடைய பெண்மை நெறியாகும். காதலித்த வனை விட்டே வேறொருவனை மணந்து கொள்ள

ஆயமகள் விரும்ப மாட்டாள் என்றால், கணவனுடன் விவாக விலக்கும், பின்னர் விதவைத் திருமணமும், ஆயரால் அந்நாளிலேயே ஏற்றுக் கொள்ளப்படாதது என்பது தெளிவு.

காதலன் நெறியிலே பொய்ம்மை ஏற்பட்டால், ஆயமகள் வருந்தி வருந்திக் களவில் பெற்ற ஒரு நாளின்பத்தையே எண்ணி வாழ்வாள். அதனாலும் பிறரை மணக்க விரும்பாள். (பாடல் : 13)

பெற்றோர் தம்மகட்குக் காதலனோடு உரையாடுதல் கூடாது; அவனைக் கண்டால் ஒதுங்கிவிடு; அவனோடு கூடிக் களவில் இன்புறுவது தகாது என்று கூறித் தடுப்பதும் உண்டு. (பாடல் : 12)

'மத்தம் பிணித்த கயிறுபோல் சுற்றிச் சுழலும் என்நெஞ்சு' (பாடல் : 10) என்று காதலன் கூறும் சொற்கள், காதல் வலைப்பட்டார் நெஞ்சம் நிற்கும் நிலையை நன்கு விளக்குகிறது. வேறு எப் பக்கம் அவன் நெஞ்சை இழுத்தாலும், அது அவள் நினைவிலேயே சுற்றிச் சுற்றிச் சுழலும்.

தன் காதலன் பல பெண்களைக் கண்டு காமுற்றுத் திரிதல் கூடும் என்ற ஐயம், ஒரு காதலிக்கு எழ, அவள், 'யாமுனியா ஏறுபோல் வைகல் பதின்மரைக் காமுற்றுச் செல்வாய்' எனக் குறை கூறுகின்றாள். இதனால், ஆயரிற் சிலர், பல பெண்களுடன் தொடர்பு கொள்வது உண்டெனவும், அதனை ஆய மகளிர் வெறுப்பதுவும் தெரிகின்றது. (பாடல் : 8)

*ஆயர் மகளிர் சொல்லாற்றல் மிக்கவர். 'சொல் லாட்டி நின்னொடு சொல்லாற்றுகிற்பார் யார்?' என்று இளைஞர் கூறும் அளவு சொன்னயமுடன் அவர் பேசுவர். (பாடல் : 8)*

*பெண்கள் காதல் ஒருபுறம், பெற்றோர் ஒருபுறமாக இருக்கக் கண்டு, ஆசையும் அச்சமும் மேலெழச் செய்வதறியாது விழிக்கும் நிலையைத் தோழி கூற்றாக,*

'ஆயர் மகளையும், காதலை, கைம்மிக;
ஞாயையும் அஞ்சுதி; ஆயின், அரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து'

*எனவும்,*

*ஆண்கள் அவ்வாறே மனந் துணிவின்றித் துயருறும் நிலையை,*

'போரேற்று அருந்தலை அஞ்சலும், ஆய்ச்சியர்
காரிகைத்தோள் காமுறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ?'

*எனவும், ஆசிரியர் கூறுவது இளமை மனத்தின் இயல்பினை நன்கு விளக்குவதாகும்.*

*தந்தை, தன் மகள் மணம் கைகூடாதது கண்டு, வருந்தும் நிலை மிகவும் உருக்கமாகவுள்ளது.*

*தன் மகளை ஏறுதழுவி மணக்க ஓரிளைஞனும் முன்வராதது கண்டு, பெரிதும் மனம் வாடி வருந்தி நிற்கும் தந்தையின் உருவம், பெற்றோரின் பாசத்தை நன்கு காட்டு வதாக உள்ளது.*

'பகல் இடக் கண்ணியன்; பைதல் குழலன்;
அவல் மிசைக் கோல் அசைத்த கையன்'

என அத் தந்தையை நமக்குக் காட்டுகிறார் ஆசிரியர்.

இதேபோலத் தன் பொறுப்பிலுள்ள கன்னியின் கூந்தலில், அவள் காதலன் தந்த மலரைக் கண்டு, தன் கடமையில் தான் தவறியதாகச் செவிலி உணர்வதும், தாய் ஏதும் பேசாமல் செல்வதும், மகள் மனங்குன்றிக் காட்டுள் சென்று ஒளிவதும், தாய், தகப்பனையும் பிறரையும் மணத்துக்கு இசையச் செய்வதும், எல்லாம் குடும்ப வாழ்விற்கு வேண்டிய பொறுப்பினையும் கடமையையும் நன்கு உணர்த்துவனவாகும். (பாடல் : 15)

## ஏறுகள்

ஏறுகளிலே பல நிறங்கள் உடையவற்றை முல்லைக் கலியுள் நாம் சந்திக்கலாம்; பட்டுப்பூச்சியின் கருஞ்சிவப்பு நிறம் கொண்ட ஏறு, கரிய நிறத்துடன் நெற்றியிலே வெள்ளைச் சுழி விளங்கும் காளை, வெண்ணிறத்தின் இடையிடையே செந்நிறப் புள்ளிகள் விளங்கும் காளை, புகர் ஏறு, இன்னும் பல நிறங்கள்.

கொல்லேற்றை நினைத்தாலே உளம் நடுங்கும். அத்துணைக் கொடுமை யுடையன அவை. அவற்றோடு போரிடும் இளைஞர், பெரும் ஆற்றலுடையவராயிருந்தா லன்றி, அவற்றின் கோட்டிடையே சிக்கி மாய்வதன்றி, வேறு வழியில்லை.

வாளகப் பட்டானை ஒவ்வான் எனப் பெயரும் வீர மறவனைப் போலத் தன் முன்னர் வீழ்ந்தான் மேல்

*செல்லாது திரும்பி விட்டதாம் ஓர் ஏறு! (பாடல் : 4). அது மட்டுமல்ல, பால்நிற வெள்ளை எருதின் மேற் பாய்ந்து அடக்கினவனைக் கண்டு, தன் இனப்பற்றால் இளங்காரி சென்று சினத்துடன் குத்திற்றாம் (பாடல் : 4). ஏறுகளும் இவ்வாறு இனப் பண்புடன் விளங்குகின்றன முல்லைக் கலியுள் என்றால், ஆயர்தம் ஒற்றுமைக்குக் கூறவா வேண்டும்?*

**ஏறு தழுவல்**

சுர்விரிந்தன்ன சுரிநெற்றிக் காரி
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் தோற்றம்காண்.
(பாடல் : 1)

எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு,
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர். (பாடல் : 2)

குருதிக் கோட்டோடு குடர் வலந்தன. (பாடல் : 3)

இரிபு எழுபு அதிர்பு அதிர்பு இகந்து உடன்பலர்நீங்க
அரிபு அரிபு இறுபு இறுபு குடர்சோரக் குத்தித், தன்
கோடு அழியக் கொண்டானை ஆட்டித் திரிபு உழக்கு
வாடில் வெகுளி எழில்ஏறு. (பாடல் : 4)

கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச்
சாக்குத்திக்
கொள்வார்ப் பெருகக் குரூஉச் செகில் காணிகா,
பாடேற்றவரைப் படக்குத்திச் செங்காரிக்
கோடெழுந்து ஆடும் கணமணி, காணிகா.

*இவ்வாறு, மேலும் பலவாக வரும் தொடர்கள் ஏறு தழுவலின் கொடுமையை நன்கு காட்டுவனவாகும்.*

*மேலும்,*

'நீறு எடுப்பவை நிலம் சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவை'

(பாடல் : 6)

*என்றெல்லாம் வருபவை, ஏறுகளின் கொடிய தன்மைகளை நன்கு விளக்கும்.*

*அக் கொடுமையாற் போலும்,*

'மடவரே நல்லாயர் மக்கள்; நெருநல்
அடலேற்று எருத்து இறுத்தார்க் கண்டு மற்று இன்றும்
உடலேறு கோள் சாற்றுவார்'

*என்று கருத்தும் இந்நூலுள் வந்துள்ளது.*

## இடைக்குலக் கன்னியர்

*தலையிலே தயிர்க் கூடை சுமந்து செல்லுகிறாள் ஒருத்தி. குடம் சுட்டு இனத்துள், 'போர் ஆரா ஏற்றின் பொருநாகு இளம்பாண்டில் தேர் ஊரச்' செம்மாந்தது போல், கம்பீரமாக நடந்து செல்கின்றாள். இவள் ஒயிலும் அழகும் கண்டு சிற்றூரும் பேரூரும் ஆரவாரித்து மகிழும். தாய் சூட்டிய கண்ணி, கூந்தலில் ஒருபுறம் சரிந்து தொங்க, இடை தளர, முற்றத் துறந்த முனிவர் நெஞ்சையும் புண்படுத்தும் பேரழகி அவள். சென்றவள் திரும்பினாள்; தலையிலே வெறும் பானை; இடுப்பிலே நெல் வட்டி; கை வீசி நடந்தாள். காதிற் குழைகள் ஆடின. குலுங்க*

நடந்தபோது இடை ஒடிந்துவிடும் போலிருந்தது. அதைக் கண்ட இளைஞர்கள் உளங்களெலாம் நிலை தளர்ந்தன.

அது மட்டுமல்ல. கண்டார் உளம் கவரும் கட்டழகி அவள் என்பதும் உறுதி. அந்த அழகு எவ்வளவு கொடுமையை உடையது தெரியுமா? கண்டால் இன்பந் தரும் அழகுதான். ஆனால், கண்டாரைப்பற்றி வருத்தும் அவள், அணங்கு எனக் கருதியும் அஞ்சினர் ஊர்ப் பெண்டிர். தம் கணவன்மார் அவள் பேரழகின் மயக்கத்தி னால் தம்மை மறந்து திரிவரோ என்ற போராட்டமே அவளைக் கண்டபோது, அவர்களுக்குப் பிறந்தது.

'தயிர் வேண்டாம், மாங்காய் நறுங்காடி கூட்டு வோம். அம்மா! நீ உன் கிளையோடு இவ்விடம் விட்டுப் போனாற் போதும்!' என்று அக் கன்னியைத் துரத்த முயன்றனர் சில பெண்கள். ஆனால், தம் செயலுக்குக் கணவன்மார் ஆதரவு கிடையாது என்பதும் அவர்கள் அறிவர். ஆகவே, கொழுநரை வெளியே போக விடாமல், வாயிலை அடைத்துக் காத்து நின்றனர். இவ்வாறு கண்ட வர் உயிரினைக் கூற்றுவன்போல், தன்பால் வாங்கும் பேரழகு கொண்டிருந்தாளாம் அக் கன்னி நல்லாள்.

இந்தப் பேரழகும், அதனால் எழுந்ததாகப் பேசப் படும் ஆரவாரங்களும், புலவர் கற்பனை என்றே நாம் கருதினாலுங்கூட, ஆயர்குலக் கன்னியர் வாளிப்பான கட்டுடலும், கவர்ச்சி மிக்க பேரெழிலும் உடையவரா யிருந்தனர் என்று நன்கு அறிகின்றோம்.

'தீம்பால் கறந்த கலம் மாற்றிக்,
கன்றெல்லாம் தாம்பில் பிணித்து மனைநிறீஇ

யாய்தந்த பூங்கரைநீலம் புடைதாழ,
மெய் அசைஇப்
பாங்கரும் முல்லையும் தாய பாட்டங்கால்'

செல்லும் அக் கன்னியரின் பேரழகிலே, ஆயரிளைஞர் சிக்குண்டதில் ஏதும் வியப்பதற்கில்லை.

### உரையாடுந் திறம்

கன்னியரும் காதலரும் உரையாடுவதும், தோழியர் தமக்குள் உரையாடுவதும், பிறவுமாக வரும் உரையாடற் பகுதிகள் பலவும், இக்கலியுள் மிகவும் சுவையுள்ளனவாக விளங்குகின்றன. அவற்றிடையே, பாசம் கொண்ட நெஞ்சத்தினர், அதனை வெளிக்காட்டாது, நாணி மறைத்துப் பேசும் சொல்லாற்றல் மிகவும் நயம் உடையது. எடுத்துக்காட்டாக ஒன்று மட்டும் காண்போம்.

**காளை:** நலமிக நந்திய நயவரு தடமென்தோள்
அலமரல் அமர் உண்கண் அந்நல்லாய்!
நீ உறீஇ
உலமரல் உயவு நோய்க்கு உய்யுமாறு
உரைத்துச் செல்.

**கன்னி:** பேரே முற்றார்போல முன்நின்று விலக்குவாய்
யார்? எல்லா! நின்னை அறிந்ததூஉம் இல்வழி!

**காளை:** தளரியால்! என்னறிதல் வேண்டின்,
பகை அஞ்சாப் புல்லினத்து ஆயர் மகனேன்,
மற்றுயான்;

**கன்னி:** ஒக்குமன்;

புல்லினத்து ஆயனைநீ, ஆயின், குடஞ்சுட்டு
நல்லினத்து ஆயர் எமர்;

**காளை:** எல்லா! நின்னொடு சொல்லின் ஏதமோ
இல்லைமன்;

**கன்னி:** ஏதம் அன்று; எல்லை வருவான் விடு;

**காளை:** விடேன்;

...............

நின்மொழி கொண்டு யானோ விடுவேன்,
மற்று என்மொழி கொண்டு என் நெஞ்சம்
ஏவல் செயின்.

**காளை:** நெஞ்சு ஏவல் செய்யாது என நின்றாய்க்கு,
எஞ்சிய

காதல்கொள் காமம் கலக்குற, ஏதிலார்
பொய்ம் மொழி தேறுவது என்?

உரையாடல் எவ்வளவு நயமுடன் செல்கிறது பாருங்கள்! நறுக்கென்று பாக்குத் தெறித்தாற் போலப் பதில் கூறும் அப் பாவையரின் சொல்லாற்றல்தான் என்னே! இது போல், ஒவ்வொரு பாட்டின்கண்ணும் வரும் நயங்களை நாம் காணும்போது, நம்மையறியாமலே 'நம்மினும் சிறந்தவர் நம் முன்னோர்' என்ற முடிவுக்கே வருகின்றோம்.

## குடும்பமும் காதலும்

தம் மகள் பிறனொருவனுடன் தம்மையுமறியாமல் உறவு கொண்டதை அறியின், பெற்றோர் மனநிலை

முதலில் அதிர்ச்சி கொள்ளத்தான் செய்கிறது. அதை நன்றாக விளக்குவது முல்லைக் கலியின் பதினைந்தாவது பாடல்.

வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே,
அன்னையும் அத்தனும் இல்லரா, யாய்நாண
அன்னைமுன் வீழ்ந்தன்று அப்பூ.

காதலன் கொணர்ந்து அளித்த பூவைக் கூந்தலுள் பெய்து முடித்திருந்தாள் கன்னி. மறுநாள் தாய் மகளுக்குக் கூந்தல் முடிக்க அமர்ந்தவள், புதுப்பூவைக் கண்டு திகைத்தாள். அவள் முன்னே வீழ்ந்த பூ, அவள் அணிவித்தது அன்று, வேறு ஆகும். வேறு அணியக் காரணம் என்ன? காதல் நிலையோ? என எண்ணினாள்.

எண்ணியவள் வசை பேசவோ, அடிக்கவோ செய்தனளா? எனில் இல்லை. அவள் உள்ளம் அப்படியே இடிந்து தகர்ந்து விட்டது. தன் மகள் தனக்கும் மறைத்து, நடந்த நடத்தை அவளை மிகுதியும் புண்படுத்திக் கவலைக்குள்ளாக்கிற்று. ஏதும் ஆரவாரம் செய்யாது எழுந்து, வெளியே அப்படியே மகளை விட்டுவிட்டுப் போய்விட்டாள். கவலை சுமந்த தாயின் நெஞ்சம் என்ன பாடுபட்டது என்பதை,

'அதனை, வினவலும் செய்யாள்; சினவலும் செய்யாள்
நெருப்புக் கைதொட்டவர்போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினாள்'

என்ற அடிகள் நன்கு காட்டும்.

நடந்ததும், தாயின் மன வேதனையும் கண்ட மகள் இடிந்து போய்விட்டாள். நாணமும் அச்சமும் அவள்

*உள்ளத்தைக் கவ்விக் கொண்டன. என்ன செய்தனளாம் தெரியுமா?*

'யானும் என்
சாந்துளர் கூழைமுடியா, நிலம் தாழ்ந்த
பூங்கரை நீலம் தழீஇத்; தளர்பு ஒல்கிப்
பாங்கரும் கானத்து ஒளித்தேன்'

*என்று கூறுகின்றாள். குடும்ப வாழ்வில் நிலவும் உண்மையான நிலையை வேறு எவ்விதம் விளக்கிக் காட்ட முடியும்?*

**உவமைகள்**

*சிறந்த பல உவமைகளை முல்லைக் கலியுள் நாம் கண்டு இன்புறலாம்:*

"களிபட்டான் நிலையே போல் தடவுபு துடுப்புஈன்று
ஞெலிபுடன் நிரைத்த நெகிழ் இதழ்க் கோடலும், 1
முல்லைமுகையும், முருந்தும் நிரைத்தன்ன
பல்லர், பெருமழைக் கண்ணர், மடம்சேர்ந்த
சொல்லர், சுடரும் கனங்குழைக் காதினர் 3
மீன்பூத்து அவிர்வரும் அந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளை"

*இவைபோல் பலவாக விளங்குவனவற்றைப் பாடல் களுள் ஆங்காங்கே கண்டு நயந்துய்த்தல் வேண்டுமேயன்றி வேறல்ல.*

### பாரதக் கதைகள்

*பாரதக் கதைகள் பல முல்லைக் கலியுள் சுட்டிப் பேசப்படுகின்றன. அவையெல்லாம் பாரதப் பயிற்சி ஆசிரியர்க்கு உண்டெனக் காட்டுகின்றன. ஆனால், இராமாயணக் கதையாக எதுவும் காணவில்லை. ஆயரிடை இராமாயண நம்பிக்கை அவ்வளவு தூரம் அந்நாளில் வேரூன்ற வில்லை போலும்!*

### முல்லைக் கலியும் ஆயர் மரபும்

*ஆயர் மரபுகள் குறித்து வரும் பல்வேறு தொடர் களும் சிறப்புடன் விளங்குபவை. பிற நயங்கள் எல்லாம் நூலினை ஊன்றிப் படித்துச் சிந்தித்து, அன்பர்கள் அறிந்து மகிழ வேண்டியவை. அதற்குத் தூண்டுதலாக ஏதோ சில மட்டுமே இங்கே காட்டப் பெற்றன.*

கோளாளர் என்ஒப்பார் இல்என நம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன், நமக்கு ஒருநாள்,
கேளாளன் ஆகாமை இல்லை; அவற் கண்டு
வேளாண்மை செய்தன கண்
முள்எயிற்று ஏரர் இவளைப் பெறும் இதோ
வெள்ளேற்று எருத்து அடக்குவான்
ஒள்ளிழை, வார்உறுகூந்தல் துயில்பெறும், வை
மருப்பின்
காரி கதன் அஞ்சான் கொள்பவன்,
ஈஈரி,
வெரூஉப்பிணை மான்நோக்கின் நல்லாள் பெறூஉம்,
இக், குரூஉக்கண் கொலையேறு கொள்வான்;
வரிக்குமை.

வேய்உறழ் மென்தோள் துயில்பெறும், வெந்துப்பின்
சேஎய் சினன் அஞ்சான் சார்பவன்;
என்றாங்கு அறைவனர் நல்லாரை ஆயர்
வாங்கெழில் நல்லாரும் மைந்தரும் மல்லல்ஊர்
ஆங்கண் அயர்வர் தழூஉ
பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்
கோடு குறி செய்த மார்பு.

*இவ்வாறு, ஒவ்வொன்றாக எடுத்து எடுத்து எழுதப் புகின், முன்னுரையே தனி நூலாகிவிடும். ஆதலின், படிப்பவர் பார்த்துப் பயன் பெறுக பிறவெல்லாம் எனக் கூறி, முல்லைக் கலியின் நயத்தை நூலுள் கண்டு திளைக்கு மாறு அனைவரையும் 'விருப்புடன் விருந்தயர்க' என அழைத்து, இம்முன்னுரையை இத்துடன் நிறுத்துகின்றேன்.*

**க. சொக்கலிங்கன்**

# 1

## ஏறும் வருந்தின

முல்லை நிலத்துச் சிற்றூர்; அவ்வூர்வாழ் ஆயர்க்கு அன்று ஒரு திருவிழா. கொல்லேறு தழுவும் விழா, அன்று அவ்வூரில் நடைபெற இருந்தது. ஏறு தழுவும் அவ்விழா, ஆயர்களின் நாகரிகத்தை விளக்கும் விழாவாகும். ஆக்களோடும், ஆனேறுகளோடும் வாழ வேண்டிய ஆயர், அவற்றை அடக்கி ஆளவல்ல ஆண்மையிற் சிறந்திருந்தனர். அவ்வாறு, அவ்வாண்மையிற் சிறந்திருந்த அவர்கள், தம் மகளிரை மணக்க வரும் மாப்பிள்ளைமார்களும், அவ்வாண்மை யுடையராதல் வேண்டும்; அவர்பால் அவ்வாண்மை இன்றேல், அவர்கள், அவைகளால் அழிவுறுவர்; அவர் அழிவுற்றால், தம் மகளிர் வாழ்வு மாண்பிழக்கும்; அவ்வவல நிலை தம் மகளிர்க்கு வராமை வேண்டும் என விரும்பினர்; அதனால், தம் மகளிர் மணத்திற்கு ஒரு கட்டுப்பாடு வகுத்தனர். மகள் பிறந்த அன்றே, தன் தொழுவினின்றும், ஓர் ஆனேற்றுக் கன்றைக் கட்டவிழ்த்துவிடுவர்; வீட்டில் மகள் வளர, அது காட்டில்

வளரும்; மகள் மணப் பருவம் வந்துற்றதும், காட்டில் கட்டுப்பாடற்று வளர்ந்த காளையைக் கொண்டு வருவர். ஊர்ப் பொதுவிடத்தே, பெரிய தொழு அமைத்து, அதனுள் அக் காளையை விடுத்து, "இவ்வானேற்றை அடக்கி ஆட்கொள்வான் எவனோ, அவனே, என் மகளை மணக்கத்தக்கவனாவன்!" எனப் பறையறைந்து அறிவிப்பர். அப் பெண்ணை மணக்க மனம் துடித்து நிற்கும் ஆயரிளைஞர், தொழுவுள் புகுந்து, காளையைக் கட்டிப் பிடிக்க முனைவர். புகுந்தாருள் சிலர் அதை அடக்க மாட்டாது அகல்வர்; சிலர் அக் காளையால் கொல்லப் படுவர்; இறுதியில் அதை அடக்கிய இளைஞனுக்கு மகளை மணம் செய்து தருவர். இவ்விழாவே ஏறு தழுவும் விழா; கொல்லேறு தழுவும் நல்ல விழா. ஆயர், அவ் விழாவைத் தனித்தனியே கொண்டாடாது, தம் ஆயர் பாடியில் மணப் பருவம் வந்துற்ற மகளிர் அனைவர்க்கும், மாப்பிள்ளைத் தேர்வை ஒருசேரக் கொள்வர். மகளிர்க்குரிய காளைகள் பலவும் தொழுவுள் விடப்படும்; ஊர்த் தலைவன் முன் வந்து, காளைகளையும், அக் காளை களை அடக்கினால் மணக்கலாம் ஆயர் மகளிரையும், என்று தனித்தனியே சுட்டிக்காட்டி விழாவைத் தொடங்கு வான். ஆயர் இளைஞர், தொழுவுள் புகுந்து, தாம் தாம் விரும்பும் பெண்ணுக்குரிய காளை எது என அறிந்து, அதனோடு போரிட்டு அடக்க முனைவர்; அடக்கி வெற்றி கண்ட இளைஞர்க்கு, மகளிரை மணம் செய்து மகிழ்வர்.

அத்தகைய ஒரு பெருவிழா, அவ்வூரில், அன்று நடைபெற இருந்தது. மகளிரைப் பெற்ற ஆயர், தம்மை அழகாக அணி செய்து கொண்டனர்; சிற்றூரை அடுத்த

முல்லைக் காட்டுள் புகுந்து, ஆங்குக் கார்காலத்து மழை பெற்றுப் புத்தம் புதிய அரும்பீன்று மலர்ந்திருந்த பிடவ மலரை, அதன் புறத்தே முள் நிறைந்திருப்பதையும் பொருட்படுத்தாது, பறித்துக் கொண்டனர். கள்ளுண்டு களித்தவன், நிலை கலங்கி ஆடுவதுபோல், காற்றில் ஆடி அலையும் காந்தட் செடியில், துடுப்பென அரும்பீன்று, கடைந்தெடுத்த தீயில் பிறந்த நெருப்பெனச் சிவந்து தோன்றும் மலர்களையும் பறித்துக் கொண்டனர். மீண்டு வருங்கால், தம் ஊர் எல்லையில், நீலமணியின் நிறத்தைக் காட்டி மலர்ந்திருக்கும் காயா மலரிலும் சிறிது பறித்துக் கொண்டனர். கொண்டு வந்த மலர்களை, வெண்ணிறப் பிடவம், செந்நிறக் காந்தள், நீலநிறக் காயா எனும் வரிசை மாறி மாறித் தோன்றி வனப்பு மிகுமாறு தொடுத்தனர்; தொடுத்த மாலைகளைத், தம் தலை மயிரின் முடியைச் சுற்றி அணிந்து மகிழ்ந்தனர்.

அணி செய்து கொண்ட ஆயர் அனைவரும், ஒன்று திரண்டு, ஊர்ப்பொதுவிடம் அடைந்து, ஆங்கே அமைந்துள்ள தொழுவைச் சூழ அமைந்திருந்த பரண் மீது ஏறி அமர்ந்தனர். அந்நிலையில் மகளிரைப் பெற்ற ஆயர், தம் மகளிரோடும், அம்மகளிர்க் கென விடப்பட்ட காளைகளோடும் வந்து, மகளிரை வரிசையாக ஒருபால் நிறுத்திவிட்டு, நன்கு சீவப்பெற்ற கோடுகளைக் கொண்ட அக் கொல்லேறுகளைத் தொழுவுள் விடுத்தனர். சிலர் தொழுவைச் சூழவந்து. முரசு முழங்கினாற் போலவும், இடி இடித்தாற் போலவும் பேரொலி எழுமாறு பறைகளைக் கொட்டினர். விழா இனிது முடிக எனக் கடவுளை வழிபட்டு எழுப்பிய புகையின் நறுமணமும்,

பறையொலி கேட்டும், எழும் புகை கண்டும் வெருவிய காளைகள், தொழுவுள், துள்ளிக் குதித்துத் திரிவதால் எழும் தூசுப் படலம் எங்கும் பரவின. அந்நிலையில், தம் குலமரபின் மாண்பினை மதித்துத், தம் காதலியர்க்குரிய காளைகளை அடக்கி, அவரை மணங்கொள்ள விரும்பிய இளைஞர்கள், தம் முயற்சியில் வெற்றி வாய்க்க வேண்டி, நீர்த் துறையிலும், ஆலடியிலும், மராமரத்திலும் கோயில் கொண்டிருக்கும் கடவுள்களை வணங்கி வழிபாடு ஆற்றிய பின்னர், ஆங்கு வந்து, அத் தொழுவுள் புகுந்தனர்.

விழாத் தொடங்கி விட்டது; தொழுவுள் புகுந்த ஆயர்குல இளைஞர்கள், தத்தம் காதலியர்க்கென விடப் பட்ட காளைகளைத் தேர்ந்து, எதிர்த்துப் போராடி அடக்கத் தலைப்பட்டனர். மரங்களில் உயர்ந்த கிளை களில் கூடு கட்டி வாழும் பட்டுப் புழுவின், கருமை கலந்த செம்மை நிறம் விளங்கும் காளை முன் சென்றான் ஓர் இளைஞன். கண்டாரைக் கலங்கச் செய்யும் கண் பார்வை கொண்ட அக் காளையை அஞ்சாது, அதன்மீது பாய்ந்து தாக்கினான். இளைஞன் அடக்க அடங்கிவிட, அக் காளை ஆற்றலிற் குறைந்த தன்று. தன்மீது பாய்ந்த இளைஞனைத் தன் கோடுகளால், உயிரிழந்து போமாறு குத்தி வீழ்த்தி, வீழ்ந்த அவன் உடலைக் கோடுகளால் தூக்கி அலைக் கழித்தது. தன் மனைவி துரோபதையின் தூய கூந்தலைக் கையாற் பற்றி இழுத்த, பழியஞ்சாத் துச்சாதனனைப் போரிட்டு வென்று, நெஞ்சைப் பிளந்து, அவன் உடலைத் தூக்கிக்கொண்டு, அமர்க்களம் முழுதும் திரிந்து, தன் வஞ்சினத்தை நிலைநாட்டிய வீமசேனன் போலக் காட்சி அளித்த அக் காளையைக் கண்டு, விழாக் காண வந்திருந்தோர் கலங்கினர்.

மலைப் பிளப்புக்களில் மலர்ந்த மணம் மிக்க மலர்களாலான அழகிய மாலை அணிந்து வந்த ஓர் ஆயரிளைஞன், நெற்றியில் வெண்திங்களை விரித்து வைத்தாற்போல், வெள்ளைச் சுழி விளங்கும் கரிய காளையை எதிர்த்தான். எதிர்த்த இளைஞனைக் கீழே வீழ்த்தித், தன் கோடுகளைப் பாய்ச்சி, அவன் குடரைச் சரித்துக் குலைத்தது அக் காளை. உலக உயிர்களெல்லாம் ஒருசேர அழியும் ஊழி முடிவில், பசிய நிறம் வாய்ந்த பார்வதியைத் தன் ஒரு பாதியாகக் கொண்ட இறைவன், எருமை ஏறித் திரியும் கூற்றுவன் நெஞ்சைப் பிளந்து, அவன் குடரைக் கூளிக் கூட்டத்திற்கு இடுவான்போல் திரிந்த அக் கொல்லேற்றின் கொடுஞ்செயல் கண்டு, ஆங்கு வந்திருந்தார் குலை நடுங்கினர்.

இடையிடையே, நுண்ணிய செந்நிறப் புள்ளிகள் பொருந்திய வெண்ணிறக் காளை, ஆங்கு எழுந்த பறையொலி கேட்டும், விழாக் காண வந்து கூடிய பெருங் கூட்டத்தைக் கண்டும் வெகுண்டு நின்றது. அதன் கடுஞ்சினம் கண்டும் அஞ்சாது, அதன்மீது பாய்ந்து தாக்கினான் ஓர் ஆயன். வந்து தாக்கியவனை, அக் காளை, கீழே வீழ்த்தித் தன் கூரிய கோட்டால் அலைக்கழித்தது. தன் தந்தை துரோணாசாரியனைக் கொன்ற திட்டத் துய்மனைக் கொன்று பழி வாங்கக் கருதிப் போதற்கரிய இராக்காலம் எனவும் பாராது, கண்ணொளி பரவாக் காரிருளில் சென்று, தன் தோளாண்மையால் வென்று, அவன் தலையைத் திருகி எறிந்த அசுவத்தாமாப்போல், அவ்வாயன் உடலை அலைக்கழிக்கும் அக் காளையைக் கண்டு, ஆங்குக் கூடியிருந்த அனைவருமே அஞ்சினர்.

ஏறு தழுவும் விழா, இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆயரும், ஆயர் மகளிரும், அவ்விழாவைக் கண்டு, களித்தும், கலங்கியும் ஆங்கிருந்தனர். அவ்வாறு பார்த்திருந்தாரிடையே, அவ்வூர்த் தலைவன் மகளும், அவள் தோழியும் இருந்தனர்; ஆயர்கோன் மகள், தன் தந்தையை யொத்த தலைமைப் பாடுடைய பிறிதோர் ஆயர்கோன் மகன் மீது காதல் கொண்டிருந்தாள். ஆனால், அவள் காதலை அவள் பெற்றோர் அறியார்; அவள் தோழி ஒருத்திக்கு மட்டுமே அது தெரியும். தோழி அருகில் அமர்ந்து, அவ்விழாவைக் கண்டிருந்த அவள், குலமரபை யொட்டித், தன் பெற்றோர் தன் காதலனையும் ஏறுதழுவப் பணிக்க, தன்மீது கொண்ட காதலால், ஏறு தழுவ முனையும் அவனுக்கு, ஈண்டு ஏறு தழுவிய இளைஞர்க்கு உண்டானது போன்ற கேடு வாய்த்து விடுமோ என எண்ணிக் கலங்கினாள். அவள் உள்ளக் கலக்கத்தைக் கண்ட தோழி, “பெண்ணே! நம் காதலனுக்கு எவ்வித் இடையூறும் நேராது. ஆற்றல் மிக்க காளைகளையும் அடக்கி ஆள வல்லவன் அவன்!” எனக் கூறி, அவளைத் தேற்றினாள். அவள் அது கூறுங்கால், ஆங்குக் கூடியிருந்த ஆயர், தம் குழலில் மங்கலப் பண் ஒன்றை எழுப்பினர்; அக் குழலோசை கேட்ட தோழி, அதை அப் பெண்ணிற்குச் சுட்டிக்காட்டி, “தோழி! மார்பில் மாலை அணிந்து வந்து, நம் மனத்தை மருட்டும் நம் காதலன், நம்மை மணத்தல் உறுதி என நான் கூற, ஆயர் குழலோசை அதை உறுதி செய்யும் நன்னிமித்தமாய் அமைந்தது. ஆகவே, நீ சிறிதும் கவலாதே!” என்று கூறி, அவளைத் தேற்றினாள்.

அவளைத் தேற்றிய தோழி, இளைஞன், மணத்திற் குரிய முயற்சி மேற்கொள்ளாது, இவ்வாறே மறைந்து மறைந்து வந்து செல்வானாயின், இவள் வருத்தம் மிகும்; ஆகவே, அவனைக் கண்டு, வலிய வந்து, ஏறு தழுவலை விரைவில் மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ள விரும்பி னாள். ஆயர்குல இளைஞர்களிடையே அமர்ந்து ஏறு தழுவலை இமையாது பார்த்திருக்கும் அவனைக் கண்டு, ஆங்குச் சென்று, அவனைத் தனியாக அழைத்து, "அன்ப! இன்று ஏறு தழுவும் இவ்விளைஞர்களைப்போல், நீயும் ஏறு தழுவி, இவளை மணந்து கொள்வாயாக! ஏறுதழுவற்போரில் இன்னல் விளையுமோ என எண்ணி அஞ்சாதே! இன்று நிகழும் நன்னிமித்தங்கள், நீ தழுவப் புகும் காளை, ஆண் யானை போலும் ஆற்றல் வாய்ந்ததாயினும், அதை நீ அடக்கி ஆள்வை என்பதை உறுதி செய்கின்றன. மேலும் இவ்வாயர் மகள் தோள், ஏனையோர் தோளினும், வெற்றியளிக்க வல்ல நல்ல வாய்ப்பு வாய்ந்ததாகும்; ஆகவே, அஞ்சாது வந்து, ஏறு தழுவி, இவளை மணந்து மகிழ்வாயாக!" என வேண்டிக் கொண்டாள்.

அவ்வாறு வேண்டிக் கொண்ட பின்னர், அப் பெண்ணின் தந்தை யார், அப் பெண்ணை மணப்பதற்கு, அவன் அடக்க வேண்டிய ஏறு எது என்பனவற்றை அவனுக்கு அறிவிக்க விரும்பிய தோழி, "அன்ப! அதோ, பன்மலர்க் கண்ணி சூடி, மகள் இன்னமும் மணமின்றிக் கிடக்கின்றனளே என்ற கவலை மனத்தை அழுத்துவதால், ஊதும் குழலில் துன்ப இசை எழுப்பித் தோள் மீது வைத்த கோல் மீது கையூன்று நிற்கும் அவனே இவள் தந்தை; அவன் அண்மையில் நிற்கும் கொல்லேறே, நீ, இவள்

பொருட்டு, அடக்க வேண்டிய ஏறு. அன்ப! இக் காளையை அடக்கி ஆள வல்லார்க்கே, கறுத்துத் திரண்ட கூந்தல் உடைய இவளை மணக்கத் தருவேம், ஆதலின், இக் கொல்லேற்றைத் தழுவ, இன்னே முயல்க!" என அவனை ஊக்கிவிட்டு, மீண்டு வந்து, அப் பெண்ணோடு சேர்ந்து கொண்டாள்.

இளைஞனை ஊக்கிய பின்னர், அப் பெண்ணைப் பார்த்துப் "பெண்ணே! நம் காதலனைக் கண்டு, நம் கவலையைக் கூறினேன்; கூறிக்கொண்டிருக்கும் பொழுதே, அவன் கண்கள் தரும் குறிப்பைக் கண்டேன்; அது, அவன் உறுதியை-மணந்து மனையறம் மேற் கொள்ளத் துடிக்கும் மனக் குறிப்பை உணர்த்தக் கண்டேன்; நாம் மேய்க்கக் கொண்டு செல்லும் நம் பசுக் கூட்டத்திற்கிடையே நின்று, 'ஏறு தழுவி வீறு கொள்ள வல்லார், எனக்கு நிகரானவர் எவரும் இல்லை!' எனத் தன் ஆண்மைச் சிறப்பை அறிவிக்கும் அவன், என்றேனும் ஒரு நாள், ஏறு தழுவி, நம்மைத் தனக்கு உரியளாக்கிக் கொள்வன்; இஃது உறுதி!" என்றெல்லாம் கூறி, அவள் ஐயத்தையும், அச்சத்தையும் அகற்றினாள்.

அவள் அது கூறிக்கொண்டிருக்குங்கால், ஏறுதழுவல் விழா முடிவுற்றது; விழாத் தலைவன், "ஏறுகளும் இளைத்து விட்டன; ஏறு தழுவ வந்த இளைஞர்களும் புண்பெற்று இளைத்தனர். ஆகவே, இன்றைய விழா, இந்த அளவோடு முடிக!" என்று அறிவித்தான். அது கேட்டு, ஆங்குக் கூடியிருந்த ஆயர் மகளிர், தத்தம் காதலரோடு களித்து மகிழக் காடு நோக்கிப் போயினர்; தோழி, அதை அவளுக்குக் காட்டிக், காட்டுள் புகுந்து விளையாட, அவளையும் அழைத்துக் கொண்டு ஆங்குச் சென்றாள்.

தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற்கு அரும்பு ஈன்று
முளிமுதல் பொதுளிய முட்புறப் பிடவமும்,
களிபட்டான் நிலையேபோல் தடவுபு துடுப்பு ஈன்று
ஞெலிபுடன் நிரைத்த ஞெகிழ்இதழ்க் கோடலும்,
மணிபுரை உருவின காயாவும், பிறவும்
அணிகொள மலைந்த கண்ணியர், தொகுபுஉடன்
மாறெதிர்கொண்ட தம்மைந்து உடன்நிறுமார்,
சீறரும் முன்பினோன் கணிச்சிபோல் கோடுசீஇ
ஏறு தொழூஉப் புகுத்தனர் இயைபுடன் ஒருங்கு
அவ்வழி, முழக்கென, இடியென, முன்சமத்து ஆர்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவருபு ஈண்டி,
நறையொடு துகள்எழ; நல்லவர் அணி நிற்பத்
துறையும், ஆலமும், தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ;
மேற்பாட்டு உலண்டின் நிறன்ஒக்கும் புன்குருக்கண்
நோக்கு அஞ்சான், பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக்கொண்டு குலைப்பதன் தோற்றம்காண்;
அம்சீர் அசைஇயல் கூந்தல் கைநீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண் தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்;
சுடர்விரிந்தன்ன சுரிநெற்றிக்காரி,
விடர்இயம் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் தோற்றம்காண்;
படர்அணி அந்திப் பசுங்கண் கடவுள்
இடரிய ஏற்றெருமை நெஞ்சு இடந்திட்டுக்
குடர்கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்;
செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதன் அஞ்சான் பாய்ந்த பொதுவனைச்சாடி

நுதிநுனைகோட்டால் குலைப்பதன் தோற்றம்காண்;
ஆரிருள் என்னான், அருங்கங்குல் வந்து, தன்
தாளில் கடந்து அட்டுத் தந்தையைக் கொன்றானைத்,
தோளில் திருகுவான் போன்ம்.
எனவாங்கு,
அணிமாலைக் கேள்வன் தரூஉமா ஆயர்
மணிமாலை ஊதும் குழல்.
கடாஅக் களிற்றினும் கண்ணஞ்சா ஏற்றை
விடாஅது நீ கொள்குவை; ஆயின், படாஅகை
ஈன்றன ஆயமகள் தோள்;
பகல் இடக் கண்ணியன்; பைதல் குழலன்,
சுவல் மிசைக்கோல் அசைத்த கையன்; அயலது
கொல்லேறு சாடஇருந்தார்க்கு எம் பல்லிரும்
கூந்தல் அணை கொடுப்பேம் யாம்.
கோளாளர் என்ஒப்பார்இல் என நம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன், நமக்கு ஒருநாள்,
கேளாளன் ஆகாமை இல்லை; அவற்கண்டு
வேளாண்மை செய்தனகண்;
ஆங்கு, ஏறும்வருந்தின, ஆயரும் புண்கூர்ந்தார்;
நாறிரும் கூந்தல் பொதுமகளிர் எல்லாரும்
முல்லையம் தண்பொழில் புக்கார், பொதுவரோடு
எல்லாம் புணர்குறிக் கொண்டு."

*தலைவிக்குத் தோழி ஏறு தழுவுகின்றமை காட்டி, அவள் அது கண்டு அஞ்ச, அவளுக்கு, ஆண்டுப் பெற்ற நன்னிமித்தம் கூறித் தெளிவித்துத் தலைவனை, ஆயர் கூறுவன கூறி, ஏறு தழுவுமாறு ஊக்கி, மறுவலும் தலைவியை அடைந்து, தலைவன் ஏறு தழுவி நம்மை வரைவன் என்று ஆற்றுவித்தது.*

1. தளி – மழை; புலம் – முல்லைநிலம்; தலைப்பெயல் – முதல் மழை; 2. முளி – கோடைகாலத்தில் உலர்ந்த கிளை; பொதுளிய – தழைத்த; முட்புற – புறத்தே முள்ளை உடைய; 3. களிபட்டான் – கள்ளுண்டு களித்தவன்; தடவுபு – அசைந்து ; துடுப்பு துடுப்புப் போலும் அரும்பு; 4. ஞெலிபு – தீயைக் கடைந்து; ஞெகிழ் – அலர்ந்த; கோடல் – செங்காந்தள். 5. மணி – நீலமணி; புரை – ஒக்கும்; 6. தொகுபு – கூடி; உடன்தொகுபுகு என மாற்றுக. 7. மைந்து – வலிமை; நிறுமார் – நிலைநாட்டுதற் பொருட்டு; 8. முன்பினோன் – வலியினை உடைய சிவன், கணிச்சி – குந்தாலிப் படை; சீஇ – சீவப் பெற்று; 10 சமம் – நிலம்; 11 வருபு வருபு – வந்து வந்து; ஈண்டி – கூடி; 12. நறை – மணப்புகை; நல்லவர் – ஆயர்மளிர்; 14. முறையுளி – முறையாக; பராஅய் – வணங்கி; 15. மேற்பாட்டு – கொம்பின் உயர்ந்த இடம்; உலண்டு – பட்டுப்புழு; புன்குருக்கண் – புல்லிய நிறத்தைக் கொண்ட; 18. அம்சீர் – அழகும் சிறப்பும் பொருந்திய; அசைஇயல் – மெல்லிய சாயல் அமைந்த துரோபதை; 19. நேரார் – பகைவர்; 21. சுடர் – திங்கள்; சுரி – சுழி; காரி – கரிய எருது; 22. விடரிஅம்கண்ணி – மலைப் பிளப்பில் மலர்ந்த மலர்கொண்டு தொடுத்த அழகிய தலைமாலை; 24. படர் அணி —துன்பங்கள் சூழ்ந்த; அந்தி – ஊழிக்காலம்; பசுங்கண் கடவுள் – பசிய நிறம் வாய்ந்த பார்வதியைப் பாதியில் கொண்ட சிவன், 25. இடரிய – துன்பத்தைத் தந்த; எருமை – எருமைக்கு உரிய இயமன்; 28. கதன் – சினம்; 31. தாளில் – தன் ஆண்மையால்; கடந்து அட்டு – வென்று கொன்று; 35. மணிமாலை – அழகிய மாலைக் காலம்; குழல் கேள்வனைத் தரும் என்க. 36. கண் – தறுகண்மை; 37. ஆயின் – நிமித்தங்களை ஆராய்ந்து நோக்கினால்; ஆயின் கொள்குவை என மாற்றுக; படாஅகை – வெற்றிக்கொடி; 38. பகலிட – பகற்காலத்தே மலர்ந்த மலர் கொண்டு தொடுத்த; பைதல் – துன்பம்; 40. சுவல் – தோள்; 41. பல்லிருங் கூந்தல் – அடர்ந்த கரிய கூந்தலை உடைய இவளை; 42. அணை – அணைய; 43 கோளாளன் – அடக்கிப் பிடிக்க வல்லவன்; நம்மானுள் – நம்மந்தையுள்; 45. கேளாளன் – உறவினன்.

# 2

# மடவரே நல்லாயர்

ஆயர் குலத்து வந்தவன் அவ்விளைஞன்; ஆண்மை மிக்கவன்; கல்லினும் வலியன அவன் தோள்கள்; கரு நீல மலர்போல் கறுத்துத் திரண்டிருந்தது அவன் மேனி; அத்தகையவன். ஒரு நாள், செந்நிற ஆடை உடுத்துப் பன்னிற மலர் கொண்டு தொகுத்த மாலை அணிந்து, தன் ஆருயிர் நண்பனையும் உடனழைத்துக் கொண்டு, தன் ஆயர்பாடியை யடுத்திருந்த ஓர் ஆயர்பாடி நோக்கிச் சென்றான். ஆங்கடைந்த இருவரும், அப்பாடியின் இடையே இருந்த ஊர் மன்றத்தில், அவ்வூர் இடைக்குல மகளிர் ஒன்று கூடி ஆடி மகிழ்வதைக் கண்டனர்; கார் காலத்து மழை, காலத்தில் பெய்தமையால், காட்டில் தழைத்து வளர்ந்த நறுமணம் நாறும் பிடவம், கொடி நிறை மலர்ந்து மணக்கும் முல்லை, வனப்பு மிக்க வண்ணங்களால் நிறைந்த காந்தள், கொத்துக் கொத்தாக மலரும் மாண்பு மிக்க கொன்றை ஆகிய மலர்களோடு, வேறு சில மலர்களையும் பறித்துக் கொணர்ந்து, இடையில்

உடுக்கும் ஆடைபோலவும், மார்பில் ஆடும் மாலை போலவும், கழுத்தில் அணியும் அணிபோலவும் தொகுத்து அணிந்து, அகம் மகிழ்ந்து ஆடிக் கொண்டிருந்தனர் அம் மகளிர்.

ஆயர் மகளிரையும், அவர் ஆடல் பாடலையும், இளைஞர்கள் இருவரும் இமை கொட்டாமல் நோக்கி இன்புற்றனர். அந்நிலையில், இளைஞன், அருகிருக்கும் நண்பனை அழைத்து, அம்மகளிர் நடுவே, ஆங்குள்ளார் அனைவரிலும் பேரழகுடையளாய பெண்ணொருத்தியைச் சுட்டிக்காட்டி, "நண்ப! தோழியர் சூழ்ந்து நிற்க, அதோ தோன்றும் அவள், என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டாள்; உடலோடு என் உள்ளத்துட் குடி புகுந்து அதைத் தனதாக்கிக் கொண்டாள். நண்ப! என் உயிரோடு இரண்டறக் கலந்து போன அவள் யார்? அவள் பெயர் யாது? அவள் பிறந்த ஊர் எது? அவளைப் பெற்றெடுத்த பெரியோர் யாவர்?" என வினாமேல் வினா வாய் வினவி, அவனளிக்கும் விடையினை எதிர்நோக்கி நின்றான்.

பாங்கன் அவ்வாயர்பாடியை முன்னரே அறிவான்; அவ்வூரில் வாழ்வார் ஒவ்வொருவரையும் அவன் அறிந்திருந்தான்; அதனால், நண்பன் அறியத் துடிப்பதை, அப்பொழுதே அறிவிக்கும் நிலையில் இருந்த அவன், "நண்ப! நின் உள்ளம் கவர்ந்த அக் கன்னி, இவ்வாயர்பாடித் தலைவன் ஈன்ற அருமை மகள்; அவள் பண்பும் பேரழகும் அறிந்து அவளை மணக்க முன் வருவார் பலர்; ஆனால், அவருள் ஒருவராலும் அவளை

மணக்க முடியவில்லை. நண்ப! அவள் வீட்டில் ஒரு கொல்லேறு வளருகிறது; சண்டை என்றால் சளைக்காது அது; அக் காளையைக் கட்டிப் பிடித்து அடக்க வல்ல ஆற்றல் உடையவர்க்கே, தன் மகளை மணம் செய்து கொடுப்பேன் என அவள் தந்தை கூறிவருகிறான். அதை இவ்வூரார் அறிவர்; அவ்வேற்றின் ஆற்றலும், அவள் தந்தை உறுதிப்பாடும் கண்டு அஞ்சி, அவள்பால் கொண்ட ஆசையை அடக்கி வாழ்கின்றனர், அவளை மணக்க விரும்பும் இவ்வூர் இளைஞர்கள்!" என, அவள் குறித்துத் தான் அறிந்த செய்திகளை அவன் அறியக் கூறினான்.

மங்கையை மணக்கும் மார்க்கம் இதுவென அறிந்து கொண்ட இளைஞன், அக்கணமே, "நண்ப! ஏற்றினை அடக்கி, அவளை ஏற்றுக் கொள்ள இன்றே துணிந்து விட்டேன்; என் துணிவை அவள் பெற்றோர்க்கு இப்பொழுதே அறிவித்து வருக!" எனக் கூறி விடுத்தான். அவனும் அவ்வாறே சென்று அவர்க்கு அறிவித்தான். காளையை அடக்கிக் கன்னியை மணம் செய்துகொண்டு போவானை அன்று வரை காணாது கலங்கியிருந்த பெண்ணைப் பெற்றோரும், பெண்ணுடன் பிறந்தோரும், அவன் கூறியன கேட்டு அகம் மகிழ்ந்தனர்; அந் நல்வாய்ப்பை நழுவ விட அவர்கள் விரும்பவில்லை. அதனால், காலத்தை வீணாக்காது, மகள் மணம் குறித்து நிகழ்த்தும் கொல்லேறு தழுவும் நல்விழாவை அன்றே கொண்டாட முனைந்தனர்; தம் கருத்தைப் பறையறைந்து ஊரார்க்கு அறிவித்தனர். அது கேட்ட ஊரார், ஊர்த் தலைவன் மகளுக்கு மணம் நிகழும் அன்றே, தம் மகளிர்க்கும் மணம் முடிக்க விரும்பினர்.

ஊர் நடுவே பரந்து கிடந்த பெரிய வெளியில் ஒரு தொழுவும், தொழுவைச் சூழ உயர்ந்த பரணும் அமைத்தனர்; மணப் பருவம் எய்திய தம் மகளிரோடும், அம் மகளிர்க்கு என விடுத்த காளைகளோடும், ஆயர் மன்றம் புகுந்தனர்; ஆயர்குல முதியோர், மயில் நிகர் மகளிரை மணக்க விரும்பும் காளையர், அம்மகளிரையும், மங்கையர்தம்மை மணக்க முன் வரும் இளைஞர்களையும், ஏறு தழுவி அடக்கும் அவர் ஆற்றலையும் நன்றாகக் காணுதற்பொருட்டு, மகளிர்க்குப் பரணில் உயர்ந்த இடம் அளிக்குமாறு பணித்தனர்; அவர்களும் அவ்வாறே ஏறி அமர்ந்தனர். ஆயரும், ஆயர்பாடித் தலைவனும், பரணில் தத்தமக்குரிய இடத்தில் வந்து அமர்ந்தனர்.

கொல்லேறுகள் தொழுவினுள் கொண்டு விடப் பெற்றன. காளைகளை அடக்கிக் கடிமணம் கொள்ளவந்த ஆயர்குல இளைஞர், தத்தம் காதலியர்க்குரிய காளை எனத் தேர்ந்து, அவற்றின் எதிர் சென்று அடக்க முனைந்தனர். புதிய அத்தொழுவையும், அதைச் சூழக் கூடியிருக்கும் ஆயர் பெருங் கூட்டத்தையும் கண்டும், விழாக் குறித்து ஆங்கு எழும் பறையொலி கேட்டும், சினம் கொண்ட காளைகள், இளைஞர்கள் தம்மை அணுகிவரக் காணவே, கடுங்கோபம் கொண்டு, இடியென ஒலித்து, அவர்மீது பாயக் காற்றெனக் கடுக ஓடின.

காளைகளுக்கும் காளைநிகர் காதலர்க்கு மிடையே போர் தொடங்கி விட்டது; போர் நிகழ்ச்சியால் எழுந்த புழுதி, மன்றம் முழுதும் பரந்தது; ஏறுகளின் கோடுகளுக்கு அஞ்சாது, இளைஞர்கள் தம் மார்புகளைக் காட்டி நின்றனர்; கொம்புகள் அவர் மார்பில் ஆழப் பதியுமாறு

அவர் மீது பாய்ந்தன; அதனால், இளைஞர்களுள் ஆற்றல் குறைந்தவர் தளர்ந்து தடுமாறினர்.

ஆனால், ஆயர்பாடித் தலைவன் மகளைக் காதலித்து, அவளுக்குரிய காளையைக் கட்டிப் பிடிக்க முன்வந்த அவ்வயலூர் இளைஞன், சிறிதும் தளர்ந்தா னல்லன்; அவன் அவள் மீது கொண்ட காதல் வெறி அவன் ஊக்கத்திற்கு உரம் ஊட்டிற்று; காளையின் கழுத்தும், கருத்துத் திரண்ட தன் கழுத்தும் ஒரு சேரப் பொருந்துமாறு, காளையின் கழுத்தை இறுகப் பிடித்து அதன் ஆற்றலை ஒடுக்கினான்; நெருக்கிப் பிடித்த அவன் பிடியால் நிலை கலங்கிற்று அக் காளை; உடனே, அதன் திமில்மீது பாய்ந்து, கீழே வீழ்த்தி, அவ் வெற்றிக் களிப்பு விளங்கத் தலை நிமிர்ந்து நின்றான்.

ஆற்றல் வாய்ந்தன; எவராலும் அடக்க முடியாதன எனப் பெருமை பெற்ற தம் காளைகள் அடங்கி ஆற்றல் குறைந்தமை கண்டு, ஆயர் தொடக்கத்தில் சிறிதே கலங்கினர்; ஆனால், காளைகளை அடக்கி வென்றோர், தம் மகளிரை மணக்க வரும் மணவாளராகவே, சினம் மாறிச் சிந்தை மகிழ்ந்தனர்; ஆயர்களின் இவ்வுள்ளத் துடிப்பினை, அவர் முகக் குறிப்பால், கண்ட முதியோர் சிலர், ஏறு தழுவலின் கொடுமை இது என்பதைப் பண்டே அறிந்திருந்தும், மீண்டும், அவ்வேறுதழுவல் விழாவெடுத்து, அதன் முடிவு கண்டு வருந்தும் இவ்வாயர், அறவே அறிவற்றுப் போயினர் போலும் என, அவர் அறியாமை கண்டு எள்ளி நகைக்கத் தலைப்பட்டனர். நிற்க.

ஏறு தழுவும் நிகழ்ச்சி ஒருவாறு முடிந்தது. ஊர் மன்றத்தில் ஆயர் மகளிர் பலரும் ஒன்று கூடித், தம் ஊர்த்

தலைவன் மகளுக்கு மணம் எனும் செய்தி கேட்டு மகிழ்ந்தனர்; மகிழ்ச்சி மிகுதியால் குரவைக் கூத்தாடத் தொடங்கினர்; அவர் ஆடும் அக்கூத்திற்குக், காளையை அடக்கிய இளைஞன், அவன் தலையிற் சூடிய கண்ணி, தோளின் திண்மை, அதன் ஆற்றல், பெற்ற வெற்றிச் சிறப்பு, கரிய மேனியோடும், கட்டிய செந்துவர் ஆடையோடும் காளையின் கழுத்தைக் கட்டிப் பிடித்த காட்சி, அவனுக்கு மணமாலை சூட்டப் போகும் தம்மூர்த் தலைவன் மகள், முறுவல் தோன்ற மலர்ந்திருக்கும் அவள் முகம், மெத்தனப் பருத்த தோள் ஆகியன பாடற் பொருளாய் அமைந்தன.

இவ்வாறு, அவனையும் அவளையும் இணைத்துப் பாடிக் குரவைக் கூத்தாடக் கண்டு மகிழ்ந்த அவ்வூர் ஆன்றோர், “அவர் இருவர்க்கும் இன்றே மணம் செய்து மகிழ்வோம்; மண முரசினை முழக்குங்கள்!” எனப் பணித்தனர்.

தம் மகளிரை மணக்க மனம் துடிக்கும் இளைஞர்க்கு ஏறுதழுவல் வழக்கம் இன்னல் பல தருகிறது என்பதை அறிந்தும், தம் குடிமுறையொடு முரண்பட விரும்பாத ஆயர்குலச் சிறப்பு, அம்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கா வகையில், காளைகளை அடக்கி ஆளும் ஆயர் குல இளைஞர்களின் ஆண்மைச் சிறப்பு, அவர் முயற்சியில் அவர் ஆற்றலுக்கு உரம் ஊட்டும் அவர் காதற் பெருமை, ஆடவர் உள்ளத்தில் காதல் கனலை மூட்டும் ஆயர் மகளிரின் அழகு, காதல் கட்டுக்கடங்காது பெருகிய காலத்தும், தம் காதலர், குடிமுறை குன்றாவாறு, காளைகளை வென்று வருதலை விரும்பி, அதுகாறும் காத்துக் கிடக்கும் அவர் கற்பின் பொற்பு ஆகிய

*இன்னோரன்ன நலங்கள் பலவும் இவ்வொரு பாட்டில் புலனாதல் அறிந்து மகிழ்க.*

"கண்ணகன் இருவிசும்பில் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்நறும் பிடவமும், தவழ்கொடித் தளவமும்,
வண்ணவண் தோன்றியும், வயங்கிணர்க் கொன்றையும்,
அன்னவைபிறவும் பன்மலர் துதையத்,

தழையும் கோதையும் இழையும் என்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடும்
மடமொழி ஆயத்தவருள் இவள்யார்,
உடம்போடு என்உயிர் புக்கவள் இன்று?

ஓஒஇவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்
திருமா மெய்தீண்டலர் என்று, கருமமா
எல்லாரும் கேட்ப அறைந்து அறைந்து எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்டவள்.

சொல்லுக; பாணியேம் என்றார்; அறைகு என்றார்
பாரித்தார்
மாணிழை ஆறாகச் சாறு.

சாற்றுள், பெடையன்னார் கண்பூத்து நோக்கும்
வாயெல்லாம்
மிடைபெறின் ஏராத்தகைத்து.

தகைவகை மிசைமிசைப் பாயியர், ஆர்த்துடன்
எதிர்எதிர் சென்றார் பலர்.

கொலைமலி சிலைசெறி செயிர்அயர் சினம்சிறந்து
உருத்து எழுந்து ஓடின்று மேல்.

எழுந்தது துகள்;
ஏற்றனர் மார்பு,
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர்.

அவருள், மலர்மலி புகல்எழ அலர்மலிர் மணிபுரை
நிமிர்தோர் பிணைஇ.
எருத்தோடு இமிலிடைத் தோன்றினன்; தோன்றி
வருத்தினான் மன்ற அவ்வேறு.

ஏறெவ்வம் காணா எழுந்தார்; எவன்கொலோ
ஏறுடை நல்லார் பகை.
மடவரே நல்லாயர் மக்கள்; நெருநல்
அடலேற்று எருத்து இறுத்தார்க் கண்டு மற்று இன்றும்
உடலேறு கோள் சாற்றுவார்.

ஆங்கினித்
தண்ணுமைப் பாணி தளராது எழூஉக;
பண்ணமை இன்சீர்க் குரவையுள் தெண்கண்ணித்
திண்தோள் திறல்ஒளி மாயப்போர் மாமேனி
அந்துவர் ஆடைப் பொதுவனோடு ஆய்ந்த
முறுவலாள் மென்தோள் பாராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்தது உரை."

*தலைவன் ஏறு தழுவினமை கண்டு, ஆயர் குரவையாடி மகிழ்ந்தது இது.*

1. கண்ணகன் இரு விசும்பு – பரந்தவானம்; கதழ் பெயல் – விரைந்து பெய்யும் மழை 2. தளவம் – முல்லை; 3. தோன்றி – செங்காந்தள்; வயங்கு இணர் – விளங்கும் மலர்க்கொத்து; 4. துதைய – நெருங்க; 5. தழையும் – தழையாடை போலவும்; இவ்வாறே ஏனையவற்றிற்கும் கொள்க. 6. தைஇனர் – கட்டி; திளைஇ –

மகிழ்ச்சியில் மிக்கு; 9. பொருபுகல் — போரைவிரும்பும்; 11. அறைந்து — பறைசாற்றி; 13. பாணியேம் — காலம் தாழ்த்தேம்; பாரித்தார் — பரக்கத் தெரிவித்தார்; 14. சாறு — திருவிழா 16. மிடைபெறின் — பரணில் இடம்பெறுவராயின்; ஏராத்தகைத்து — பொருந்தும்; 17. தகை வகை — அழகிய வகை வகையான எருதுகள்; மிசை — மேலே; பாயியர் — பாய்தற் பொருட்டு; 19. கொலைமலி — கொலைத்தொழில் மிக்க; சிலை செறி — இடியென ஒலிக்கும்; செயிர் — கொலையாகிய குற்றத்தை; அயர் — செய்யும்; 20. உருத்து — சினந்து; 25. மலர்மலி — பெருகி எழுந்த, புகல் எழ — காதல் மிக்கதால்; அலர்மலிர் — பூமாலை நிறைந்த; நிமிர் — நீண்ட; 26. எருத்தோடு — எருதின் கழுத்தோடு; 28. எவ்வம் — துன்பம்; ஏறுடை நல்லார் பகை எவன் கொலோ என மாற்றுக; ஏறுடை நல்லார் — ஏற்றினை அடக்கிய ஆயன்; 31. அடல் ஏறு — கொல்லும் எருது; 32. உடல் ஏறு — போர்வல்ல எருது; கோள் — தழுவல். 37. அந்துவர் ஆடை — அழகிய செந்நிற ஆடை; பொதுவன் — ஆயன்.

3

# அஞ்சுவானைப் புல்லாள்

தமிழகத்தின் பழம்பெரும் நாடாகிய பாண்டி நாட்டிற்குச் சிறப்பளிக்கும் சிற்றூர்களுள் அதுவும் ஒன்று. அஃது ஓர் ஆயர்பாடி; அவ்வூர் வாழ்வார்க்கு அன்று திருவிழா. அப்பாடியில் மணப் பருவம் பெற்ற மகளிர் சிலர்க்கு மணமகனைத் தேர்ந்தெடுக்கும் ஏறு தழுவும் விழா, அன்று அவ்வூரில் நடைபெற இருந்தது. அம்மகளிர் பால் காதல் கொண்ட ஆயர்குல இளைஞர் சிலர், தாம்தாம் காதலிக்கும் மகளிரை மணம் செய்து கொள்ளும் ஆர்வத்தால், அம் மகளிர்க்கு எனத் தனித் தனியே விடப் பெற்ற காளைகளை வென்று அடக்க முன் வந்தனர். காட்டிலும் மலையிலும் மலர்ந்து மணம் வீசும் பல்வகை மலர்களைப் பறித்துக் கொணர்ந்து மாலையாகத் தொடுத்துத் தலையிலும் கழுத்திலும் அணிந்து கொண்டனர். காடு கார்காலத்து மழை பெற்றுப் பூத்துக் குலுங்கும் காட்சியைக் கண்ட இளைஞர், ஆங்கு மலர்ந்து மணம்நாறும் கஞ்சங்குல்லை, கருநீலக் காயா, குருந்து,

கொன்றை, செங்காந்தள், செம்முல்லை, வெட்சி, பிடா போலும் மலர்களுள், அவரவர் விரும்பும் மலர்களைப் பறித்துக் கொணர்ந்து மாலையாக்கிச் சூடி மாப்பிள்ளைக் கோலம் கொண்டனர்.

முல்லை அரும்போ, மயில் இறகின் முளையோ என மருளப் பண்ணும் வெண்ணிறப் பல் வரிசை; அன்பும் அருளும் பெருகி வழியும் அழகிய கண்கள்; நாணம், மடம் முதலாம் மகளிர்க்குரிய மாண்புகளால் நிறைந்தமையால் சிலவேயாயினும் இனிமை சுரக்கும் சொற்கள்; செல்வ வாழ்வைச் சிறக்கக் காட்ட வல்ல சுடர் வீசும் பெரிய குழைகள் அணிந்த காது; இவ்வாறு உருவாலும் இயல்பாலும் நல்லவர் எனப் பிறர் பாராட்டும் பெருமைக்குரியர் அம்மகளிர்; அன்னார் தத்தம் தாய் தந்தையரோடும், தோழியரோடும் வந்து, தொழுவைச் சூழ அமைத்திருந்த பரணில் தமக்குரிய இடத்தில் ஏறி அமர்ந்தனர்.

வெண்ணிற அருவி வீழும் கரிய மலைபோல், வெளுத்த கால்களைக் கொண்ட கருநிறக் கொல்லேறு ஒன்று; அந்திக் காலத்துச் செந்நிறவானில் இடைஇடையே விண்மீன் விளங்கும் காட்சிபோல், செம்மேனியில் வெண்புள்ளி விளங்கும் நல்லேறு ஒன்று; அழிக்கும் தொழில் மேற்கொண்ட சிவபெருமானின் அழகிய சிவந்த சடையில் அணிந்திருக்கும் பிறைத் திங்கள்போல், வளைந்து வெண்ணிறம் வாய்ந்த கோடுகளைக் கொண்ட செந்நிறக் காளை ஒன்று. இவைபோலும் காளைகள் பலப்பல. கண்ணிற் படும் எப்பொருளையும் எதிர்த்து அழிப்பதை இயல்பாகக் கொண்ட அவ்வடலேறுகள்,

நறைக்கொடி படர்ந்து பின்னிக் கிடக்கும் வேலி சூழ்ந்த தொழுவுள் விடப்பெற்றன. குதிரையும், கொல் களிறும், பாயும் சிங்கமும், பற்றி ஈர்க்கும் முதலையும் போலும் கொடு விலங்குகள் கூடி வாழும் மலைக் குகைபோல் தோன்றிக் கண்டாரை மருட்டிற்று அத்தொழு.

விழாத் தொடங்கி விட்டது. ஆயர்குல இளைஞர்கள், கொடிய கொல்லேறுகள் குழுமிக் கிடக்கும் அத்தொழு வினுள், திமுதிமு எனப் புகுந்தனர். சினத்தால் தமக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டிருந்த காளைகள், இளைஞர்கள் நுழையக் கண்டதும், அவர்மீது பாய்ந்தன. ஒன்றுகூடிப் பாய்ந்த எருதுகளுள், தாம்தாம் கட்டிப்பிடிக்க வேண்டிய காளை எது எனத் தேர்ந்து, அவ்வவற்றோடு, தனித்தனியே போரிடத் தொடங்கினர்.

இளைஞர்களோடு போரிடும் ஏறுகள், அப் போர் நிகழ்ச்சிக்கு இடையிடையே, வலிய வந்து தம்மைத் தாக்கும் தம் பகை ஏறுகளைக் குத்தி, அவற்றின் குடர் களைச் சரித்து, அவற்றின் ஆணவத்தை அடக்கித் துரத்தி விட்டு, அவற்றின் குருதி சொட்டும் குடர்கள் பின்னிக் கிடக்கும் தம் கோட்டால், இளைஞர் மார்புகளைத் தாக்க முனையும். கொல்லேற்றின் குருதி சொட்டும் குடர்கள், தன் வெண்ணிறக் கோட்டிடையே பின்னிக் கிடக்கப் பெருஞ் சினம் கொண்டு பாயும் அவ்வேறு, வெண்ணிறத் திங்கள் விளங்கும் பொன்னிறச் சடைமுடியில் செம்மலர் மாலைகள் சூடிவரும், கணிச்சிப் படை ஏந்திய கண்ணுதல்போல் காட்சி அளிக்கும்.

அக்காட்சியைக் கண்டவாறே, ஆங்கு வந்து சேர்ந்த ஆயர்பாடித் தலைவன் மகளும் அவள் தோழியும், ஊர்ப்

மற்றோர் இளைஞன், தன்னை வந்தெதிர்த்த எருதைப் போரிட்டு அடக்கினன்; அடங்கி நின்ற அதன் முதுகில் பாய்ந்து ஏறி அமர்ந்தான்; பின்னர் அதன்மீதே படுத்தான்; படுத்தவாறே அதை மெல்ல ஓட்டி மகிழ்ந்தான்! அவன் செயல் கண்டு வியந்த தோழி, "தோழி! இவன், நம் ஆயர்பாடியில் ஆநிரை ஒன்றே வைத்து வாழும் நல்லினத்தாயர் தலைவன் மகன் போலும்; தண்ணீர்த் துறையில் ஆடி மகிழ்ந்தவன், அந் நீர்த் துறையில் மிதந்து கிடக்கும் தெப்பத்தின்மீது திடுமெனப் பாய்ந்து, அதை உந்திக் கொண்டு செல்வான்போல், அடக்கிய ஏற்றின்மீது கிடந்து, அதைச் செலுத்திச் செல்லும் அவன் ஆண்மையைக் காண்! அவன் அழகைப் பார்!" எனக் காட்டிப் பாராட்டினாள்.

கரிய காளை ஒன்று காற்றுப்போல் கடுகி வந்து தாக்கிற்று ஓர் இளைஞனை; இளைஞன், அதன் தாக்குதலுக்குச் சிறிதும் தளராமல், அதன் ஆண்மையை அழித்து, அதை அடக்கினான்; அடங்கி நின்ற அக்காரிமீது காலூன்றி ஏறி நின்றான். அவ்வழகிய காட்சியைக் கண்டு கலங்கிய தோழி, அதை ஆயர் தலைவன் மகளுக்குக் காட்டி, "தோழி! எருமைக் கடாமீது ஏறித் திரியும் இயமனைத் தன் கால்களால் உதைத்துத் தள்ளி, அவ்வெருமை மீது கால் வைத்து ஏறி நின்ற காலத்தில், சிவனும் இவன் போன்றே தோற்றம் அளித்தவன் போலும்! அவனைப் போன்றே, இவனும் சினத்தில் சிறந்தவன் போலும்! பெண்ணே! இப்பொதுவன் ஆண்மையின் அழகைக் காண்!" எனக் கூறி வியந்து பாராட்டினாள்.

பெண்களோடு நன்றாக அமராது, தனித்து வேறிடத்தில் அமர்ந்து, ஏறு தழுவும் நிகழ்ச்சிகளை இமை கொட்டாது கண்டிருந்தனர்.

குடர் சுற்றிய கோட்டோடு தன்மீது பாய்ந்த கொல்லேற்றை ஓர் இளைஞன், அதன் ஆற்றலை ஒடுக்கி அடக்கி நிறுத்தினான். அம் மகிழ்ச்சியால் அதன் முன்னின்று ஆடினான்; ஆடியவாறே அதன் இரு கோடுகளிலும் மாறி மாறிப் பிணிப்புண்டு கிடக்கும் குடரினைத் தன் இரு கைகளாலும் வாங்கி வாங்கி விடுக்கத் தலைப்பட்டான்; அக்காட்சியைக் கண்டாள் தோழி. "செந்நூல் சுற்றப் பெற்றுள்ள கழியை ஒருவன் கையில் ஏந்தி நிற்க, அதைத் தன் இரு கைகளாலும் வாங்கி வாங்கி முந்நூல் ஆக்கும் அந்தணச் சிறுவன் போலும் அவ்வாயர் குல இளைஞன் ஆற்றலைக் காண்!" என அப்பெண்ணுக்குக் காட்டி அகம் மகிழ்ந்தாள்.

மையினம் ஒன்றே பெற்று வாழும் கோட்டினத்து
ந்து வந்த ஓர் இளைஞன், போர் வெறிகொண்டு
ால்லேற்றின் கழுத்தில் பாய்ந்து ஏறினான்; அக்
ரல் கற்கள்போல் தன் உடலை உறுத்துவதையும்
டிக்காது, மலர் மாலைபோல் அதன் கழுத்தை
கொண்டான். அக் காட்சியைக் கண்ட
ணுக்கும் காட்டி, "தோழி! அவன்
ாத்து ஆயர் குடியில் வந்தவன்
கழுத்தை இறுகத் தழுவியவன், அதன்
லது, தன் பிடியை விடான் போலும்;
ஆண்மை! என்னே அவன் பெருமை!"
ாட்டினாள்.

தூய வெண்ணிறம் வாய்ந்திருந்த ஓர் ஏறு; வேறு புள்ளி எதுவும் அதன் உடலில் இடம் பெறவில்லை. அது தன் ஆற்றல் எல்லாம் காட்டி ஓர் இளைஞனைத் தாக்கிற்று. அதன் தாக்குதலைத் தளராது நின்று தாங்கிக் கொண்டான்; எதிர்த்துத் தாக்கி அதை அடக்கினான்; ஆணவம் அழிந்து அடங்கி நிற்கும் அதன் அருகிற் சென்று, அதை அணைத்து நின்றான். வெள்ளேற்றைத் தழுவி நிற்கும் அக் கருநிற மேனியானைக் கண்டாள் தோழி. அவனைத் தன் உயிர்த் தோழிக்கும் காட்டினாள்; காட்டி, "பெண்ணே! அவ்விளைஞன் ஆடு மேய்க்கும் ஆயர் குடியில் வந்தவன் போலும்; வெண் திங்கள் இடையே விளங்கும் மறுப்போல் காட்சி அளிக்கும் அவன் நிற்கும் அழகைக் காண்!" எனக் கூறி அவன் ஆண்மையைப் பாராட்டினாள்.

இடை புகுந்து தடுக்க மாட்டா வேகத்தோடு, கடுங் கோபம் கொண்டு பாய்ந்து வந்தது ஒரு செந்நிறக் காளை. அதைக் கண்டான் ஓர் இளைஞன்; காயாம்பூ வைத்துக் கட்டிய மாலை தலையில் கிடந்து மணக்க நின்ற அவ்விளைஞன், அக் கொல்லேற்றின் முன் மெல்லச் சென்றான். பாய்ந்தோடி வரும் அதன் இரு கோடு களையும் கைகளால் அழுந்தப் பற்றிக் கொண்டான். அந்நிலையே அதன் ஆற்றல் அழிந்தது. தளர்ந்து வீழ்ந்த அதன் அருகில் நின்று இளைஞன் அகம் மகிழ்ந்தான். அவன் ஆற்றிய அருஞ்செயல் கண்டு நடுங்கிய தோழி, அதை அப் பெண்ணுக்குக் காட்டி, "தோழி! தன் தாய்மாமனும், தன் பெரும் பகைவனுமாகிய கம்சன் ஏவக், குதிரை வடிவாய்த் தன்மீது பாய்ந்து வந்த கேசி என்ற

அரக்கனைப் பிடித்து, வாயைப் பிளந்து, கையால் புடைத்து உயிர் போக்கிய அன்று, கண்ணனும், காயாம்பூ அணிந்து, இவ்விளைஞன் போல் காட்சி அளித்தான் போலும்," என வியந்து கூறிப் பாராட்டினாள்.

இந்நிலையில், ஏறு தழுவும் போர் முடிவுற்றது. ஒருபால் புலிக் கூட்டமும், ஒருபால் யானைக் கூட்டமும் நின்று போரிட்டதுபோல் காளைகளும் காளைநிகர் இளைஞர்களும் பொருதப் போர் ஓய்ந்தது. ஆயர் தம் எருதுகளோடு தொழுவை விட்டு வெளியேறினர்; எல்லோரும் வெளியேறினர்; ஆனால் அவ்வூர்த் தலைவன் மகளும், அவள் தோழியும் மட்டும் வெளியேறவில்லை. அப் பெண்ணின் உள்ளத்தில் அமைதி குலைந்தது; கொல்லேறு தழுவும் காட்சி இன்பத்தில் தன் கவலை மறந்திருந்த அவள், அந்நிகழ்ச்சி முடியவே, மீண்டும் கவலைக்குள்ளானாள். அகத்தில் துயர் மிக, ஆயர் இளைஞர்களின் தலைமாலைகளில் கட்டப் பெற்றிருந்த காயாம் பூக்கள் உதிர்ந்து, மயில் கழுத்துப்போல் காட்சி அளிக்கும் தொழுவகத்துச் செம்மண்ணை வெறித்து நோக்கியவாறே வாய்மூடிக் கிடந்தாள்.

அவள் உள்ளக் கவலையைத் தோழி உணர்ந்தாள். "பெண்ணே! நம்மோடு உடன் ஆடும் தோழியர்க்கு மட்டும் திருமணம் உறுதியாகி விட்டதே என எண்ணி நீ கவலை கொள்ளாதே. இன்று அவர் காதலர் ஏறு தழுவி, அவர் கைப்பற்றியதுபோல், நம் காதலனும், ஒருநாள் நம் ஏற்றினை அடக்கி நம்மை மணப்பன். நம் காதலன், ஆயர், தம் மகளை ஏறுதழுவி வெல்வார்க்கே மணம் செய்து தருவர் என்பதை உணர்தல் வேண்டும்; அவன் அதை

இன்னமும் உணர்ந்திலன்; அது அவன் உள்ளத்தில் ஆழப்பதிந்து விட்டால், ஏறு தழுவ அன்றே வந்துவிடுவன்; நாம் அதை அவனுக்குத் தெளிவாக உணர்த்துதல் வேண்டும்; அதற்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. பெண்ணே! இன்று ஏறுதழுவி வென்ற இளைஞர்களும், அவரை மணக்கப்போகும் மகளிரும், நம் குல வழக்கப்படி, நம்மூர் மன்றத்தில் ஒன்றுகூடிக் கைகோத்து நின்று குரவைக் கூத்தாடி மகிழ்வர். அக் கூத்தைக் காண ஊரெல்லாம் திரண்டு வரும், ஏறு தழுவியதை ஈங்குக் கண்ட நம் காதலனும் ஆங்கு வருவன்; ஆங்கு நாமும் செல்வோம்; சென்று அவர் ஆடும் குரவைக் கூத்திற்குப் பின்னணிப் பாடல் பாடும் பணியை நாம் மேற்கொள்வோம். பாட்டின் மரபு கெடாவாறு, தொடக்கத்தில், கடலை எல்லையாகக் கொண்டு பரந்து கிடக்கும் பழம் பெரும் நாடாகிய நம் பாண்டி நாடாளும் அரசன் வாழ்க எனத் தென்னவனையும், உலக உயிர்களுக்கு உணவூட்டிக் காக்கும் கடமையில் குன்றாத் தெய்வத்தையும் வாழ்த்தும் வாழ்த்துப் பாடலைப் பாடுவோம். பின்னர்க்,

கொல்லேற்றின் கொம்பைக் கண்டு அஞ்சுவானை, ஆயர்மகள் மறுமையிலும் மணக்க மனம் கொள்ளாள் எனவும்,

ஆயர் குலமகள், அஞ்சாது முன்வந்து, கொல் லேற்றை அடக்கி, அதனால் உயிர் துறந்தாரைக் கண்டே வருந்துவள்; அவர் அஞ்சாமையும் ஆண்மையும் கண்டே வியப்பள்; ஏறுகண்டு அஞ்சுவானின் ஆண்மையின்மை கண்டே அவள் வருந்துவள்; அத்தகையாள் தோளைக்

கொல்லேறு கண்டு அஞ்சாது, உயிர் இழக்கவும் துணிந்து அடக்குவான் எவனோ, அவனே தழுவுவதற்கு உரியன் எனவும்,

உடலில் நிலவும் உயிரை, என்றேனும் ஓடி விடும் ஒரு காற்றாகக் கருதாது, அதைக் கிடைத்தற்கரிய ஒரு பொருள் என மதித்து, இழந்து விடாவாறு, கவலையோடு காத்துக் கொல்லேற்றின் கோடஞ்சி வாழும் ஆயர்க்கு, ஆயர்குல மகளிர் தோள் தழுவுதற்கு எளியவோ எனவும்,

மகளிர் மார்பில் வீழ்ந்து மகிழ்ந்து ஆடுவார் போல், கொல்லேற்றின் கோடுகளுக்கு இடையே, அஞ்சாது வீழ்ந்து அடக்குவாரிடத்தில், ஆயர்குலத் தலைவர், தம் மகளிர்க்கு விலையாகப் பொருள் எதுவும் வேண்டார் எனவும், நம் ஆயர்குல இயல்பினைப் பாடற்பொருளாக அமைத்துப் பாடுவோம்; குரவைக் கூத்தைக் காண வந்திருக்கும் நம் காதலன் காதுகளுள், நாம் பாடும் பாட்டின் பொருள் சென்று புகும். நம் கருத்தை அவன் அறிந்து கொள்வன். ஏறுதழுவ இன்றே துணிவன்; ஆகவே, தோழி! குரவைப் பாட்டுப் பாட, அது நிகழும் ஊர் மன்றத்தை அடைவோம்; வருக!" எனக் கூறி அழைத்துச் சென்றாள்.

"மெல்லிணர்க் கொன்றையும், மென்மலர்க் காயாவும்
புல்லிலைவெட்சியும், பிடவும், தளவும்,
குல்லையும், குருந்தும், கோடலும், பாங்கரும்,
கல்லவும், கடத்தவும் கமழ்கண்ணி மலைந்தனர்,
பல்லான் பொதுவர், கதழ்விடை கோள் காண்மார்,
முல்லைமுகையும், முருந்தும் நிரைத்தன்ன

பல்லர், பெருமழைக்கண்ணர், மடம் சேர்ந்த
சொல்லர்: சுடரும் கனங்குழைக் காதினர்,
நல்லவர் கொண்டார் மிடை;
அவர்மிடை கொள,

மணிவரை மருங்கின் அருவிபோல
அணிவரம்பறுத்த வெண்கால் காரியும்
மீன்பூத்து அவிர்வருல் அந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்;
கொலைவன் சூடியகுழவித் திங்கள் போல்
வளையுபு மலிந்த கோடணி சேயும்,
பொருமுரண் முன்பின் புகலேறு பலபெய்து
அரிமாவும், பரிமாவும், களிறும், காரமும்
பெருமலை விடரகத்து ஒருங்குடன் குழீஇப்
படுமழை ஆடும் வரையகம் போலும்
கொடிநறை சூழ்ந்த தொழூஉ.

தொழுவினுள், புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின ஏறு.

ஏற்றின் அரி பரிபு அறுப்பன சுற்றி
எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்கண்
உருவமாலை போலக்
குருதிக் கோட்டொடு குடர் வலந்தன.

கோட்டொடு சுற்றிக் குடர்வலந்த ஏற்றின்முன்
ஆடிநின்று அக்குடர் வாங்குவான் பீடுகாண்,
செந்நூல்கழி ஒருவன் கைப்பற்ற, அந்நூலை
முந்நூலாகக் கொள்வானும் போன்ம்.

இகுளை! இஃதுஒன்று கண்டை; இஃதுஒத்தன்;
கோட்டினத்து ஆயர்மகன் அன்றே? மீட்டொவான்,
போர்புகல் ஏற்றுப்பிணர் எருத்தில் தத்துபு
தார்போல் தழீஇயவன்.

இகுளை! இஃதுஒன்று கண்டை; இஃது ஒத்தன்;
கோவினத்தாயர் மகன் அன்றே? ஓவான்
மழையேற்றின் மேலிருந்து ஆடித், துறையம்பி
ஊர்வான்போல் தோன்றுமவன்.

தொழீஇ! காற்றுப்போல்வந்த கதழ்விடைக் காரியை
ஊற்றுக் களத்தே அடங்கக்கொண் டட்டு அதன்
மேல்தோன்றி நின்ற பொதுவன் தகைகண்டை;
ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பின் இடந்திட்டுச்
சீற்றமோடு ஆருயிர்கொண்ட ஞான்று இன்னன்கொல்
கூற்று! என உட்கிற்று என்நெஞ்சு.

இகுளை! இஃதுஒன்று கண்டை; இஃதுஒத்தன்,
புல்லினத்தாயர் மகன் அன்றே? புள்ளி
வெறுத்த வய்வெள்ளேற்று அம்புடைத் திங்கள்
மறுப்போல் பொருந்தி யவன்.

ஓவா வேகமோடு உருத்துத் தன்மேல் சென்ற
சேஎச் செவிமுதல்கொண்டு பெயர்த்து ஒற்றும்
காயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகைகண்டை;
மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத்திட்டுப் புடைத்த ஞான்று, இன்னல்கொல்
மாயோன் என்று உட்கிற்று என்நெஞ்சு.

ஆங்கு இரும்புலித் தொழுதியும் பெருங்களிற்று இனமும்
மாறுமாறு உழக்கியாங்கு உழக்கிப் பொதுவரும்

ஏறுகொண்டு ஒருங்கு தொழூஉ விட்டனர்; விட்டாங்கே
மயில்எருத்து உறழ்அணி மணிநிலத்துப் பிறழுப்,
பயில்இதழ் மலர் உண்கண்
மாதர் மகளிரும் மைந்தரும் மைந்துற்றுத்
தாதெரு மன்றத்து அயர்வர் தழூஉ.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.

அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து
நைவாரா ஆயமகள் தோள்.

வளியா அறியா, உயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார், தோய்தற்கு
எளியவோ ஆயமகள் தோள்.

விலைவேண்டார் எம்மினத்து ஆயர், மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத், தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்.

ஆங்கு, குரவைதழீஇ யாம் மரபுளி பாடத்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்
மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொன்னிலம்
ஆளும் கிழமை யொடு புணர்ந்த
எங்கோ வாழியர்இம் மலர்தலை உலகே.”

*கொல்லேறு தழுவலைத் தோழி தலைவிக்குக் காட்டிப், பின்னர் அவர் குரவையாடுவதை நினைப்பூட்டி, யாமும் சென்று, தலைவன் ஏறு தழுவி, உன்னை மணத்தற்பொருட்டு, ஆயர் மனை இயல்பைப் பாட்டிடை*

*வைத்துப் பாடுவோம் வருக எனக் கூறி அழைத்துச் சென்றது.*

4. கல்ல—மலையில் மலர்வன; கடத்த—காட்டில் மலர்வன; கண்ணி—தலைமாலை 5. பாதுவர்—ஆயர்; இகழ—சினம்; விடை கோள்—ஏறுதழுவல்; காண்மார் — காண்பதற்கு; 6. முருந்து— மயில் இறகின் முளை; 9. மிடை—பரண் 11. மணிவரை—நீலமலை; 12. காரி—கரிய எருது; 13. அவிர்—ஒளிவிடும்; 14. வான்பொறி—வெண் புள்ளிகள்; 15. கொலைவன்—அழிக்கும் தொழில்பூண்ட சிவன்; 16. மலிந்த—மிகவளர்ந்த; சேய்—செந்நிற எருது; 17. முன்பின்—வலி யினையுடைய; புகழ்—போர் விரும்பும்; 18. அரிமா—சிங்கம்; பரிமா—குதிரை; கராம்—முதலை; 21. கொடிநிறை—நறைக்கொடி, 22. புரிபு—விரும்பி 23. தெரிபு—ஆராய்ந்து 24. அரி—பகை எருது, பரிபு—விரும்பி 25. கணிச்சியோன்—மழுவாயுதம் ஏந்திய சிவன் 26. உருவ—செந்நிற 27. வலந்தன—பிணிப்புண்டன 29. பீடு—பெருமை 32. இகுளை—தோழி; கண்டை—காண்பாய்; ஒத்தன்—ஒருத்தன் என்பதன் மரூஉ 33. கோட்டினம்—எருமை 34. பிணர் எருத்து—சொரசொர என்றிருக்கும் கழுத்து 35. தார்—மாலை 37. கோவினம்—பசு; 38. அம்பி—தெப்பம் 39. ஊர்வான்—செலுத்துவான் 41. ஊற்றுக்களம்—ஊரார் ஒன்றுகூடும் ஊர்மன்று. 42. தகை—அழகு 43. வடிம்பு—காலால்; இடந்திட்டு—பிளந்து 45. கூற்று—கொலைத் தொழில் மேற்கொண்ட சிவன்; உட்குதல்—நடுங்குதல். 47. புல்லினம்—ஆடு 48. அம்புடை—அழகிய பக்கத்தில். 50. உருத்து—கோபித்து 51. சே—செவ்வெருது 53. கூந்தல்—கூந்தல் அல்லது கேசி எனும் பெயருடையான்; மேவார்—பகைவர் 57. உழக்குதல்—போரிடல் 66. நெஞ்சிலார்—நெஞ்சில் உறுதி அற்றவர் 67. நைவாரா—வருந்தாத 68. வளியா—சாற்றுஎன; அறியா—அறியாது; 69. நளிவாய்—துன்பந்தரும் 75. மரபுளி—முறையாக.

# 4

## பாடுகம் வம்மின்!

அவள் ஓர் இடைச்சி; புகழ் மிக்க குடியில் பிறந்தவள். அவள் பிறந்த ஆயர்குடி, அன்று நாடாண்டிருந்த பாண்டியப் பேரரசின் பழம் பெரும் புகழ் கெடாதவாறு பேணிப் பாதுகாத்த பெருமை யுடையது. தன் நாட்டின் பெரும்பகுதி, கடல் கோளால் மறைந்து போக, அவ்விழப்புக் கண்டு சிறிதும் கலங்காது, தன் அண்டை அரசுகளாகிய சேர சோழ நாடுகளுள் புகுந்து, வென்று, ஆங்குப் பறந்திருந்த விற்கொடியையும், புலிக் கொடியையும் அகற்றி விட்டுத் தன் கயற்கொடியை நாட்டி, இழந்த நாட்டிற்கு ஈடான நாட்டைப் பெற்று நாடாண்ட பாண்டியன் பெருஞ் செயலில், அவனுக்குப் பெருந் துணை புரிந்த பெருமை அவள் ஆயர் குடிக்கே உரித்து.

அத்தகைய பழம்பெரும் பெருமை வாய்ந்த குடியில் பிறந்த அவளை, ஓர் இளைஞன் காதலித்தான்; அவளும்

அவனைக் காதலித்தாள்; அவர் காதல் உறவு, நாள் ஒரு மேனியும், பொழுது ஒரு வண்ணமுமாக வளர்ந்தது. ஆனால், அவர் காதலைப் பெற்றோர் அறியார். ஆதலின், இருவரும் தம் காதலை மறைத்து மறைத்து வாழவேண்டிய வராயினர்; அதனால், அவர் காதல்வாழ்வு எத்துணையோ இடையூறுகளுக்கு உள்ளாயிற்று. அப்பொழுதெல்லாம் அவள் கவலை மிகக் கொண்டாள். அகத்தில் கவலை மிகவே, அவள் புற நலமும் பாழாயிற்று. அம் மாறு பாட்டை உணர்ந்த ஊரார், அதற்குக் காரணம் யாது என ஆராயத் தலைப்பட்டனர்; அவர் கழுகுக் கண்கள் அவள் கள்ளக் காதலைக் கண்டு கொண்டன; அன்று முதல் அவளைக் காணும்போதெல்லாம், அவள் காதில் படுமாறு, அவளை இழித்தும் பழித்தும் பேசத் தலைப் பட்டனர்; அந்நிலையை அவளால் தாங்கிக் கொள்வது இயலாது போயிற்று. ஊரார் கூறும் அலர் கேட்டு அவள் உள்ளம் உறுதுயர் அடைந்தது. அவளுக்கு ஒரு தோழி; அப் பெண்ணைப் பேணிக் காக்கும் பொறுப்பேற்றுக் கொண்டவள் அத் தோழி. அவள், இந்நிலை நீண்டால், இப் பெண் உயிர் இழந்து போவளே என அஞ்சினாள். அத் துயர் தீர்க்கும் வழி காண முற்பட்டாள்; அப் பெண்ணின் காதலனைக் கண்டாள்; அவள் துயர் நிலையை அவன் உணரும் வகையில் விளங்கக் கூறினாள்; இறுதியாக, ஆயர்குல வழக்கப்படி, ஏறுதழுவி, அவளை விரைவில் வரைந்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டாள்.

காதலியின் கலக்கம் காணப் பொறாத அவ் விளைஞன், அன்றே அப் பெண்ணின் பெற்றோரைக்-

கண்டு, அவர் மகளைத் தான் மணக்க விரும்புவதாகவும், அதன் பொருட்டு ஏறு தழுவ முன்வந்திருப்பதாகவும் அறிவித்தான். அது கேட்ட அவள் தந்தை ஊர்ப் பெரியவரிடத்தில் சென்று உற்றது உரைத்தான். உடனே அப்பெரியோர், “அவ்வாறாயின் நம்மூரில் மணப்பருவம் பெற்றுள்ள மகளிர் அனைவருக்கும் மாப்பிள்ளைமார் தேடும் ஏறு தழுவல் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும், ஒரேயடியாக இன்றே நடத்தி விடுவோம்!” என்றனர். அவ்வாறே, ஊரில் பறையறைந்து செய்தி அறிவிக்கப் பட்டது.

பறையொலி கேட்ட ஆயர்களும், மணமேடை ஏறக் காத்து நிற்கும் அக்குலக் கன்னியர்களும் ஊர் மன்று அடைந்தனர்; ஆங்கே கட்டுவேலி அமைத்து ஆக்கிய தொழுவினுள், அம்மகளிர்க்கு என வளர்த்த காளைகளை விடுத்து, ஆயரும் அவர் மகளிரும், அத் தொழுவைச் சூழ அமைந்திருந்த பரணில் ஏறி அமர்ந்தனர்.

பனைக் கொடியேந்திய பலராமனின் பால் போலும் வெண்ணிற மேனியை வென்ற, மாசுமறுவற்ற வெள்ளேறு. கையில், பகையழிக்கும் பெருமை வாய்ந்து, பசும்பொன் னால் பண்ணப் பெற்ற சக்கரப் படையையும், மார்பில் மலர் மகளையும் தாங்கிய திருமாலின் கருநிற மேனியை நிகர்க்கும் கருநிறக் காளை; ஒளி வீசும் செஞ்சடையும், அச் சடையில் சூடிய பிறைத் திங்களும், நெற்றிக் கண்ணும் உடையோனாய சிவபெருமானின் கருமை கலந்த பொன்னார் மேனியை வென்ற கபிலநிறக் காளை; கடல் கலங்கச் சென்று, ஆங்கு மரவுருவில் மறைந்து நின்ற அரக்கனை அழித்த வெற்றிப் புகழ் மிக்க வேலேந்திய

முருகப் பெருமானின் செம்மேனியின் நிறம் வாய்த்த செவ்வெருது; இவையும், இவை போலும் ஏறுகள், வேறு சிலவும், அவை மேகங்கள் பலகூடி இடிப்பான் போல் முழங்கி ஒலி எழுப்ப, அத் தொழுவினுள் கொண்டு விடப்பெற்றன.

உடனே, ஊர்த் தலைவன் எழுந்தான்; விண்மீன்கள் சூழ்ந்து கிடக்க, ஒளிவீசி வரும் வான்மதி போல், தத்தம் தோழியர் சூழ்ந்து நிற்க, அவரிடையே அமர்ந்திருக்கும் அம் மகளிரைத் தனித்தனியே சுட்டிக் காட்டினான். காட்டிவிட்டு, "அவ் வெள்ளேற்றை அடக்கி, அதன் கழுத்தில் ஏறி அமருவான் எவனோ, அவன், இதோ நிற்கும், முள் போலும் கூரிய பற்களையுடையளாய இவ்வழகியை மணப்பன்; அக் கருநிறக் காளையின் கூரிய கோடு கண்டு அஞ்சாது அடக்கிப் பிடிப்பவன். ஒளிவீசும் அணிபல அணிந்து அழகிற் சிறந்து நிற்கும் இப் பெண்ணின் வாரி முடித்த கூந்தலில் கிடந்து துயிலும் உரிமையைப் பெறுவன்; கபிலநிறக் கண்ணும், கொலைத் தொழிலும் வாய்ந்த அக் கொடிய காளையைக் கட்டிப் பிடிப்பவன், மருண்டு மருண்டு நோக்கும் இம் மான்விழி யாளை மனைவியாக அடைவன்; வெல்லற்கரிய வன்மை வாய்ந்த அச் செந்நிறக் காளையின் சினங்கண்டு சிந்தை கலங்காது அடக்கி ஆள்பவன், அழகிய காதில் குழை கிடந்து அசையும் இவள் மூங்கில்போலும் மென்மை வாய்ந்த தோளிற் கிடந்து துயில் கொள்ளும் உரிமை தரப் பெறுவன்!" என, ஆங்கு வந்துள்ள கன்னிப் பெண் களையும் அவர்களுக்கு என வளர்த்துவிடப் பெற்ற காளைகளையும் முறையே காட்டி அறிமுகம் செய்து அமர்ந்தான்.

தலைவன் அமர்ந்ததும் தொழுவைச் சூழ, நாற்புறமும் நறுமணப் புகை புகைக்கப் பெற்றது; புகை மணம் நுகர்ந்து ஆயர் ஆரவாரித்தனர்; பறைபல முழங்கின. புகை கண்டு, ஆயர் ஆரவாரத்தையும், பறை முழக்கையும் கேட்டுக் காளைகள் மருண்டு, கடுஞ்சினம் கொண்டு, தம்மை நோக்கி வரும் இளைஞர்களை இமைகொட்டாது நோக்கி நின்றன.

இளைஞன் ஒருவன் பரணைவிட்டு இறங்கித் தொழுவினுள் புகுந்தான். வெண்ணிறக் காளைக்கு உரியாளை விரும்பியவன் அவன்; அதனால், அவ்வெள்ளேற்றினை நோக்கி விரைந்து சென்றான்; வேலின் முனை போலும் கூர்மையும், உறுதிப்பாடும் மிக்க அதன் கோடு கண்டு அஞ்சாது, அதன் கழுத்தின் மீது பாய்ந்தான். வெள்ளேற்றின் அண்மையில் இருந்த ஒரு கருநிற இளங்காளை அவனைப் பார்த்து விட்டது; தன் இனக்காளை ஒன்று கட்டுக்குள்ளாவதைக் காண, அதனால் பொறுக்க இயலவில்லை; அதனால் கடுஞ்சினம் கொண்டு அவன்மீது பாய்ந்து, தன் கூரிய கொம்புகளால் குத்தி அலைத்தது. பால்போல் ஒளிவீசும் முழுமதியைப் பற்றி மறைக்கும் பாம்பை அகற்றி, அவ் வெண்திங்களை விடுவிக்கும் நீலவண்ண நெடுமால் போன்ற அக் கருங்காளையின் கொடுமை கண்டு கலங்கினாள், அவ்வாயனைக் காதலிக்கும் கன்னி.

அறிவை மயக்கும் மருந்திட்டு எழுப்பிய புகையை நுகர்ந்ததனால் மதம் கொண்டு, கண்ணிற் படும் எப்பொருளையும் அழித்துத் திரியும் கொடிய கொல்களிறு போல், தன் எதிர்வருவார் அனைவரும் எலும்பு முறிந்து,

குடர்கள் சரிந்து, அஞ்சி அதிர்ந்து நிலைகெட்டு நீங்குமாறு அவர்களை அலைக்கழித்து விட்டு, அச்சினம் அடங்கா முன்னரே, தன்னை அடக்கத் தன் கொம்புகளின் இடையே பாய்ந்து தன்னைத் தாக்கிய இளைஞனை வாட்டி வருத்திற்று ஒரு காளை. அக் காளையின் கொடுஞ்செயல் கண்டு கலங்கிக் கண்ணீர் சொரிந்தாள் அக் காளைக்கு உரியாள் ஒரு பெண்.

தன் தோள்வலியால் எத்தகைய அடலேற்றையும் அடக்கி விடலாம் என்ற ஆண்மை யுள்ளம் வாய்க்கப் பெற்ற இளைஞன் ஒருவன், அவ்வூக்கம் உந்த விரைந்து வந்தான்; தொழுவினுள் புகுந்தான்; இடைவழியில் நின்று எதிர்த்த காளைகள் அனைத்தையும் அடக்கிக் கொண்டே முன்னேறினான். அவன் கண்ணோட்டம் கபிலநிற ஏற்றின் மீது; அதை நெருங்கினான்; எவருக்கும் அடங்காது இருந்த அதைத் தன் தோள்வலியால் தழுவிப் பிடித்து விட்டான்; இன்னமும் சிறிது முயன்றால் அதை ஆற்றலிழக்கப் பண்ணியிருப்பன்; ஆனால், அந்தோ! பிடி தளர்ந்து விட்டது; திடுமென அதன் முன் வீழ்ந்து விட்டான். வீழ்ந்தானைக் கண்டது அக் கபிலை; தன் ஆற்றலை அடக்கியவன் இவன்; இவனை அழித்துவிட வேண்டும்; அதற்கு இதுவே ஏற்ற சமயம் என எண்ணி அவன்மீது பாயவில்லை; மாறாக, வீழ்ந்தவன் எழுந்து செல்லுமாறு, வாளா விடுத்து, அவ்விடம் விட்டு அப்பாற் சென்றது. களத்தில், கையில் வாள் ஏந்தித் தன்னோடு கடும் போர் இட்ட பகைவன், இறுதியில் தோற்று, வாளோடு பிடிபடக் கண்ட பெருவீரன் ஒருவன், "என்முன் தலை வணங்கி நிற்கும் இவன், இனி என்னோடு

போரிடற்குத் தகுதியுடையவனல்லன்; இவனோடு இனியும் போரிடின் என் பேராண்மைக்கு இழுக்காம்!" என எண்ணி, அவனைப் பிழைத்துச் செல்ல விடுத்து, வேறிடம் போவது போல், வீழ்ந்த இளைஞனை வாளா விடுத்துச் செல்லும் அக் காளையின் பெருமிதம் கண்டு பலரும் பாராட்டினர்.

காளைகளின் கோடுகளைத் தம் மார்பில் தயங்காது தாங்கிக் கொண்டவர்களோடும், ஏறுகள் மீது பாய்ந்து ஏறியவர்களோடும், எருதுகளின் இரு கோடுகளுக்கிடையே பாய்ந்து புகுந்தவர்களோடும், இக் காளையை அடக்குதல் எமக்கு எளிது எனத் தம் வீரத்தை வாய் விட்டுக் கூறியவர்களோடும், ஏறுகளும் எதிர்த்துப் போரிட்டன. தம்மோடு போரிட வந்தாரை அழித்து, மதங்கொண்டு திரிந்த ஏறுகளை அடக்கியல்லது மீளேம் என வஞ்சினம் கூறி முன் வந்தனர் சில இளைஞர்கள். காளைகளின் ஆற்றலை முன்னரே அறிந்து அஞ்சிய ஆயர், அவ்விளைஞர் முன் சென்று அவரைத் தடுத்தனர். ஆயர் த்டுக்க நில்லாது, அவர்களை மீறிச் சென்று, இளைஞர்கள் எருதுகளோடு போரிட்டு அடக்கினர். அந்நிகழ்ச்சியில் சிலர் எலும்பு முறிந்தது; சிலர் தசைகள் அற்று வீழ்ந்தன; புறத்தே பறை ஒலியும், அகத்தே ஏறுகளின் முழக்கொலி யும் ஒலிக்க, இடையே எலும்பும் தசையும் சிதறிக் கிடந்த அத்தொழு, தம்மைப் பகைத்துத் தம்மீது படையெடுத்து வந்த துரியோதனனையும், அவன் தம்பிமாரையும் தருமன் முதலாம் ஐவர் அழித்துக் கொன்ற பாரதப் போர்க்களம் போல் காட்சி அளித்துக் கண்டாரைக் கலங்கப் பண்ணிற்று.

ஏறு தழுவும் நிகழ்ச்சி ஒருவாறு முடிவுற்றது; காளைகள் கட்டவிழ்த்து விடப்பெற்றன; தாம் தாம் விரும்பும் இடங்களில் புகுந்து புல் மேய அவை விரைந்து ஓடி மறைந்தன. ஆயர் மகளிரும், அம் மகளிர்க்குரிய காளைகளை அடக்கி, அம்மகளிர் கைப்பிடித்த ஆயர்குல இளைஞர்களும், தம் குல வழக்கப்படி, குரவைக் கூத்தாடுதற் பொருட்டு, ஊர்மன்று நோக்கிச் சென்றனர்.

பண்டு நம் பாராட்டினைப் பெற்ற அவ்விளம் பெண்ணின் காதலனும், அவளுக்கு என வளர்த்து விடப் பெற்ற காளையை வென்று அடக்கி விட்டான்; அவன் வெற்றி கண்டு அவளும் அவள் தோழியும் விம்மிதம் உற்றனர்; ஊர் மன்றம் அடைந்து, ஊர்ப் பெண்களோடு குரவைக் கூத்தாடத் தொடங்குவதற்கு முன்பே, அவர்கள் ஆடவும் பாடவும் தொடங்கி விட்டனர்.

கொல்லேற்றின் கோட்டினை ஏற்று வெற்றி கண்ட இளைஞன் மார்பைப் பாடிப் பாராட்டுவோம் வருக, எனத் தோழி அழைப்பதும் அப் பெண்ணின் காதுகளில் புகவில்லை.

காதலன் காளையை அடக்கி விட்டான்; மணப் போட்டியில் அவன் வெற்றி பெற்று விட்டான்; இனி அவனை மணப்பது உறுதியாகி விட்டது; அந்நினைவால் அவள் உள்ளம் துள்ளிற்று. “தோழி! நெற்றியில் சிவந்த சுட்டி விளங்கும் நம் எருதின் ஆற்றலை அழித்து விட்டது நம் காதலன் மார்பு; அதனால் அம்மார்பு உற்ற துயரைத் துடைக்க, அம்மார்பை, இவ்வூர்ப் பெண்கள் அறிய, இன்றே அணைத்து மகிழ்வேன்; எம் காதல் விளை யாட்டைக் கண்டு, இவ்வூர்ப் பெண்கள் அலர் கூறிப்

பழிக்கும் நிலை கடந்து விட்டது; அவர் அலர்கண்டு, ஆயர் குலத்தில் வந்த இந்தச் சிறுமி இனி அஞ்ச மாட்டாள்; இதுகாறும் எம்மைக் கண்டு எள்ளி உரைத்த இவ்வூர்ப் பெண்கள், இனி, நான் என் காதலன் மார்பில் வீழ்ந்து கிடக்கக் கண்டு, நாணிக் கண் புதைத்துத் தலை தாழ்த்திச் செல்வாராக!" எனத் தன் அகமகிழ்ச்சி புறத்தே பொங்கி வழிய, ஆடியும் பாடியும் அகம் மகிழ்ந்தவாறே மன்றினை அடைந்தாள்.

மன்றம் அடைந்து, ஊர்ப் பெண்களோடு கூடி, அவளும் குரவை ஆடிக் களித்தாள். கூத்தாடும் அவளை அவள் காதலன் கண்டான்; அவள் ஆடலும் பாடலும் கண்டு மகிழ்ந்தான்; இருப்பினும் ஊரெல்லாம் திரண்டிருக்கும் ஆங்கு, அவள், அவ்வாறு தன்னை மறந்து மகிழ்ந்து கூத்தாடல் நன்றன்று, என எண்ணினான் போலும்; அக்குறிப்புப் புலனாக அவளைச் சிறிது உறுத்து நோக்கினான். அப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டாள் அவள்; ஆனால் அதற்காக, அவள் தன் ஆட்டத்தையும் பாட்டையும் கைவிட்டிலள்; மாறாகத் தன் தோழியை அழைத்து, அவனையும், அவன் பார்வையையும் அவளுக்குக் காட்டி, "தோழி! காதலன் பார்க்கும் பார்வையைப் பார். 'கொலையேற்றை அடக்கி விட்டேன்; இனி நீ எனக்கு உரியவள்; இனி, யான் பணிக்கும் வண்ணம் பணிந்து ஒழுக வேண்டியவள் நீ,' எனக் கூறும் செருக்கு அவன் பார்வையில் பொதிந்திருப்பது புலனாவதைப் பார்!" எனக் காட்டிப் பரிகசித்துப் பாடினாள்.

அவள் கூறியன கேட்ட தோழி, "பெண்ணே! அவன் கருதுவதிலும் உண்மை உளது; எவராலும் அடக்குவதற்கு

அரிது எனக் கூறி, நம் பெற்றோர் கொண்டு வந்து நிறுத்திய நம் கருநிறக் காளையை, அதன் கடுஞ்சினம் கண்டும், அஞ்சாது பாய்ந்து அடக்கி விட்டான். அதனால், நம் பெற்றோர் நனி மிக மகிழ்ந்து, இவ்வூர்ப் பெண்கள் நாவடங்குமாறு உன்னை அவனுக்கே உரிமையாக்கி விட்டனர்; இனி, நீ அவன் உரிமை மனைவி; அவன் உளம் அறிந்து நடந்து கொள்ள வேண்டியவள்," எனக் கூறி அவளுக்கு அறிவூட்டினாள்.

அந்நிலையில் குரவைக் கூத்தும் முடிவுற்றது; ஊர்ப் பெண்களோடு கூடி, "ஓயாது ஒலிக்கும் போர் முரசினை உடைய பாண்டியன் ஆணை இவ்வுலகெங்கும் சென்று நடைபெறுக! அவன் ஒரு மொழிக் கீழ் இவ்வுலகெலாம் சென்று சேர்க!" எனக் கூறிப் பழம்பெரும் பேரரசின் தலைவனாய் விளங்கும் பாண்டியனைப் பாராட்டுபவர்போல் நாட்டு வாழ்த்துப் பாடி விழா முடித்து வீடடைந்தனர்.

"மலிதிரை ஊர்ந்து தன்மண் கடல் வௌவலின்;
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்,
புலியொடு வில்நீக்கிப், புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
தொல்லிசை நட்டகுடியொடு தோன்றிய
நல்லினத்து ஆயர் ஒருங்கு தொக்கு எல்லாரும்,
வானுற ஓங்கிய வயங்குஒளிர் பனைக்கொடிப்
பால்நிற வண்ணன்போல் பழிதீர்ந்த வெள்ளையும்,
பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித்
திருமறு மார்பன்போல் திறல்சான்ற காரியும்,

மிக்குஒளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்
முக்கண்ணான் உருவேபோல் முரண்மிகு குராலும்,

மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வல்லான் நிறனேபோல் வெருவந்த சேயும், ஆங்கு அப்
பொருவரும் பண்பி னவ்வையும் பிறவும்

உருவப்பல் கொண்மூக் குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர் தொழூஉ
அவ்வழி முள்எயிற்று ஏஎர் இவளைப் பெறும் இதோர்
வெள்ளேற்று எருத்து அடங்குவான்.
ஒள்ளிழை, வார்உறுகூந்தல் துயில்பெறும், வைமருப்பின்

காரி கதன் அஞ்சான் கொள்பவன், ஈரரி
வெரூஉப்பிணை மான்நோக்கின் நல்லாள் பெறூஉம், இக்
குரூஉக்கண் கொலையேறு கொள்வான்; வரிக்குழை
வேய்உறழ் மென்தோள் துயில்பெறும், வெந்துப்பின்
சேஎய் சினன் அஞ்சான் சார்பவன்! என்றாங்கு
அறைவனர் நல்லாரை ஆயர், முறையினால்
நாள்மீன்வாய் சூழ்ந்த மதிபோல் மிடைமிசைப்
பேணி நிறுத்தார் அணி.

அவ்வழிப், பறைஎழுந்து இசைப்பப், பல்லவர் ஆர்ப்பக்,
குறையா மைந்தர் கோள் எதிர் எடுத்த
நறைவலம் செயவிடா இறுத்தனஏறு. அவ்வேற்றின்,
மேல்நிலை மிகல் இகலின் மிடைகழிபு இழிபு மேற்சென்று
வேல்நுதி புரைவிரல் திறல்நுதி மருப்பின் மாறஞ்சான்,
பால்நிற வெள்ளை எருத்தத்துப் பாய்ந்தானை
நோணாது குத்தும் இளங்காரித் தோற்றம் காண்,
பால்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்
நீல்நிற வண்ணனும் போன்ம்.

இரிபு எழுபு அதிர்பு அதிர்பு இகந்து உடன்பலர்நீங்க
அரிபு அரிபு இறுபு இறுபு குடர்சோரக் குத்தித் தன்
கோடு அழியக் கொண்டானை ஆட்டித்திரிபு உழக்கும்
வாடில் வெகுளி எழில் ஏறு கண்டை, இஃதுஒன்று
வெருவரு தூமம் எடுப்ப வெகுண்டு
திரிதரும் கொல்களிறும் போன்ம்,
தாள்எழு துணிபிணி இசைதவிர்பு இன்றித் தலைச்சென்று
தோள்வலி துணிபிணி துறந்து இறந்துஎய்தி மெய்சாய்ந்து
கோள் வழுக்கித் தன்முன்னர் வீழ்ந்தான்மேல் செல்லாது
மீளும் புகர்ஏற்றுத் தோற்றம்காண், மண்டு அமருள்,
வாளகப் பட்டானை ஒவ்வான் எனப்பெயரும்
மீளி மறவனும் போன்ம்.
ஆங்க, செறுத்து அறுத்து உழக்கி ஏற்று எதிர்நிற்ப
மறுத்து மறுத்து மைந்தர் சாரத்
தடிகுறை இறுபுஇறுபு தாயின கிடப்ப,
இடிஉறழ் இசையின் இயம் எழுந்துஆர்ப்பப்,
பாடேற்றுக் கொள்பவர் பாய்ந்துமேல் ஊர்பவர்,
கோடுஇடை நுழைபவர் கோள் சாற்று பவரொடு,
புரிபு மேற்சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வில் ஐவர் அட்ட
பொருகளம் போலும் தொழூஉ.

தொழுவினுள்; கொண்ட ஏறெல்லாம் புலம்புகத் தண்டாச்சீர்
வாங்கெழில் நல்லாரும் மைந்தரும் மல்லல்ஊர்
ஆங்கண் அயர்வர் தழூஉ.

பாடுகம் வம்மின்! பொதுவன் கொலையேற்றுக்
கோடுகுறி செய்த மார்பு

நெற்றிச்சிவலை நிறை அழித்தான் நீள்மார்பில்
செற்றார் கண்சாய யான் சாராது அமைகல்லேன்;
பெற்றத்தார் கவ்வை எடுப்ப அதுபெரிது
உற்றீயாள் ஆயர் மகள்

தொழீஇஇ ஒருங்குநாம் ஆடும் குரவையுள் நம்மை
அருக்கினான் போல்நோக்கி அல்லல்நோய் செய்தல்
குரூஉக்கண் கொலையேறு கொண்டேன்யான் என்னும்
தருக்கன்றோ ஆயர்மகன்.

நேரிழாய்! கோள் அரிதாக நிறுத்த கொலையேற்றுக்
காரி கதன் அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
ஆர்வுற்று எமர்கொடை நேர்ந்தார் அலர் எடுத்த
ஊராரை உச்சி மிதித்து
ஆங்குத்
தொல்கதிர்த் திகிரியான் பரவுதும், ஒல்கா
உரும் உறழ்முரசின் தென்னவற்கு
ஒருமொழி கொள்ள இவ்வுலகுடன் எனவே."

*தலைவன் ஏறு தழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக், குரவையுள் அவனைப் பாடுகம் வா எனத், தலைவி அலரச்சம் அகன்றமையும், அவன் வருந்தினமையும் கூறிப் பாடத், தோழி அவனுக்கே உன்னைக் கொடுத்தார் எனக் கூறியது இது.*

1. மண் – நாட்டை; மலிதிரை – பெரிய அலை; 2. மெலிவு – மனத்தளர்வு, மேவார் – பகைவர்; 3. பொறித்த – பொருந்திய; கிளர் – விளங்குகின்ற; கெண்டை – மீன் கொடி; 4. வணக்கிய – வெற்றி கொண்ட; வாடாச்சீர் – கெடாத புகழ்; 5. தொல்லிசை – பழம் பெரும்

புகழ்; நட்ட — நிலைபெறச் செய்த; 8. பால்நிற வண்ணன் — பலராமன்; 9. பொருமுரண் — போர் புரியவல்ல மாறுபாட்டினால்; பொலம்புனை — பொன்னால் பண்ணப்பட்ட; நேமி — சக்கரம்; 10. திருமறு — திருமகளாகிய மறு; திறல் சான்ற — பலம் பொருந்திய; 11. ஒளிர் — ஒளிவீசும்; மேவரும் — பொருந்திய 12. குரால் — கறுமை கலந்த பொன்னிற எருது; 13. மடங்காப் போர் — மீளாச் சண்டை; 14. வெரு வந்த — அச்சம் தரவல்ல; 15 பொருவரும் — ஒப்புமை காட்டலாகா; 16. கொண்மூ — மேகம்; 17. புரிபு — விரும்பி; 18. முள் எயிறு — கூரிய பல், ஏளர் — அழகு; 19. எருத்து — கழுத்தின் கண்; 20. வை மருப்பு — கூரிய கோடு; 21 கதன் — கோபம்; அஞ்சான் —அஞ்சாமல்; ஈர் அரி — இருகண்கள்; 22. வெரூஉப் பிணை — மருண்டு நோக்கும் பெண்மான்; 23. குரூஉக்கண் — செந்நிறக்கண்; குழை — காதணி; 24. வேய்உறழ் — மூங்கில் போலும்; 25. வெந்துப்பு — கொடியபலம்; 26. நல்லாரை ஆயர் — நல்ல ஆயர்; 27. வாய் — தன் இடத்தை; மிடை — பரண்; 30. குறையா மைந்தா — வலிகுறையாத ஆயர்; கோள்எதிர் — தழுவுதலுக்கு எதிராக; 31. நறை — நறு மணப் புகை; விடா — விடப்பட்டு; நிறுத்தன ஏறு — நிறுத்தப்பட்ட ஏறுகள்; ஏறுகள் எதிர் எடுத்த என மாற்றுக. 32-33 ஏற்றின்மேல் நிலை மிகல் இகலின் — எருதுகள் மேல் கொண்ட மிக்க மாறுபாட்டினால்; மிடை இழிபு கழிபு என மாற்றுக. பரணினின்றும் இறங்கிச் சென்று; 34. புரை — ஒத்த; மாறு அஞ்சான் — மாறுபாட்டிற்கு அஞ்சானாய்; 37. கோள்விடுக்கும் — பற்றியிருப்பதை விடுவிக்கும்; 39. பலர் உடன் என்பதை முன்னே கூட்டுக; எழுபு இரிபு என மாற்றுக. எழுபு — எழுந்திருந்து; இரிபு — சென்று; அதிர்பு — அதிர்ந்து; இகந்து — நிலைகெட்டு; 40. அரிபு — (எலும்பு) முறிந்து; இறுபு — (குடர்கள்) அற்று; 41. திரிபு — திரிந்து; உழக்கும் — அலைக்கழிக்கும்; 42. வாடில் — என்றும் குறையாத; 43. வெருவருதூமம் — மதம் கொள்வதற்குக் காரணமான புகை; 45. தாள் — முயற்சி; துணி — துணிந்த; பிணி — ஏறுதழுவல்; தவிர்பு இன்றி — கெடுதல் இல்லாவாறு; தலைச்சென்று — மேலேசென்று; 46. சாய்ந்து — தழுவி; 48. புகர் — செந்நிறம்; மண்டு அமர் — பெரிய போர், 49. ஒவ்வான் — நிகராகான்; பெயரும் — வறிதே மீளும்; 50. மீளிமறவன் — கூற்றுவனை ஒத்தவீரன். 52. சார — தழுவ; 53. தடிகுறை — தசைப்

பிண்டங்கள்; இறுபு — அற்று; தாயின — பரவி; 54. இடிஉறழ் — இடியொலி போலும்; இயம் — இசைக்கருவி; 57. புரிபு — விரும்பி; மடங்க — அழிய; தொழு; 60. புலம் — புல் மேயும் இடம்; தண்டா — அழியாத; 61. மல்லல — வளம் மிக்க; 62. அயர்வர் — ஆடி மகிழ்வர்; தழூஉ — குரவை; 65. சிவலை — சிவந்த சுட்டி; நிறை — ஆற்றல்; 66. செற்றார் — பகைத்து அலர் கூறுவார்; 67. பெற்றத்தார் — பசுக்களை உடைய ஆயர்; கவ்வை — அலர்; 68. உற்றீயாள் — வருந்தாள்; ஆயர்மகள் எனத் தன்னைப் பிறர்போலக் கூறினாள். 69. தொழீஇ — தோழீ! 70. அருக்குதல் — வருத்துதல்; அல்லல் — துன்பம் தரும் 71. குரூஉக்கண் — கோபத்தால் சிவந்தகண்; 73. கோள் — அடக்குதல், அரிதாக — அரிது என்றுகூறி; 75. கொடை நேர்ந்தார் — கொடுக்க இசைந்தார்; 76. ஊரார் — அலர் கூறிய ஊர்ப்பெண்கள்; உச்சி மிதித்தல் — இழிவு படுத்ததுல், ஒரு பொருட்டாக மதியாமை. 78. திகிரியான் — சக்கரப் படையுடைய திருமால், ஒல்கா — கெடாத, 79. உரும் — இடி.

# 5

# இன்று கொடுப்பது எவன்?

நில வளமும் நீர் வளமும் அவ்விரண்டின் துணையால் பெறலாகும் நெல் வளமும் எந்நாட்டிற்கும் உரிய. எல்லா நாடுகளுக்கும் சிறப்பளிக்கும் அவற்றைப் பெறுவதில் தனக்குப் பெருமையில்லை எனக் கருதித், தன்னை ஆளும் அரசன் அண்டை நாடுகள் மீது சென்று அறவழியில் போரிட்டு வென்று கைப்பற்றிக் கொணர்ந்த திறை தந்த வளமும், ஓயாது ஒலிக்கும் கடல் திரை கொழிக்கும் முத்து வளமும் தனக்கே உரியவாகப் பெற்ற தனிச் சிறப்புடையது பாண்டி நாடு. அப்பாண்டி நாட்டு மண்ணில் பிறந்தவர் நாங்கள்; அது மட்டுமன்று, அப்பாண்டி நாட்டிற்கு அத்தகைய பெருமை அளிக்கும் அந்நாட்டு மன்னனின் பழம் பெரும் குடியில் வந்தவர் நாங்கள்; எனப் பெருமை பாராட்டும் பெருங்குடியில் வந்த ஆயர்கள், ஒருநாள் ஒன்றுகூடி, "ஊரில் ஏறு தழுவும் விழா இன்று நிகழும்!" எனப் பறையறையப் பணித்தனர்; பறையறைவோனும், தெய்வத்தை வணங்கித், தென்னவன்

தீதின்றிப் பொலிக என அரசனை வாழ்த்திப் பறை யறைந்து விழா அறிவித்தான்.

விழாக்கோள் கேட்ட ஆயர்கள், ஆடவரும், மகளிரும், இளையோரும், முதியோரும் ஊர் மன்று அடைந்தனர்; பெற்ற மகளிர்க்கு மணம் குறித்து மனக் கவலை கொண்டிருந்த ஆயர், தம் மகளிரோடும் அம் மகளிர்க்கு என வளர்த்த காளைகளோடும் வந்து சேர்ந்தனர். மகளிரைப் பரண்மீது அமர்த்திக் காளை களைத் தொழுவினுள் விடுத்தனர்.

நேமிப் படையேந்திய நீலவண்ணத் திருமால், வாயில் வைத்து ஊதிய வெண்சங்கு போல, வெண்ணிறச் சுட்டி விளங்கும் நெற்றியை உடைய கருநிறக் காளை;

யமுனையாறு அளித்த ஒற்றைக் குழையுடை யோனாய பலராமனின் வெண்ணிற மேனியில் கிடந்து புரளும் செம்மலர் மாலைபோல், மார்பில் சிவந்து நீண்ட மறு விளங்கும் வெள்ளேறு;

கணிச்சிப் படை ஏந்தியவனான கண்ணுதலோ னுடைய நீல கண்டம் போல், கருநிற மறு அமைந்த கழுத்தும், உயர்ந்த இமிலும் வாய்ந்த கருமை கலந்த பசும் பொன்னிறக் காளைக் கன்று;

வச்சிரப் படை யேந்திய விண்ணவர் கோவின் ஆயிரங்கண் விளங்கும் அழகிய மேனி போல், உடல் எங்கும் புள்ளிகள் பொருந்திய பேராற்றல் வாய்ந்த பெரிய எருது;

முருகன், தன் செம்மேனியில் வெள்ளாடை உடுத்து விளங்கும் தோற்றம் போல், கால் வெளுத்து உடல் சிவந்த

காளை; எவ்வுயிரையும் அழிக்கவல்ல காலன் போலும், ஆற்றல் வாய்ந்த ஏறுகள் அத்தொழு நிறைய விடப்பெற்றன. உலகத்து உயிர்களெல்லாம் ஒருங்கே அழியும் ஊழிமுடிவில் அவ்வுயிர்களை அழிக்கும் தொழில் மேற்கொண்ட ஊழிப் பெருந்தீயும், கணிச்சிப் படையும், காலனும், அவன் ஏவலாளரும் ஒன்று கூடி, அவ்வுயிர்களைத் தேடி உலகெலாம் உழன்று வருதல் போல், அக்காளைகள் சிறிது நாழிகையும் ஓய்ந்து நில்லாது தொழுவினுள் சுழன்று சுழன்று வந்தன.

பரண்மீது அமைத்துள்ள மேடைகளில், மணங் கொள்ளப் போகும் ஆயர்குல மங்கையர் வரிசை வரிசையாக வந்து அமர்ந்தனர். இடிகள் பலகூடி இடித்து முழங்கினாற்போல், பறைகள் பல முழங்கின. கொண்டல் கொண்டலாய் மேகங்கள் எழுவது போல், நறுமணப்புகை நாற்புறமும் எழுந்து படர்ந்தது. பார்த்திருப்போரின் இரு கண்களும் மறையுமாறு பெரும் புழுதி எழ, ஆயர்குல இளைஞர்கள் ஆரவாரம் செய்து கொண்டே தொழு வினுள் புகுந்தனர்.

ஒரு காளை மீது பாய்ந்து அதன் கொம்புகளைப் பற்றி அடக்க முனைந்தான் ஓர் இளைஞன்; காளையைத் தன் மார்போடு மார்பாக இறுகத் தழுவிக் கொண்டான் ஒருவன்; காளையொன்றின் கழுத்தின் மீது ஏறி அமர்ந்து பிடி விடாமல் அணைத்துக் கொண்டான் ஒருவன்; ஒரு காளையின் முதுகில் அதன் இமில் முறியுமாறு பாய்ந்து தழுவிக் கிடந்தான் ஒருவன்; ஓர் இளைஞன் காளையொன்றின் கழுத்தைத் தன் இரு தோள்களுக் கிடையே விட்டு இறுக்கிக் கொண்டிருந்தான். காளையின்

கோடுகள் தன் மார்பில் ஊன்றித் தைப்பதையும் உணராது அதை அடக்க முனைந்திருந்தான் ஒருவன்.

இவ்வாறு, இளைஞர்கள் வரிசை வரிசையாக வந்து தம்மைத் தழுவ முனைவதைக் கண்ட காளைகள், கடுஞ் சினம் கொண்டு, அவர்கள் மீது பாய்ந்து, அவர்களைக் கோடுகளால் குத்தித், தழுவவிடாது தள்ளித் துரத்திவிட்டு, மீண்டும் அவர் வாராவாறு, அவரையே வெறித்து நோக்கி நின்றன. காளைகள் முட்டி முட்டித் தள்ளுவதையும் பொருட்படுத்தாது, ஓர் இளைஞன், மீண்டும் முன்வந்து, தான் விரும்பிய செந்நிறக் காளையைக் கட்டிப்பிடிக்க முனைந்தான். அவனை, அக் காளை, தன் கோட்டால் அவன் உயிர் போகுமாறு முட்டித் தள்ளிவிட்டு, மேலும் வருவார் எவரேனும் உளரோ என வெகுண்டு நோக்கி நின்றது. ஒருவரின் உயிர் போகும் காலத்தில், அவரைப் பின் தொடர்ந்து சென்று, அவர் உயிரைப் போக்கிவிட்டுப், பிற உயிரைப் பற்றற்காம் காலத்தை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கும் காலன்போல் காட்சி அளித்தது, அக்காளை.

செம்மையும் கருமையும் கலந்த நிறம் வாய்ந்த ஒரு காளை, தன்னைத் தழுவ வந்தானைக் குத்திச் சாய்த்துவிட்டு, அச்செருக்கால், சுற்றியிருப்பாரைத் தலை நிமிர்ந்து நோக்கிற்று. இளைஞனைக் குத்தியபொழுது, அதன் கோட்டு முனையில் பட்ட அவன் குருதி, காளை தலை நிமிர்ந்ததும், அக்கோட்டின் மேல் வழிந்து, அதற்குச் செந்நிறம் ஊட்டிற்று. செந்நிறம் பெற்ற அக்கோடுகளின் முனையில், சுற்றிக் கட்டப் பெற்றிருந்த சின்னஞ்சிறு மணிகள், நறவம்பூ அரும்பு மலரும் பருவத்தை எதிர் நோக்கி, அவ்வரும்பைச் சுற்றிச் சுற்றிப் பறந்து திரியும்

தும்பிகள்போல் தோற்றம் அளிக்கக் கண்டு, ஆங்குக் கூடியிருந்தவர் அஞ்சி வியர்த்தனர்.

கறுத்துத் திரண்ட தோள்கள் வாய்க்கப் பெற்ற ஓர் இளைஞன், தான் அடக்க விரும்பிய வெள்ளேற்றின் மீது பாய்ந்து, அதன் கழுத்தை இறுகத் தழுவிக் கொண்டான். அதனால் கடுஞ்சினம் கொண்ட காளை அவனைத் தாங்கியவாறே துள்ளி ஓடித், தொழுவை அடுத்திருந்த பரண் நோக்கிப் பாய்ந்தது. தன்னைக் கவ்வியிருக்கும் கருநாகத்துடனே விண்ணில் உலா வரும் வெண்திங்கள் போல் காட்சி அளித்த அக் கொல்லேறு கண்டு கலங்கினார் பலர்.

இவ்வகையால், ஏறு தழுவும் விழா இனிதே முடிந்தது. ஏறுகளும் இளைஞர்களும் போரிட்ட அத் தொழு, பேரரசர் இருவர் பகை மேற்கொண்டு போரிட்ட களம்போல் காட்சி அளித்தது.

காதலர்கள் காளைகளைக் கட்டிப் பிடிக்கும் காட்சியைத் தத்தம் தோழியர் தனித்தனியே சுட்டிக் காட்டக் கண்டு களித்திருந்தனர் ஆயர்குலக் கன்னியர்.

ஆங்குக் கூடியிருந்த தோழிப் பெண்களுள் ஒருத்தி மிகவும் குறும்புக்காரி; ஆயர்பாடித் தலைவன் மகளுக்குத் தான் தோழி என்ற செருக்கு அவளுக்கு; அதனால், அவள் பால் இயல்பாகவே அமைந்திருந்த குறும்புத்தனமும் அதிகமாயிற்று; அவள் துணைவியாகிய ஆயர்பாடித் தலைவன் மகளுக்கும் அதுகாறும் திருமணம் நடை பெறவில்லை; அன்று அவளுக்கும் மாப்பிள்ளைத் தேர்வு நடைபெற்றது; அவளுக்கு என விடப்பெற்ற எருதை ஓர்

இளைஞன் அடக்கி விட்டான்; தத்தமக்குரிய காளைகள் கட்டித் தழுவப் பெற்றமை கண்டு ஏனைய மகளிர் கொண்ட மகிழ்ச்சியினும், அவள் கொண்ட மகிழ்ச்சி அதிகமாம். காரணம், எருதை அடக்கியவனை அவள் முன்னரே அறிந்திருந்தாள்; அது மட்டுமன்று; அவன்மீது காதல் கொண்டு, அவனோடு பழகி, அவன் அளிக்கும் மலர்சூடி மகிழ்ந்தவள் அவள். அதனால், அவன் ஆயர்குல வழக்கப்படி ஏறு தழுவ முன்வந்து, தனக்குரிய காளையைக் கட்டிப் பிடித்ததைக் காணவே, களிப்புக் கடலில் மூழ்கி விட்டாள்; காளையைக் கட்டிப்பிடித்து நிற்கும் காதலனையே இமை கொட்டாது நோக்கியிருந் தாள். அக்காட்சியைக் கண்ட தோழி, அவள் அருகில் அவள் அறியாவாறு சென்று, “தன் வெல்லும் புகழ் உலகெங்கும் விளங்குமாறு, எவராலும் அடக்க இயலாது எனக் கருதிய எருதை, எளிதில் அடக்கிப் புகழ்கொண்ட பொதுவனைப் பார்த்த கண்கள், என்றும் இமையாவோ?” என அவள் காதில், அவள் மட்டுமே கேட்குமாறு, மெல்லக் கூறி நகைத்தாள்.

தோழியின் நகைமொழி கேட்டு உணர்வு பெற்றாள் அப்பெண். அந்நிலையில் அப்பெண்ணின் உறவினர் சிலர், அவ்விருவர் இருக்கும் இடத்திற்கு அணித்தாக வருவதைக் கண்டாள் தோழி; அவள் குறும்புத்தனம் மீண்டும் தலை தூக்கிற்று. “பெண்ணே! முன்னொரு நாள், நாம் நம் கூந்தலை விரித்துவிட்டு உலர்த்தி நின்றபொழுது ஆங்கு வந்த இவ்வுறவினர், உன் கூந்தல் எண்ணெய் மணம் மணப்பதற்கு மாறாக, காதலனோடு கொண்ட பழக்கம் காரணமாய், முல்லை மணம் மணப்பதை உணர்ந்தனர்!

அந்நிலையில் அவர் கொண்ட சினமும், அவர் நம்மைப் பார்த்த பார்வையும், அம்மம்ம! இன்று நினைத்தாலும் என் நெஞ்சம் நடுங்குகிறது. தொடக்கத்தில் கண் சிவக்கச் சினந்து, இறுதியில் நம் காதலன் முன் அடங்கிக் கிடக்கிறதே, அதோ, அக் காளை! அதுபோல் அன்று கடுஞ்சினம் கொண்ட இவர்கள் இன்று என்ன செய்வரோ?" என அப் பெண்ணுக்குக் கூறுவாள்போல், அவ்வுறவினர் கேட்குமாறு கூறி, அவரை எள்ளி நகைத்தாள்.

அவள் குறும்புத்தனம் அத்துடனும் நிற்கவில்லை. இருவர் இருக்கும் இடம் நோக்கி, உறவினரைத் தொடர்ந்து, ஊரார் வரக் கண்டாள். உடனே, "பெண்ணே! நம்மூர்க் கோட்டினத்தாயனாய, அதோ நிற்கும் அவ்விளைஞன்மீது நாம் காதல் கொண்டோம்; நம் காதல் கண்டு நம் பெற்றோர் ஒன்றுங் கூறவில்லை; அவர் அதை ஒருவாறு தாங்கிக் கொள்ளவும் செய்தனர்; ஆனால், அதோ வருகின்றார்களே, இவ்வூரார்! அவர்கள், அன்று நம்மை நோக்கிய நோக்கினை இன்று நினைத்தாலும் என் நெஞ்சம் நடுங்குகிறது. கண்கள் தீப்பொறி பறக்க நம்மைச் சினந்து நோக்கியவர்கள், இன்று என்ன செய்வார்களோ?" என அவர்கள் கேட்டுத் தலை குனியுமாறுங் கூறி நகைத்தாள்.

அம்மட்டோடும் அவள் குறும்பு அடங்கவில்லை. இருவரும் தொழுவை விட்டு வெளியேறிச் செல்லும் இடை வழியில், தாய் நிற்பதைக் கண்டாள் தோழி. உடனே அவளைப் பாராதவள்போல, ஆனால், அவள் காதுகளில் படுமாறு, "பெண்ணே! இவ்வூர்ப் பெண்கள்தாம்

அறிவற்றவர்; அன்று, நம் பெயரை இன்று ஏறு தழுவிய இப் பொதுவன் பெயரோடு இணைத்து அலர் கூறித் திரிந்தனர். அதில் தவ்று இல்லை என்பதை அறிய மாட்டாது அவர்கள் அலர் கூறினார்கள் என்றால், அறிவன அறிந்த நம் தாயும் நம்மை அலைக்க வேண்டுமோ? அப்பெண்கள் கூறிய அலர் கேட்டு, அவள் கோல்கொண்டு அலைப்பதினும் கொடிதாகத், தன் இரு கண்களால் நம்மைக் கடுத்து நோக்கி அலைத்து விட்டாளே! அத்தாய் இன்று என்ன செய்வாள்? அன்று நம்மை வருத்திய பெற்ற தாயும், பிறந்த ஊராரும், பேரன்பு காட்ட வேண்டிய உறவினரும் இன்று வெட்கித் தலை குனியுமாறு நம் காதலனை நாம் அடைந்து விட்டோம்; இதைக் காட்டிலும் பேரின்பம் வேறு எங்கே உளது?" எனக் கூறி நடந்தாள்.

தோழிதான் குறும்புக்காரி என்றால், அப்பெண்ணும் அவளுக்கு இளைத்தவள் அல்லள்! குறும்புத்தனத்தில் அவளினும் மிஞ்சியவள் அவள்! விழா முடிவில் ஏறு தழுவிய இளைஞர்க்கும், அவ்வேற்றினுக்கு உரியரான கன்னியர்க்கும் இன்ன நாளில் திருமணம் நிகழும் எனப் பறையறைந்து அறிவிக்கப்பட்டது. அதுகேட்ட அப்பெண், "தோழி! இன்று ஏறு அடக்கிய இவனை முதன் முதலாக அன்று கண்டபோதே, என் நெஞ்சு என்னை அவனுக்குக் கொடுத்து விட்டது; அன்றே, நான் அவன் உரிய மனைவியாகிவிட்டேன்; அவ்வாறாகவும், அதை அறியாத நம் பெற்றோர், என்னை அவனுக்கு மணம் செய்து கொடுக்கப் புதிய நாள் குறிப்பிடுகின்றனரே? என்னே இப்புதுமை!" எனக் கூறி நகைத்தாள்.

*இவ்வாறு, நகைத்தவாறே, இருவரும், ஊர் நடுவே இருந்த மன்றத்தை அடைந்தனர்; ஊராரோடு கூடிக் குரவை ஆடி, "எம் நாடு வளம் கொழிப்பதாக! இந் நாடாளும் நல்லோன் முரசு, சென்று இமையத்திற்கு அப்பால் உள்ள நாடுகளிலும் முழங்குக!" எனவும், "அவனுக்கு அவ்வெற்றி வாய்க்குமாறு, பாற்கடலில் பாம்பணைமீது பள்ளி கொண்டிருக்கும் நேமிப்படை யேந்திய நீலவண்ண நெடியோன் அருள் புரிவானாக!" எனவும் பாடி இறைவனை வழிபட்டு வீடடைந்தனர்.*

"அரைசுபடக் கடந்து அட்டு ஆற்றில் தந்த
முரைசுகெழு முதுகுடி முரண்மிகு செல்வதற்குச்
சீர்மிகு சிறப்பினோன் தொல்குடிக்கு உரித்துஎனப்
பார்வளர் முத்தமொடு படுகடல் பயந்த
ஆர்கலி உவகையர் ஒருங்குடன் கூடித்,

தீதின்று பொலிக எனத் தெய்வக் கடி அயர்மார்
வீவில் குடிப்பின இருங்குடி ஆயரும்
தாவில் உள்ளமொடு துவன்றி ஆய்புடன்
வள்ளுருள் நேமியான் வாய்வைத்த வளைபோலத்
தெள்ளிதின் விளங்கும் சுரிநெற்றிக் காரியும்,

ஒரு குழையவன் மார்பில் ஒண்தார் போல் ஒளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மரு வெள்ளையும்,
பெரும் பெயர்கணிச்சியோன் மணிமிடற்று அணிபோல
இரும்பிணர் எருத்தின் ஏந்துஇமில் குராலும்;

அணங்குடை வச்சிரத்தோன் ஆயிரம் கண் ஏய்க்கும்
கணங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
வேல்வலான் உடைத்தாழ்ந்த விளங்குவெண் துகில்ஏய்ப்ப

வாலிது கிளர்ந்த வெண்கால் சேயும்
கால முன்பின் பிறவும் சால,

மடங்கலும், கணிச்சியும் காலனும் கூற்றும்
தொடர்ந்து செல் அமையத்துத் துவன்று உயிர் உணீஇய
உடங்கு கொட்பனபோல் புகுத்தலும் தொழூஉ;

அவ்வழி,

கார்எதிர் கலிஒலி கடிஇடி உருமின் இயம் கறங்க,
ஊர்புஎழு கிளர்புஉளர் புயல் மங்குலின் நறைபொங்க,
நேரிதழ் நிரைநிரை வெறிவெறிக் கோதையர் அணிநிற்பச்
சீர்கெழு சிலைநிலைச் செயிர்இகல் மிகுதியிற் சினப் பொதுவர்

தூர்புஎழு துதைபுதை துகள் விசும்புற வெய்த
ஆர்புடன் பாய்ந்தார் அகத்து.

மருப்பிற்கொண்டு மார்புஉறத் தழீஇயும்,
எருத்திடை அடங்கியும் இமில் இறப் புல்லியும்,
தோளிடைப் புகுந்தும், துதைந்து பாடேற்றும்
நிரைபுமேல் சென்றாரை நீள்மருப்புறச் சாடிக்
கொள இடங் கொளவிடா நிறுத்தன ஏறு.

கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெறாஅக் குரூஉச்செகில் காணிகா,
செயிரிற் குறை நாளால் பின்சென்று சாடி
உயிர் உண்ணும் கூற்றமும் போன்ம்.

பாடேற்றவரைப் படக்குத்திச் செங்காரிக்
கோடெழுந்து ஆடும் கண்மணி காணிகா,

நகைசால் அவிழ்பதம் நோக்கி நறவின்
முகை சூழும் தும்பியும் போன்ம்.

இடைப்பாய்ந்து எருத்தத்துக் கொண்டானோடு எய்தி
மிடைப்பாயும் வெள்ளேறு கண்டைகா,
வாள்பொரு வானத்து அரவின்வாய்க் கோட்பட்டுப்
போதரும் பால்மதியும் போன்ம்.

ஆங்க, ஏறும் பொதுவரும் மாறுற்று மாறா
இருபெருவேந்தரும் இகலிக் கண்ணுற்ற
பொருகளம் போலும் தொழூஉ.

வெல்புகழ் உயர்நிலைத் தொல்லியல் துதைபுதை துளங்கு இமில்
நல்லேறு கொண்ட பொதுவன் முகம் நோக்கிப்
பாடிய ஆயமகள் கண்.

நறுநுதால்! என்கொல்? ஐங்கூந்தல் உளரச்
சிறுமுல்லை நாறியதற்குக் குறுமறுகி
ஒல்லாது உடன்று எமர்செய்தார்; அவன் கொண்ட
கொல்லேறு போலும் கதம்.

நெட்டிருங் கூந்தலாய்! கண்டை, இஃது ஓர் சொல்,
கோட்டினத்து ஆயர்மகனோடு யாம் பாட்டதற்கு
எங்கண் எமரோ பொறுப்பர்; பொறாதார்
தங்கண் பொடிவது எவன்?

ஒண்ணுதால்!

இன்ன உவகை பிறிதுயாது? யாய் என்னைக்
கண்ணுடைக் கோலன் அலைத்தற்கு என்னை

மலரணி கண்ணிப் பொதுவனோடு எண்ணி
அலர் செய்து விட்டது இவ்வூர்.

ஒன்றிப் புகரினத்து ஆயமகற்கு ஒள்ளிழாய்!
இன்று எவன் என்னை எமர் கொடுப்பது! அன்று அவன்
மிக்குத் தன்மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்கால் புக்கது என் நெஞ்சு

என,

பாடிமிழ் பார்ப்பகத்து அரவணை அசைஇய
ஆடுகொள் நேமியான் பரவுதும், நாடுகொண்டு,
இன்னிசை முரசின் பொருப்பன் மன்னி
அமைவரல் அருவி ஆர்க்கும்
இமையத்து உம்பரும் விளங்குக எனவே."

*தலைவன் ஏறு தழுவியதைத் தலைவியும் தோழியும் கண்டு மகிழ்ந்து, குரவை ஆடிக் கடவுளை வாழ்த்தியது இது.*

1. கடந்து – வென்று; அட்டு – அழித்து; ஆற்றில் – அறநெறிப் படி; 4. படுகடல் – ஒலிக்கும் கடல்; 5. ஆர்கலி – மிக்க மகிழ்ச்சி; 6. கடி – விழா; அயர்மார் – செய்வதற்கு; 7. வீவுஇல் – கேடு இல்லாத; இரும் – பெரிய; 8. தாவில் – வருத்தமற்ற; துவன்றி – நிறைந்து, ஆய்பு – ஆராய்ந்து; 9. வளை – சங்கு; 10. சுரி – சுட்டி. 11. ஒளிதார் – ஒளி வீசும் மாலை. 12. பொருவுஅற – ஒப்பின்றி; மிடறு – கழுத்து 14. இரும் – கரிய, குரால் – கறுமை கலந்த பொன்னிற எருது, 16. புகர் – செந்நிற எருது, 18. வாலிது – நன்றாக, கிளர்ந்த – உயர்ந்த, 19. காலமுன்பின் – காலன் வலி போலும் வலி. 20. மடங்கல் – ஊழித்தீ, கணிச்சி – அழிக்கும் படை; கூற்று – காலனின் ஏவலாளன், 21. துவன்று உயிர் – மிகப்பலவாகப் பல்கிய உயிர் வகைகள், உணீஇய – உண்ண வேண்டி; 22. உடங்கு – ஒன்றுகூடி, கொட்பன – சுழன்று திரிவன 24. உருபு – இடியேறு, இயம் – பறைகள், கறங்க

— ஒலிக்க, 25. நறை — புகை. 26. வெறி — மணம். 32. துதைந்து — நெருங்கி, 33. நிரைபு — வரிசையாக, 36. குறாஉச்செகில் — சிவந்த எருது, 37. குறைநாள் — உயிர் குறையும் நாள். 41. நகை — ஒளி, அவிழ்பதம் — மலரும் பருவம், 44. மிடை — பரண், 50. துதை — நெருங்கின (கழுத்தை), புதை — மறைக்கும், தொல்லியல் — பொதுவன், கொண்ட பொதுவன் எனக் கூட்டுக. 56. கதம் — சினம், 58. பாட்டதற்கு — கூடியதற்கு, 60. பொடிதல் — தீய்தல். 71. பாடிமிழ் பரப்பகம் — ஒலிக்கும் கடல் சூழ்ந்த உலகில். 74. அமைவரல் — அமைந்து வரும், 75. உம்பர் — அப்பால்.

6

# கை பிணைந்து அயர்வர்

ஆயர்கள் அலைந்து திரியும் வாழ்வினராவர். மக்கள் வாழ்வு முறை, அம்மக்கள் மேற்கொள்ளும் தொழில் முறைக்கு ஏற்பவே அமையும். ஆயர்கள் ஆனிரை ஓம்பி வாழும் வாழ்வுடையவர். அதனால், அவர்கள் அவ்வானிரைக்கு வேண்டிய புல்லும் புனலும் குறையாது கிடைக்கும் இடங்களைத் தேடிச் சென்று வாழவேண்டிய இன்றியமையாமைக்கு உள்ளாயினர். ஓர் இடம் எவ்வளவு நிறைந்த வளமுடையதாயினும், அது, அவர் ஆனிரைக்குத் தேவையான புல்லை, ஆண்டு முழுவதும் அளித்தல் இயலாது. அதனால், ஆயர், அவை கிடக்கும் இடங்கள் தோறும், தம் ஆனிரைகளோடு அலைந்து திரிவர். ஆனிரை களோடு திறந்த வெளிகளில் தங்க வேண்டியதனால், ஆங்குத் தமக்கும், தம் ஆனிரைக்கும், கள்வர்களாலும், காட்டுக் கொடு விலங்குகளாலும் கேடு நிகழாவண்ணம் ஒன்று கூடி, ஒருவர்க்கு ஒருவர் துணையாய் வாழ்வர்; அவர்கள் ஆனிரைகளும் ஒன்று கலந்தே செல்லும்.

புல் கிடைக்கும் இடங்களைத் தேடிச்சென்று வாழும் ஆயர், சேணெடுந் தொலைவு சென்று விடுவதில்லை. விரும்பும் போதெல்லாம் வீடுகளுக்குச் சென்று வரக்கூடிய அண்மையிலேயே அவர் ஆனிரை மேயும். சிறிது சேணெடுந் தொலைவாயின், தம் நிரையில் கறக்கும் பாலை ஆயர்களே தம் மனைக்குக் கொண்டு சென்று கொடுத்து மீள்வர். அணித்தாயின், ஆயன் மனைவியோ அல்லது மகளோ வந்து கொண்டுசெல்வர். புல் கிடைக்கும் இடந்தேடிப் போன ஆயர், தம் பாடியும், அதைச் சூழ உள்ள புலங்களும் கார்காலத்து மழை பெற்றுப், புல்லாலும் நீராலும் நிறைந்துள்ளன என்பதை அறியின், ஆனிரை களோடு வீடு வந்து சேர்வர். பாடி புகும் ஆயர், போகும் பொழுது ஒன்று கலந்து ஓட்டிச் சென்ற தம் ஆனிரைகளை, அவரவர்க்கு உரியனவற்றை அவரவர் பிரித்துக் கொள்வர். ஒன்று கலந்து பழகிவிட்ட ஆனிரைகளைப் பிரிப்பது அத்துணை எளிதில் நிகழக் கூடியது அல்ல; இடை புகுந்து பிரிக்கும் இடையர், ஆனேறுகளால் தாக்குண்டு துன்புறுதலும் உண்டு.

அத்தகைய அரிய தொழிலாய ஆனிரை ஓம்பும் தொழில் மேற்கொண்ட ஆயர்கள், பாண்டி நாட்டில் பெருங்குடியினராய் வாழ்ந்திருந்தனர். அந்நாட்டில் சிறந்து விளங்கிய ஓர் ஆயர்பாடியைச் சேர்ந்த ஆயர் சிலர் ஒன்று கூடினர். தத்தம் ஆனிரைகளை ஒன்று கூட்டினர். கார் காலத்து மழையால் வளம் பெற்று விளங்கிய புல்வெளி களைத் தேடிப் புறப்பட்டனர். பாற்குடங்களையும், அப் பாற்குடங்களை வைக்கும் உறிகளையும், அடங்காது திரியும் காளைகளையும், கறவைகளையும் அடக்க,

அவற்றின் கழுத்தில் மாட்டும் கழுவையும், சூட்டுக் கோலையும், ஒரு பையில் இட்டுச் சுருக்கித் தோளில் மாட்டிக்கொண்டனர்; வாய், சில சமயம் குழலோசையை யும், சில சமயம் 'எய்' 'எய்' என்பன போலும் பொருளற்ற ஒலிகளையும் எழுப்ப, ஆனிரைகளை ஓட்டிச் சென்றனர்.

களம் புகுந்து கடும் போரிடும் போர் வீரர்கள் போன்ற காளைகளில் ஒரு சில, தம் கால்களால் மண்ணைக் கிளைத்துப் புழுதி எழுப்பின; ஒருசில, தம் கோடுகளால் நிலத்தைக் குத்திப் பிளந்தன; சில, ஒன்றோ டொன்று பகைத்து, எதிர் எதிர் நின்று, இடி இடித்தாற் போல் முழங்கின; சில ஒன்றை ஒன்று தாக்கிக் கடும் போரிட்டன. அவ்வாறு போரிடுங்கால், ஒன்றின் கோடு ஒன்றின் உடம்பில் பாய்ந்ததினால், எருதுகளின் உடம்பெல்லாம் புண்ணாயின; பெற்ற புண் வழியே குருதி ஒழுக ஓடும் காளைகள், நாட்காலையில் மழை பெய்யும் செம்மேகம் போல் காட்சி அளித்தன. அத்தகைய ஏறுகளோடு கூடிய ஆனிரைகளை ஓட்டிச் சென்ற ஆயர், சின்னாள் கழித்து ஊர் திரும்பினர்.

ஊர் திரும்பிய ஆயர், தத்தம் ஆனிரைகளைப் பிரித்துக் கொள்ளத் தலைப்பட்டனர். ஊர் அடைந்து, ஊர் மன்றில் நின்ற ஆனிரைகளுள், அவரவர்க்குரிய வற்றைத் தனித்தனியே பிரிக்க, அந்நிரையின் இடையே சிலர் புகுந்து இடைவெளி உண்டாக்கினர். இடையே வெற்றிடம் விளங்க, இருபாலும் இரு பிரிவாகப் பிரிந்து நின்று, ஒரு சிறிது நேரமும் ஓய்ந்திராது, ஓடியும் ஆடியும் உழலும் அவ்வானிரைக் காட்சி, நிலத்தைப் படைக்க முன்வந்த நான்முகன், பண்டு அந்நிலத்தை மூடியிருந்த

கடல் இடையே நின்று, அக் கடல் நீரை இரு பக்கங்களிலும் ஒதுக்கிவிட்டு, இடையே நிலங் கண்ட காட்சிபோல் தோன்றிற்று. நிற்க.

என்றும் தம் பின்நின்று தம்மை ஓட்டிவரும் இயல்பினராய ஆயர், தம்மிடையே புகக் கண்ட, அந்நிரையைச் சேர்ந்த சில ஏறுகள் கடுஞ் சினம்கொண்டு அவ்வாயர் மீது பாய்ந்தன; அஞ்சி ஓடியவர்களின் பின் ஓடி, அவரைக் கீழே வீழ்த்தி மிதித்தன. ஓடாது எதிர்த்து நின்றவரைக் கூரிய தம் கோடுகளால் குத்திப், பட்டி வாயிலில், உழலைகளைக் கோக்கத் துளையிட்டு நாட்டியிருக்கும் மரங்களைப் போலாகுமாறு, அவர் உடலைத் துளைத்தன.

ஆயர் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தினா ரல்லர்; கோடுபட்டுப் புண்ணாகிய தம் உடல்களிலிருந்து ஒழுகும் இரத்தக் கறை படிந்து, கைகள் வழுக்குவது கண்டு, அது போக, மண் எடுத்துக் கைகளை நன்றாகத் திமிர்ந்து கொண்டு, சிறிதும் தாழ்த்தாது, கடல் மேற் செல்லும் பரதவர் கட்டுமரங்கள் மீது ஏறிச் செல்வதுபோல், காளைகள்மீது பாய்ந்து ஏறி, அவற்றை அடக்கி ஓட்டினர். இவ்வாறு தத்தமக்குரிய ஆனிரைகளை அறிந்து பிரித்துக் கொண்டு, அவற்றைத் தங்கள் தங்கள் தொழுவங்களில் அடைத்துவிட்டு மகிழ்ந்து தம் மனை புகுந்தனர்.

ஊர் மன்றில், காளைகள் குத்திச் சரித்த குடர் களைப் பருந்துகள் பற்றிக் கொண்டு பறந்து செல்லுங்கால், அக்குடர்களில் சில, அவற்றின் அலகுகளினின்றும் வழுக்கி வீழ்ந்து, ஆங்குள்ள ஆலமரக் கிளைகளிலும்,

கடப்பமரக் கிளைகளிலும் சிக்குண்டு தொங்கின. ஆலின் கீழும், கடம்பின் கீழும் கோயில் கொண்டிருக்கும் கடவுள்களை வழிபடுவார்கண், அம் மரக் கிளைகளில் சுற்றிய மலர் மாலைகள் போல் காட்சி அளித்தன அக் குடர்கள்

பல நாட்களாகப் பிரிந்திருந்த தம் கணவன்மார் வந்து சேரக் கண்டு, ஆய்ச்சியர் நனிமிக மகிழ்ச்சி கொண்டனர். மகிழ்ச்சி மிகுதியால் தம் கணவன்மார் கேடின்றி மீளத் துணை புரிந்த திருமாலை வழிபடக் கருதினர். உடனே, ஊர் மன்றில் ஒன்று கூடிக் குரவை யாடத் தொடங்கினர்.

“தோழி! கொல்லேறு பாய்ந்து புண் பெற்றுவிட்டது என் கணவன் மார்பு; அப்புண் தீர்க்கும் அரிய மருந்தாகிப் பயன்படும் பெருமை, என் மார்பு தரும் வெப்பத்திற்கு உரித்து. அதனால் தோழி! அவர் மார்பும், என் மார்பும் ஒன்று கலக்குமாறு அவரை இறுக அணைத்துக் கொள்வேன்!” எனக் கூறிப் பாடினாள் ஒரு பெண்.

மனையிற் கிடந்து மனைக்குரிய கடமைகளை மேற் கொள்வது காதலி கடமை; புறத்தே சென்று பொருளீட்டி மீள்வது காதலன் கடமை என்பதை உணர்ந்தவள் ஒருத்தி, “தோழி! நெடிது பொழுது நின்று தயிர் கடைந்தமையால் என் மார்பில் புள்ளி புள்ளியாகத் தெறித்துக் கிடக்கும் தயிரும், கொல்லேறு தழுவுங்கால், என் கணவன் மார்பில் அதன் கோடுபட்டு உண்டான புண்ணினின்று பெருகிப் பாயும் குருதியும் ஒன்று கலக்குமாறு, கணவன் மார்பைக் கட்டித் தழுவிக்கொள்வேன்!” எனக் கூறிப் பாடினாள் ஒரு பாட்டு.

"ஏடி! தோழி! கொல்லேற்றின் கோடு கண்டு ஆயன் அஞ்சுவதும், கொல்லேறு கண்டு அஞ்சுவான் தோளை ஆய்ச்சி காதலிப்பதும் ஆயர்குடிப் பிறந்தார் அறியாத நிகழ்ச்சிகள் அல்லவோ?" எனக் கூறிப் பாடினாள், குலப்பெருமை குன்றாக் குணம் உடையாள் ஒரு பெண்.

புகழாசை மிக்க ஒரு பெண், "தோழி! மணந்து மனையறம் மேற்கொண்ட நாள் முதலாக, இன்றுவரை, ஒரு நாளேனும் என் கணவர் என்னைப் புறம்போக விட்டாரல்லர்; அவர் அன்பு அத்துணைப் பெரிது! ஆனால், மோர் விற்கும் பணிமேற்கொண்டு புறத்தே சென்று, ஆங்கு என்னைக் காணும் இவ்வூரார், 'அடங்காது திரிந்த அடலேற்றை அடக்கியவன் இவள் கணவன்!' என என் கணவரைப் புகழ்ந்து கூறும் சொற்களை, ஒரு நாளேனும் கேட்டு மகிழ மாட்டேனா என ஆசைப்படு கிறது என் உள்ளம். தோழி! அந்நல் வாய்ப்பு என்றேனும் ஒருநாள் எனக்கு வாய்க்குமோ?" எனக் கூறிப் பாடினாள்.

அவருள் முதியாள் ஓர் ஆய்ச்சி, "தோழியீர்! குலப் பெருமை பாடியது போதும்; இனி நம் காளைகளையும், காதலரையும் கேடுறாவாறு காக்கும் திருமால் உறையும் காட்டைப்பாடி, நாம் பகைவர் பயம் அற்றுப் பேரின்பப் பெருவாழ்வு பெற்று வாழத் துணை புரியும் தென்னவன் கொற்றம் வாழ்க! வளர்க! அதற்கும் அத்திருமால் துணை புரிவானாக! என, அவன் திருவடிகளைப் பணிந்து பரவுவோமாக!" எனக் கூறிப் பாடிக் குரவைக் கூத்தை முடித்தாள்; எல்லோரும் மகிழ்ந்து மனை புக்கனர்.

**"கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்**
**இமிழ்இசை மண்டை உறியொடு தூக்கி**

ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்
வழூஉச்சொல் கோவலர் தத்தம் இனநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனை வியன் புலத்தார்.

அவ்வழி,

நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை,
மாறேற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவையாய்த்
துளங்கு இமில் நல்லேற்று இனம்பல, களம்புகும்
மள்ளர் வனப் பொத்தன.

தாக்குபு தம்முள் பெயர்த்து ஒற்றி எவ்வாயும்
வைவாய் மருப்பினால் மாறாது குத்தலின்,
மெய்வார் குருதிய ஏறெல்லாம்; பெய்காலைக்
கொண்டல் நிரை ஒத்தன.

அவ்வேற்றை,

பிரிவுகொண்டு இடைப்போக்கி இனத்தோடு புனத்துஏற்றி,
இருதிறனா நீக்கும் பொதுவர்,
உருகெழு மாநிலம் இயற்றுவான்,
விரிதிரை நீக்குவான் வியன்குறிப்பு ஒத்தனர்.

அவரைக் கழலஉழக்கி எதிர்சென்று சாடி
அழல்வாய் மருப்பினால் குத்தி, உழலை
மரத்தைப்போல் தொட்டன ஏறு.

தொட்டதன், புண்வார் குருதியால் கைபிசைந்து மெய்திமிரித்
தாங்கார் பொதுவர், கடலுள் பரதவர்
அம்பி ஊர்ந்தாங்கு, ஊர்ந்தார் ஏறு.

ஏறுதம் கோலம்செய் மருப்பினால் தோண்டிய விரிக்குடர்
ஞாலக்கொண்டு எழூஉம் பருந்தின் வாய்வழீஇ,
ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட
மாலைபோல் தூங்கும் சினை.

ஆங்கு,

தம்புல ஏறு பரத்தர உய்த்த தம்
அன்புறு காதலர் கைபிணைந்து ஆய்ச்சியர்
இன்புற்று அயர்வர் தழூஉ.

முயங்கிப் பொதிவேம்; முயங்கிப் பொதிவேம்;
முலைவேதின் ஒற்றி முயங்கிப் பொதிவேம்,
கொலையேறு சாடிய புண்ணை, எம்கேளே!

பல்லூழ் தயிர்கடையத் தாஅய புள்ளிமேல்
கொல்லேறு கொண்டான் குருதி மறக்குறப்
புல்லல் எம் தோளிற்கு அணியோ, எம்கேளே!

ஆங்கு, போரேற்று அருந்தலை அஞ்சலும், ஆய்ச்சியர்
காரிகைத்தோள் காமுறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ? எங்கேளே!

கொல்லேறு கொண்டான் இவள் கேள்வன் என்று ஊரார்
சொல்லும் சொல்கேளா அளைமாறியாம் வரும்
செல்வம் எம்கேள்வன் தருமோ? எங்கேளே!

ஆங்க,

அருந்தலை ஏற்றொடு காதலர்ப் பேணிச்
சுரும்புஇமிர் கானம் நாம் பாடினம் பரவுதும்,
ஏற்றவர் புலம்கெடத் திறைகொண்டு
மாற்றாரைக் கடக்க எம்மறங்கெழு கோவே."

*ஆயர் தத்தம் ஆனிரையோடு புகக்கண்ட ஆய்ச்சியர், மகிழ்ந்து குரவைக் கூத்தாடியது இது.*

1. கழுவு—காளைகளை அடக்க அவற்றின் கழுத்தில் பிணிக்கும் கிட்டி 2. இமிழ் இசை மண்டை — இமிழ் எனும் ஒலி எழுமாறு சுரண்டப்படும் கறவைக்கலம். 4. வழூஉச்சொல் — 'எய் எய்' எனும் குறிப்புச் சொல். பொருள் குறியாமையின் வழுவாயிற்று. 8. சிலைத்தல் — ஒலித்தல். 9, 10. இனம், எழுவாய்; ஒத்தன, பயனிலை, வைவாய் — கூரியமுனை, 15. காலைக் கொண்டல் — காலையில் எழும் மேகம். 18 இயற்றுவான் — நான்முகன். 19. விரிதிரை — கடல், 20. கழல — ஓடும்படி, 22. தொட்டன — துளைத்தன, 24. தங்கார் — ஓய்ந்திராது, 24. பரதவர் — நெய்தல் நிலத்தார், 25. அம்பி — மீன்படகு 27. ஞால — தொங்க. வழீஇ — வழுக்கி. 28. விலங்கிட்ட — குறுக்காகச் சூட்டிய 29. தூங்கும் — தொங்கும்; 35. வேதின் — வெம்மையால், 41. காரிகைத் தோள் — கொல்லேறு அஞ்சிப் புண்படாது தோன்றும் அழகிய தோள் என இகழ்ச்சிக் குறிப்பாய்க் கூறப்பட்டுள்ளது. 44. அணைமாறி — மோர் விற்று, 48. சுரும்பு — வண்டு; இமிர் — ஒலிக்கும், 49. ஏற்றவர் — பகைவர்; ஏற்றவர் புலம்கெட — பகைவர் நிலம் எனும் பெயர் கெட; அதாவது அதைத் தனக்கு உரித்தாக்கிக் கொள்ள.

# 7

## அவன் கண்ணி அன்றோ!

ஆயர்கள், அவரவர் விருப்பத்திற்கேற்பச், சிலர் ஆடுகளையும், சிலர் மாடுகளையும், சிலர் எருமைகளையும் மேய்ப்பதால், முறையே, புல்லினத்து ஆயர், நல்லினத்து ஆயர், கோட்டினத்து ஆயர் எனத் தனித் தனியே பெயரிட்டு அழைக்கப் பெறினும், அவர் வாழ்வு முறையில் ஒரு சிறு வேறுபாடும் இடம் பெறவில்லை. உண்ணல் உறவு கொள்ளல் ஆகிய நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்தே வாழ்ந்தனர். அத்தகைய ஆயர் குடியில் பிறந்த ஒரு பெண்ணும், ஓர் இளைஞனும் ஒருவரை யொருவர் காதலித்தனர்; பிறர் காணக்கூடாத இடங்களில், தனித்துக் கண்டு மகிழ்ந்தனர்; அவர் காதல் வளர்ந்தது. ஆனால், களவு வாழ்க்கை இடையூறு மலிந்திருப்பது கண்டு, இருவரும் வருந்தினர்; அச்சமற்று மகிழ்வதற்கு இல்லையே என எண்ணிக் கவலைகொண்டனர்; பலர் அறிய மணந்து கொண்டு, மனையறம் மேற்கொள்ளும் அந்நாளை ஆர்வத்தோடு எதிர் நோக்கியிருந்தனர்.

அதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அவள் பெற்றோரும், அவ்வூரைச் சார்ந்த பிற மகளிரின் பெற்றோர்களும் மணமுயற்சி மேற்கொண்டனர். ஒரு நாள் ஊரைக் கூட்டி, "எம் மகளிரை மணக்க விரும்பும் மாப்பிள்ளைமார், அவரவர்க்கென நாங்கள் வளர்த்து வரும் எருதுகளை அடக்கித் தழுவ முன் வருவர்களாக!" என அறிவித்தனர்.

ஏறு தழுவும் நிகழ்ச்சி தொடங்கிற்று; ஏறுகள் தொழுவினுள் விடப்பெற்றன; ஊரார் ஒன்று திரண்டு வந்து, தொழுவைச் சுற்றிக் கட்டியிருந்த பரண்மீது அமர்ந்தனர்; அவர்மகளிரை மணக்க முன்வந்த இளைஞர்கள், அவரவர் விரும்பும் மகளிர்க்குரிய காளைகளைத் தேர்ந்து அடக்க முனைந்தனர். முன்னர் நாம் கண்ட இளைஞனும் தொழுவினுள் நுழைந்தான்; நுழைந்தவன், காதலிக்குரிய காளை, செவியில் மறு விளங்கும், சினத்தில் மிகுந்த புகர் நிறக் காளை என அறிந்து, அதன் முன் சென்று, தன் ஆற்றலெல்லாம் காட்டி அடக்கி நிறுத்தினான். அக் காட்சியைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அப்பெண்; அவள் வாழ்வு, அவன் வெற்றி தோல்விகளில் அடங்கியிருந்தமையால், அவள் கண்ணும் கருத்தும், அவன் மீதும், அக் காளை மீதுமே நிலைத்து நின்றன. அவன் அதை அடக்கி விட்டான்; அதைக் கண்ட அவள் மகிழ்ச்சி அளவு கடந்து விட்டது; அவள் தன்னை மறந்தாள். அந்நிலையில், முல்லை மலர் கொண்டு கட்டி, இளைஞன் குடுமியில் வளைத்து வனப்புறச் சூட்டியிருந்த மாலையை, அடக்கிவிட்டானே என்ற ஆத்திர மிகுதியால் அறிவிழந்து போன அக்காளை, தன் கோடுகளில் மாட்டி ஈர்த்து,

ஆட்டி அலைக்கழித்தது; கோட்டிலே சிக்குண்டு அலைக்கப் பெற்ற அம்மாலை, திடுமென அறுத்துக் கொண்டு, துள்ளி வந்து, பரண்மீது அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்த அப் பெண்ணின் கூந்தலில் வீழ்ந்தது. மகிழ்ச்சியால் தன்னை மறந்திருந்த அப்பேதைப் பெண், இழந்த ஒரு பொருளை மீண்டும் பெற்றவர், அப் பொருள் மீது பேரன்பு காட்டி, அதைப் பேணி வைப்பதுபோல், அம்மாலையை ஆர்வமோடு எடுத்து, அன்போடு கூந்தலிற் சூட்டிக் கொண்டாள்.

இந்நிலையில் விழா முடிந்தது; அவள் தன்னை உணர்ந்தாள்; நாற்புறங்களிலும் ஊராரும் உறவினரும் சூழ்ந்திருக்கக் கண்டாள்; தன்மீது வந்து வீழ்ந்த அவன் மாலையைத் தான் எடுத்துச் சூட்டிக் கொண்டதை இவர் பார்த்திருப்பரோ? பார்த்தவர்கள் அதைத் தாயிடம் கூறியிருப்பரோ? தாய் நனிமிகச் சினப்பளோ என்ற அச்சம் அவளைப் பற்றி அலைக்கழித்தது. அந்நிலையில் ஆங்கு வந்தாள் தோழி. அவளை, அப்பெண், அன்போடு தழுவிக்கொண்டு, தன் காதலையும், காதலால் கருத்திழந்து தான் செய்த பிழையையும் அவள்பால் கூறித், "தோழி! இதற்கு என்ன செய்வது? தாயின் சினத்தை எவ்வாறு தடுப்பது? வழியொன்று கூறுவாயாக!" என அழுது வேண்டினாள்.

அவள் கூறா முன்பே, அனைத்தையும் அறிந்திருந் தாள் தோழி; அது மட்டுமன்று. அவளை அவனுக்கே மணம் செய்து கொடுக்கப் பெற்றோர் இசைந்திருப்பதை யும் அறிந்திருந்தாள். அதனால், அப்பெண் கூறியன கேட்டுச் சிறிதும் நடுங்காது, நகைத்தவாறே, "ஏடி!

பெண்ணே! மாலை உன்னை மணக்கப் போகும் அவனுடையதுதானே? பின், ஏன் இவ்வாறு அஞ்சுகிறாய்? தாய் அறியட்டுமே! அதற்கு நாமேன் அஞ்ச வேண்டும்? அதற்காக நீ சிறிதும் கவலைப்படாதே!" என்றாள்.

கவலையற்றுக் கூறிய தோழியின் சொற்கள், அப் பெண்ணின் கவலையை மேலும் மிகுத்தன. "தோழி, சூடும் பூ இது, சூடாப்பூ இது என மலர்களின் இயல்பறிந்து பறித்துச் சூடத் தெரியாத இளமைப் பருவத்தளாய தன் மகள், யாரோ ஓர் இளைஞன் கட்டித் தந்த கண்ணியைச் சூட்டிக் கொண்டாள் என்பதை ஒரு தாய் அறியின், சினவாது இருப்பாளோ? அச் சினத்தைப் போக்க நாம் ஏதேனும் வழிகாண வேண்டாவோ?" என்று அஞ்சி அஞ்சி வினவினாள்.

அஞ்சும் அவள் நிலை கண்ட தோழி, "பெண்ணே! போகப் போக எல்லாம் சரியாகி விடும்; நீ சிறிதும் அஞ்சாதே!" எனக் கூறித் தேற்றினாள்; அது கேட்ட அப்பெண், "ஓ ஒ! அப்படியா!" என வியந்து, "தோழி! நீ கூறுமாறு, செய்த தவறு எவ்வாறு சரியாகிவிடும்? அதைச் சிறிது விளங்கக் கூறு," என வேண்டிக் கொண்டாள்.

அதற்குத் தோழி, "ஏடி! அவனும் ஆயன்; நீயும் ஆயர்குடி வந்தவள்; அவன் உன்னைக் காதலிக்கிறான்; நீயும் அவனைக் காதலிக்கிறாய். அங்ஙனமாயின், இதில் தாய் கோபிப்பதற்கு என்ன உள்ளது?" என்று கேட்டாள். அவ்வாறு கூறிய தோழியின் நல்ல மனத்தை அறிந்து கொண்ட அவள், "தோழி! தாய் உள்ளம், உன் உள்ளம் போல், நல்லுள்ளமாயின், நாம் வருந்த வேண்டியதில்லை.

உன் நல்ல மனம் நம் தாய்க்கு உண்டாக வேண்டுமே!" எனக் கூறிக் கவலைப்பட்டுக் கொண்டாள்.

அவள் கவலை கண்ட தோழி, "பெண்ணே! நான் இவ்வளவு ஆறுதல் கூறியும், உன் அச்சம் அகலவில்லை; ஒன்று கூறுகிறேன், கேள். காதல் கொள்பவர் தாயின் சினம் கண்டு அஞ்சுவது கூடாது; தாய்க்கு அடங்கிய பெண்ணாய் வாழ்பவள் காதல் கொள்ளக் கூடாது! நீயோ அவனையும் காதலிக்கிறாய்; தாயின் சினத்திற்கும் அஞ்சுகிறாய். அங்ஙனமாயின், உன் காதல் நோய்க்கு மருந்து காணல் அரிதினும் அரிதாம்!" எனக் கூறினாள்.

துணைபுரிவாள் என நம்பிய தோழியும் கைவிடவே, அவள் அச்சம் அதிகமாயிற்று. "தோழி! என் காதல் நோய்க்கு மருந்து இல்லையாயின், நான் இவ்வாறே வருந்தி அழிய வேண்டியதுதானா?" எனக் கூறிக் கண்ணீர் விட்டாள்.

இனியும் உண்மையை மறைத்தால், இவள் உள்ளம் உடைந்துவிடும் என உணர்ந்த தோழி, "பெண்ணே! மாசு போக நீராடி, நெய் பூசப்பெற்ற நின் நீண்ட கூந்தலில், நம் காளை, அவன் கண்ணியைப் பறித்து எறிந்தது என்ற செய்தியை நம் பெற்றோர் அறிந்தது உண்மை; ஆனால், அஃது அறிந்து அவர்கள் சினம் கொண்டிலர்; மாறாக, அது, இவனே இவள் கணவன் எனத் தம் குலதெய்வமாய திருமால் நேர்நின்று காட்டியதாகக் கருதினர்; அதனால், தன் அன்பு பொய்த்து விடாது ஏறு அடக்கி நின்ற அவனுக்கு, உன்னை மணம் செய்து தர, நம் தந்தையும் தமையன்மாரும் ஆராய்ந்து முடிவு செய்துள்ளனர்;

*ஆகவே, இனி வருந்துவது விடுத்து மகிழ்க!" எனக் கூறி வாழ்த்தினாள்.*

"எல்லா! இஃதொன்று கூறு; குரும்பு இவர்
புல்லினத்தார்க்கும், குடஞ்சுட்டவர்க்கும் எம்
கொல்லேறு கோடல் குறை எனக்கோவினத்தார்
பல்லேறு பெய்தார் தொழூஉ.

தொழுவத்து,

சில்லை; செவிமறைக் கொண்டவன் சென்னிக்
குவிமுல்லை
கோட்டங்காழ் கோட்டின் எடுத்துக் கொண்டு ஆட்டிய
ஏழைஇரும்புகர் பொங்க, அப்பூவந்து என்
கூழையுள் வீழ்ந்தன்று மன்.

அதனைக், கெடுத்தது பெற்றார்போல் கொண்டு யான்
முடித்தது
கேட்டனள் என்பவோ யாய்?

இஃது ஒன்று கூறு,
கேட்டால் எவன் செய்ய வேண்டுமோ? மற்றிகா?
அவன் கண்ணி அன்றோ, அது?
பெய்போது அறியாத் தன் கூழையுள் ஏதிலான்
கைபுனை கண்ணி முடித்தாள் என்று யாம்கேட்பின்
செய்வது இல் ஆகுமோ, மற்று?

எல்லாத் தவறும் அறும்.

ஓஒ! அஃது அறுமாறு?

ஆயர்மகனாயின், ஆயர்மகள் நீயாயின்,
நின் வெய்யனாயின், அவன்வெய்யை நீ ஆயின்,

நின்னை நோதக்கதோ இல்லைமன்; நின்நெஞ்சம்
அன்னை நெஞ்சாகப் பெறின்!

அன்னையோ?

ஆயர்மகனையும் காதலை, கைம்மிக;
ஞாயையும் அஞ்சுதி; ஆயின், அரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து;
மருந்தின்றி யான்உற்ற துயராயின், எல்லா!
வருந்துவேன் அல்லனோ யான்.

வருந்தாதி;
மண்ணிமாசற்ற நின்கூழையுள், ஏறு, அவன்
கண்ணி தந்திட்டது எனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற்று இவட்கு என நின்னை அப்
பொய்யில் பொதுவற்கு அடைசூழ்ந்தார், தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு."

*தலைவி, தோழிக்கு அறத்தொடு நிற்பத், தமர் வரைவுடன்பட்டமை, அவளுக்கு அவள் சொல்லியது இது.*

1. குரும்பு — முல்லைநிலத்து ஊர். இவர். — பரந்திருக்கும். 6. சில்லை — சினமிக்க, மறை — மறு; 7. கோட்டங்காழ் — வளைந்த மாலை; ஆட்டிய — அலைக்கழித்த; 8. இரும் — கரிய; பொங்க — துள்ளிக் குதிக்க; 9. கூழை — கூந்தல். 15. பெய் போது — சூடிக் கொள்ளும்பூ 21. வெய்யன் — விருப்பம் உடையவன். 25. கைம்மிக — அளவுகடந்து. 26. ஞாய் — தாய். 33. தெய்வமால் — திருமாலாகிய தெய்வம்.

**8**

# காஞ்சிக்கீழ்ச் செய்தேம் குறி!

முல்லை நிலத்து மங்கை அவள்; தாயும் தந்தையும், உற்றாரும், உடன் பிறந்தவரும் கொண்ட பெரிய குடியில் பிறந்தவள். கடமைக் குணம் நிறைந்தவள்; நாள்தோறும், மோர்க் கூடை தலையில் ஏந்தி, முல்லை நிலத்தை அடுத்திருந்த மருத நிலத்து ஊர்களுக்குக் காலையில் சென்று, ஆங்கு மோரை விற்றுவிட்டு, நண்பகற் பொழுதிற்குள் வீடு திரும்புபவள்; பின்னர்க் கொல்லையில் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் தாயின் பணியைத் தான் ஏற்றுக் கொண்டு, மாலைவரை இருந்து மேயவிட்டு ஓட்டி வருவாள்.

மயிலின் கழுத்து மின்னுவது போல், மைபோலும் கருநிறம் வாய்ந்தது அவள் மேனி என்றாலும், நல்ல அழகி அவள். பணைபோல் பருத்த தோள்கள்; இளம் மாவடுவை இரண்டாகப் பிளந்து வைத்தாற் போலும் பெரிய விழிகள்; முல்லை அரும்பும், மயில் இறகின் அடியும்போல்

வரிசையாக அமைந்த வெண்பற்கள்; பிறைபோல் வளைந்து சிறுத்த நெற்றி; சீறடி; சிற்றிடை; இத்தகைய உறுப்பு நலங்களை உடையவள் அவள். அவளை ஒரு முறை கண்ட கண்கள், வேறு ஒரு பெண்ணை நோக்க விரும்பா; அவள்மீது சென்ற பார்வை எளிதில் மீளாது; அவளைக் கண்டால் காமனும் தோற்று விடுவன்; தன் கைப்படையை நழுவவிட்டு நடுங்குவன்.

நாள்தோறும் அவள் மோர்க் கூடை சுமந்து செல்வதை, அவள் செல்லும் வழியில் குறுக்கிட்டு ஓடும் கானாற்றங்கரையில், செம்முல்லைக் கொடியும், காயாம் பூவும் மலர்ந்து மணக்கும் பொழில் நிழலில் தன் மாடுகளை மேயவிடுத்துக், கால் கடுக்காவாறு கோலூன்றி நின்று காத்துக் கிடக்கும் இளைஞன் ஒருவன் கண்டு, காதல் கொண்டான்.

ஒருநாள், அவள் வழக்கம் போல், மோர் விற்றுவிட்டு வெறுங் கூடையோடு வந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து விட்டான் அவன்; அன்று, அவன் காதல் வெறி பிடித்து அலைந்தது; அதனால் வருவாளை வழிமறித்து நிறுத்தினான். "பெண்ணே! பகை வெல்லும் பக்குவம் தெரிந்த நம் பாண்டி நாட்டுப் படை, ஓரிடத்தே பெருகியும், ஓரிடத்தே குறுகியும் நின்று போரிட்டுப் பகைவரை வென்று அழிப்பதுபோல், அல்குலும், தோளும், கண்ணும் அகன்று காட்ட, அடியும், இடையும், நுதலும் சிறுத்துக் காட்டச் சிரித்த முகத்தோடு வருகின்றவளே! உன் பேரழகின் வடிவு காணின், காமனும் படை விட்டு வருந்துவன் என்றால், என் நிலை யாதாம்! பாண்டியர் படை எடுப்பின், பகைவர் உயிர் இழத்தல் உறுதியாவது

போல், உன் பேரழகுப் படை என் உயிரைப் போக்கி விடுகிறது. ஏடி! பெண்ணே! இவ்வாறு வருத்த, நான் உனக்கு என்ன பிழை செய்தேன்?" எனக் கூறித் தன் காதல் நோயைக் காட்டிக் கொண்டான்.

மோர் விற்கச் செல்பவள், வழியில் மாடுமேய்த்துக் கிடக்கும் அவனை நாள்தோறும் காண்பாள்; அவன் தலையில் சூடிக் கொள்ளும் காயாம்பூக் கண்ணி, கட்டி யிருக்கும் கருமை கலந்த செந்நிற ஆடை, இவற்றோடு கூடிய அவன் அழகுத் தோற்றம், கோலூன்றி நின்றவாறே நிரை காக்கும் அவன் கடமையுணர்ச்சி ஆகிய அவன் அகப்புற நலங்களைக் கண்டு, அவளும் அவன் மீது காதல் கொண்டிருந்தாள். ஆனால், அதைக் காட்டிக் கொள்ள வில்லை; அவள் பெண்மை அவளைத் தடுத்து விட்டது; மேலும், அவ்வழியாகத் தன்னைப் போல் செல்லும் மகளிர் பலராவர்; இவன் தன்னைக் கண்டு காதல் கொள்வது போன்றே, அம் மகளிர்பாலும் மனம் பறிகொடுத்திருப்பனோ என்ற ஐயம் அவளுக்கு. அதைத் தீர அறிந்து கொள்ளாது, அவனோடு தொடர்பு கொள்ளுதல் கூடாது என்று எண்ணினாள். அதனாலும் அவள் தன் காதலைக் காட்டிக் கொள்ளவில்லை. மாறாக, அவனை வெறுப்பவள்போல் நடந்து கொண்டாள்.

அதனால், அன்றுவரை அவனை எதிர் நின்று நோக்குவதோ, அவனோடு பேசிப் பழகுவதோ செய்யாது சென்றவள், அன்று அவன் தன்னை வழிமறிக்கவே, அவனோடு பேசத் துணிந்தாள். பேசத் தொடங்கியவள், அவனோடு பேசக் கிடைத்த இந் நல்வாய்ப்பைப் பயன் கொண்டு, அவன் உள்ளத் தூய்மையை உணர

விரும்பினாள். அதனால், அவனை வெறுப்பவள் போல் நோக்கி, "ஏடா! என் தாய் தந்தையர் ஆயர் குலத்தவர்; அவ்வாயர் பெற்ற மகள் நான். அதனால் எம் குலத் தொழிலாகிய மோர் விற்பது மேற்கொண்டு வாழ்கிறேன்; அதில் ஏதும் குறையில்லை. அதில் குறை காணும் நீயும் ஓர் ஆயனோ! உறுதியாக நீ ஆயன் அல்லை; நீ உண்மை யான ஆயனாயின், கோலூன்றி நின்று, நிரைகளைக் கருத்தோடு காக்கக் கடமைப்பட்ட நீ, அதை மறந்துவிட்டு, வழிவரும் மகளிர் மேல் விழி வைத்து நிற்பையோ? அவ்வாறு நிற்க, நீ என்ன, ஞாயிற்றின் மகன்போல், உலகு காக்கப் பிறந்தவனோ?" எனக் கூறிக் காதலை மறந்து கடமை நெறி நிற்பவள் போல் நடித்தாள்.

அவள் கூறிய கடுசொல் அவன் உள்ளத்தைப் புண் படுத்தி விட்டது; அவளோடு மேற்கொண்டு சொல்லாட வும் அஞ்சினான். ஆயினும் அவள் அழகுத் தோற்றம், அவனை அடிமை கொண்டு விட்டது. அதனால், "பெண்ணே! உன் பேரழகு பிறரால் பாராட்டப் பெறாது பாழாகிறது; உன் அழகை நீயே பாராட்டிக் கொள்வதில் பெருமையில்லை; இதை உணராத நீ எனக்கு அறிவூட்ட வந்து விட்டாய்; உன்னோடு பேசி வெல்ல வல்லவர் யார்? உன்னோடு நான் வாய் திறக்கவில்லை!" எனத் தன்காதலும் கலக்கமும் ஒருங்கே தோன்றக் கூறினான்.

அது கேட்ட அவள், "சரி, அங்ஙனமாயின், நீ ஒன்றும் பேச வேண்டாம்; அதை நானும் நின்று கேட்க வேண்டாம்!" எனக் கூறிவிட்டு நடக்க முற்பட்டாள்.

அவள் போகப் புறப்படுவதைக் கண்ட இளைஞன், "பெண்ணே! உன்னோடு பேச விரும்பவில்லை என்று

தான் கூறினேனே ஒழிய, உன்னைப் போக விடுவேன் எனக் கூறவில்லை; ஆகவே, போகாதே; உன்னைப் போக விடேன்!" என்று கூறி வழிமறித்தான்.

வழிமறித்த அவன் செயல் கண்டு, 'நெஞ்சே! இவன் செய்யும் கொடுமையைப் பாரேன்!' எனத் தனக்குள்ளே கூறிக் கொண்டவாறே, அவனை விழித்து நோக்கி, "ஏடா! வழியில் வருவாரும் போவாரும் சொல்லும் சொற்களை யெல்லாம் கேட்டு மயங்கும் குழவிப் பருவத்தள் அல்லள் யான். நீ கூறும் எதையும் நான் கேட்க விரும்பவில்லை. அவ்வாறாகவும், நான் விரும்பாத சொற்களைச் கூறி வழிமறித்து நின்று, என் மோர்க் கூடையைப் பிடித்துக் கொண்டு, 'இது என்ன மோரா? இதன் விலை யாது? இது என்ன பாலா? ஒரு பொற்காசுக்கு எத்தனை ஆழாக்கு? இது என்ன நெய்யா? எவ்வளவு நெல்லுக்கு ஓர் உழக்கு நெய்?' எனக், கடன் வாங்கியவர்களைக் கடன் கொடுத்தவர்கள் வழி மறித்துக் கொண்டு, தாம் கொடுத்த பணத்திற்கு ஈடாக அவர்பால் கொள்ளலாம் பண்டங்கள் என்னென்ன உள எனக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்பதுபோல், உள்ளே வஞ்சம் வைத்து, வேண்டாத வினாக்களை விடுக்கின்றனையே! உன்பால் நான் வாங்கிக் கொண்ட பொருள் யாதோ?" எனக் கேட்டுச் சீற்றம் கொண்டாள்.

அவள் சீற்றம் கண்டு அவன் சிறிதும் கலங்கவில்லை. மாறாக, அவளை நோக்கி நகைத்தவாறே, "பெண்ணே! கானாற்றங்கரையில் உன்னை முதல் முதலாகக் கண்ட அன்றே, உன் கண்களால் என்னை ஆர நோக்கி, எனக்கு உரிய என் உள்ளத்தை உனக்கு உரியதாக ஆக்கிக்

கொண்டு, அதில் உரிமையோடு ஏறி அமர்ந்து கொண்டாயே, அதை மறந்து பேசும் நீ ஒரு கள்ளி யல்லையோ?" என்றான்.

அவன் சொல் அவளுக்கு மகிழ்ச்சி அளித்தது. அவன் உள்ளத்தை அவள் புரிந்து கொண்டாள். அதனால், அவள் மனம் சிறிதே நெகிழ்ந்தது; அதனால் சொல்லில் பொய்யாகவும் சினம் கலக்க அவளால் இயலவில்லை; பொய்ச் சினம் காட்டவும் மறந்து விட்டாள். அதனால், "ஏடா! உன் நெஞ்சை நான் அடிமை கொண்டேன் என்று கூறுகின்றனையே, அதனால், எனக்கு என்ன பயன்? அது எனக்கு எளிதும் அல்லவே? உன் நெஞ்சு, புனத்தில் பயிர்த் தொழில் மேற்கொண்டிருக்கும் என் அண்ணன்மார்க்கு உணவு கொண்டு கொடுக்குமோ? புலத்தில் மாடு மேய்த்துத் திரியும் என் தந்தைக்குக் கறவைக் கலம் கொண்டு கொடுக்குமோ? தினை அரிந்த தாள்களை மேயுமாறு கன்றுகளை அவிழ்த்து விடுத்துக் காத்திருக்கும் தாயை, எனக்குப் பதிலாகச் சென்று அனுப்பிவிட்டுத் தான் காத்துக் கிடக்குமோ? இவற்றுள் எதையும் செய்ய வல்லதன்றே உன் நெஞ்சு! அவ்வாறாகவும், அதை அடிமை கொள்வதில் எனக்கு என்ன பயன்?" எனக் கூறி நகைத்தாள்.

அது கேட்ட அவன், நான் அவள் அன்பிற்கு மீளா அடிமையாதலை அவள் விரும்புகிறாள்; அவ் அன்பில் குறை நேர அவள் விரும்பவில்லை என்பதையே அவள் சொற்கள் அறிவுறுத்துகின்றன என உணர்ந்தான். அதனால், "பெண்ணே! நீ ஏவும் தொழில் அத்தனையும்,

என் நெஞ்சு ஏற்றுச் செய்யும். அதற்கு யானும் உடன் படுகிறேன்!" என, உறுதி உரைத்தான்.

உறுதி உரைத்தவன், தன் உறுதி உரையால் அவள் உள்ளம் தேறித், தன் காதலுக்கு உடன்பட்டிருப்பள் எனத் துணிந்தான். அதனால், அவளை அணுகி, "பெண்ணே! ஊர் மிக மிக அண்மையில் உளது; அங்கு மோர் கடையும் ஓசை இங்கு நன்றாகக் கேட்கும். அவ்வளவு அண்மையில் உள்ள ஊருக்குப் போக, இவ்வளவு விரைவு வேண்டிய தில்லை. மேலும், பொழுதோ நண்பகற்பொழுது. வெய்யி லின் வெப்பம் தாங்க முடியவில்லை. வழியும், கால் வைக்க இயலாவாறு, காய்ந்து கிடக்கிறது; அத்தகைய கொடுமை மிக்க வழியில், கால் கொப்புளிக்க இப்பொழுதே செல்ல வேண்டாம். பெண்ணே! முல்லையும் தளவமும் மலர்ந்து மணக்கும் காயாம் பூஞ்சோலையைக் காண்; அதை அடுத்துத் தோன்றும், பெண் யானை படுத்து உறங்குவது போலும், பெரிய பெரிய பாறைகளைப் பார்; வெட்டி வைத்த பனங்காயில் விளங்கும் நுங்குக் குழிகள் போல், அப்பாறைகளில் ஆங்காங்கே கிடக்கும் சிறு சிறு சுனைகளையும், நுங்குக் குழியின் சுவை மிக்க நீரேபோல், அச்சுனைகளில் நிறைந்து வழியும் குளிர்ந்த நீரையும் பார்; அச்சுனைகளில் நீராடி, அம்மலர்களைப் பறித்துச் சூடி, அப்பொழிலில் மகிழ்ந்து விளையாடிப், பின்னர் வெய்யி லின் வெப்பம் தணிந்த மாலைப் பொழுதில் உன் மனை புகலாம்," என நயமாகக் கூறி வேண்டிக் கொண்டான்.

ஒருத்தி ஒருவனை மட்டுமே மணக்க வேண்டும் என்ற விதியிருப்பது போல், ஒருவன் ஒருத்தியை மட்டுமே மணத்தல் வேண்டும் என்ற கற்பு நெறி கற்றவள்

அப்பெண். அதனால் இவன்பால் அக் கற்புநெறி இல்லை யானால், இவனை மணந்து நடத்தும் இல்லறத்தில் இன்பம் காண்பது இயலாது என்று அஞ்சினாள்; அதைக் குறிப்பாக உணர்த்தவே உன் நெஞ்சு என்றென்றும் எனக்கே அடிமையாக வேண்டும் என்றாள். அவனும் அதற்கு உறுதி அளித்தான். ஆனால், அவன், தான் குறிப்பால் கூறியதன் பொருள் அறிந்து உறுதி அளித்திருப் பனோ என்று ஐயப்பட்டாள். அவனுக்குத் தன் கருத்தைக் குறிப்பால் உணர்த்துவதை விடுத்து, விளக்கமாகக் கூறி, அவன் மனக் கருத்தை அறிந்து கொள்ளுதல் வேண்டும்; அதன் பின்னரே அவனை மணக்க மனம் இசைதல் வேண்டும் என்று எண்ணினாள். அதனால், அவனைப் பார்த்து, “ஏடா! நீ மாடு மேய்க்கும் இவ்வழியாகச் செல்லும் மகளிர் பலர்; அவர்களைப் பார்த்துப் பழகியும் உள்ளாய் நீ; அவர்களில் பலர், உன் உருவும் உரையும் கண்டு, மயங்கியிருப்பர்; மேலும், நீ மேய்க்கும் மாட்டு மந்தையில், ஓர் ஏறு பல பசுக்களின் பின் கூசாது திரிவதைப் பார்த்துப் பார்த்துப் பழகிய நீ, பல மகளிரை மணந்து வாழ்வதில் தவறு இல்லை என எண்ணவும் கூடும்; மகளிரை மயக்குவதில் அரிய திறன் உண்டு உனக்கு; கண் விழித்துக் காத்துக் கொண்டிருக்கும் போதே அடித்துக் கொண்டு போகும் கள்வன் நீ; அதனால், உன்னால் நான் பயன் பெறுவதோ, என்னால் நீ பயன் பெறுவதோ இயலாது. ஆகவே, உன் காதல் மொழிகளை என்பால் கூறுவதை விடுத்து, உன் மொழி கேட்டு மயங்குவாரிடத்தில் சென்று கூறு,” எனக் கூறினாள்.

அவள் கூறிய குற்றச் சாட்டினைக் கேட்டு அவன் வருந்தினான். “பெண்ணே! நீ கூறியவாறு, நான் மகளிர்

பலரைப் பார்த்துள்ளேன், பார்த்ததினால்தான் ஒரு பேரழகியின் பெருமையைக் காண முடிந்தது. நான் பார்த்த மகளிர் பலர். ஆனால், அவருள் ஒருத்திக்கேனும், உன்பால் உள்ள அழகில் ஒரு சிறு கூறும் இல்லை. இது உண்மை. காதல் நோயால் வருந்தும் என்னைக் கொல்வது போல் நோக்கும் கருவிழிகள்; கூரிய பற்கள்; அன்று கொய்த மாந்தளிர் போலும் மென்மையும் நிறமும் வாய்ந்த மேனி. இந்த அழகு அவருள் ஒருத்திக்கேனும் இல்லை. உன்னைக் காட்டிலும் சிறந்தவள் இம் மண்ணுலகில் எவருமே இல்லை. இதை நான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன்; அதன் பயனாகவே, என் காதலியாய் உன்னை ஏற்றுக் கொண்டேன். இது உண்மை; நீ கருதுமாறு நான் கருத்தால் பிழையுடையேனல்லன். நம் குலக் கடவுளாம் திருமால் அடிகளைத் தலையால் வணங்கிக் கையால் தொட்டுச் சூளுற்றுக் கூறுகிறேன், நான் கூறுவது உண்மை!" எனக் கூறிச் சூளுற்றான்.

சூளுற்ற பின்னரும் அவனை மறுப்பது மாண்பா காது என்று எண்ணினள் அப்பெண். ஆயினும், அவனைக் கண்டு பழகிய அவ்வூர்ப் பெண்களுக்கு அவள் சிறிது அஞ்சினாள். அவனை மணக்கத் தன்னைப் போலவே பேராசை கொண்டிருக்கும் அப் பெண்கள், அவன் தனக்குச் சூளுற்றதை அறியாமல், அவனை மணக்க முன்வரினும் வருவர்; அவ்வாறு வருவார்க்குத் தன் முடிவினைக் கூறி, இவன், அவர் ஆசையை அழிப்பதும் செய்வன்; என்றாலும், அத்தகைய இடர்ப்பாடு உண்டாகாவாறு காத்துக் கொள்வது பெரிதும் நலமாம். வருமுன் காப்பவனே விழுமியோன் ஆவன், என

எண்ணினாள். அதனால், "அன்ப, உன் காதலை ஏற்றுக் கொள்கிறேன்; ஆயினும், கலந்து பழக இது ஏற்ற இடமன்று; அதற்கு ஏற்ற காலமும் இஃது அன்று. இன்று மாலை, எங்கள் சிறு குடியில், நம் நாடாளும் பாண்டியன் பல்லாண்டு நெடிது வாழ்க என வாழ்த்த வேண்டிக் கடவுளை வணங்கிக் குரவைக் கூத்தாடுவர். அக்காலமே ஏற்ற காலமாம். அப்பொழுது, எங்கள் தோட்டத்தில், காஞ்சி மரத்தின் கீழ் வந்திருப்பேன்; குரவைக் கூத்தைக் காண வந்திருக்கும் அப் பெண்கள்–அவர்கள்தாம், நீ பலமுறை பார்த்துப் பழகியவர்கள், உன்னை மணக்க மனப்பால் குடித்திருக்கும் மங்கையர்–உன் வருகையை, உன்னை நேரில் கண்டோ, நீ வரும் அரவம் கேட்டோ அறிந்து கொள்ளா வகையில், மறைந்து வந்து சேர்வாயாக!" என இசைந்து, விடைபெற்று வீடு சென்றாள்.

"இகல்வேந்தன் சேனை இறுத்தவாய் போல
அகல் அல்குல், தோள், கண் என மூவழிப் பெருகி,
நுதல், அடி, நுசுப்பு என மூவழிச் சிறுகிக்,
கவலையால் காமனும் படைவிடு வனப்பினோடு
அகல் ஆங்கண் அணைமாறி அமைந்து பெயருங்கால்
நகைவல்லேன் யான் என்று என் உயிரோடு படைதொட்ட
இகலாட்டி! நின்னை எவன் பிழைத்தேன், எல்லா! யான்:

அஃது அவலம் அன்றுமன.

ஆயர் எமரானால், ஆய்த்தியேம் யாம்மிகக்;
காயாம்பூங்கண்ணிக்; கருந்துவர் ஆடையை
மேயும் நிரைமுன்னர்க் கோல் ஊன்றி நின்றாய்

ஆயனை அல்லை? பிறவே அமரருள்
ஞாயிற்றுப் புத்தேள் மகன்!

அதனான் வாய்வாளேன்.

முல்லை முகையும், முருந்தும் நிரைத்தன்ன:
பல்லும் பணைத்தோளும் பேரமர் உண்கண்ணும்
நல்லேன் யான் என்று நலத்தகை நம்பிய
சொல்லாட்டி! நின்னொடு சொல்லாற்றுகிற்பார் யார்?

சொல்லாதி.

நின்னைத் தகைத்தனேன்; அல்லல்காண் மன்
மண்டாத கூறிமழகுழக்கு ஆகின்றே
கண்ட பொழுதே கடவரைப் போலநீ
பண்டம் வினாய படிற்றால் தொடீஇயநிற்
கொண்டது எவன், எல்லா? யான்?

கொண்டது,

அளைமாறிப் பெயர்தருவாய்! அறிதியோ? அஞ்ஞான்று
தளவமலர் ததைந்ததோர் கானச்சிற் றாற்றயல்,
இளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினால் என்நெஞ்சம்
களமாக்கொண்டு ஆண்டாய்; ஓர் கள்வியை அல்லையோ?

நின்நெஞ்சம், களமாக்கொண்டு யாம் ஆளல் எமக்கு
எவன் எளிதாகும்?
புனத்துளான் எந்தைக்குப் புகாஉய்த்துக் கொடுப்பதோ?
இனத்துளான் என்னைக்குக் கலத்தொடு செல்வதோ?
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ?

அனைத்தாக.
வெண்ணெய்த் தெழிகேட்கும் அண்மையால்;

சேய்த்தன்றி
அண்ணணித்து ஊராயின், நண்பகல் போழ்தாயின்,
கண்நோக்கு ஒழிக்கும் கவின்பெறு பெண்ணீர்மை
மயில் எருத்து வண்ணத்து மாயோய்! மற்றுஇன்ன
வெயிலொடு எவன் விரைந்து சேறி? உதுக்காண்,

பிடிதுஞ்சு அன்ன அறைமேல, நுங்கின்
தடிகண் புரையும் குறுஞ்சுனை ஆடிப்,
பணிப்பூந் தளவொடு முல்லை பறித்துத்
தனிக்காயாந் தண்பொழில் எம்மொடு வைகிப்
பனிப்படச் செல்வாய், நும் ஊர்க்கு.

இனிச்செல்வேம் யாம்.

மாமருண் டன்ன மழைக்கண் சிற்றாய்த்தியர்
நீமருட்டும் சொற்கண் மருள்வார்க்கு உரை அவை;
யாமுனியா ஏறுபோல் வைகல் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாய் ஓர் கட்குத்திக் கள்வனை;
நீ எவன் செய்தி பிறர்க்கு?

யாம் எவன் செய்தும் நினக்கு?

கொலை உண்கண், கூர் எயிற்றுக்கொய்தளிர் மேனி
இனைவனப்பின் மாயோய்! நின்னிற் சிறந்தார்
நிலவுலகத்து இன்மை தெளி நீ; வருதி;
மலையொடு மார்பு அமைந்த செல்வன் அடியைத்
தலையினால் தொட்டு உற்றேன் சூள்.
ஆங்கு உணரார் நேர்ப; அது பொய்ப்பாய் நீ ஆயின்,
தேங்கொள் பொருப்பன் சிறுகுடி எம் ஆயர்
வேந்தூட்டு அரவத்து நின் பெண்டிர் காணாமல்
காஞ்சித் தாது உக்கன்ன தாதெரு மன்றத்துத்

தூங்கும் குரவையுள் நின் பெண்டிர் கேளாமை
ஆம்பல் குழலால் பயிர் பயிர்; எம் படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேம் குறி."

*தலைவனும் தலைவியும் ஆற்றிடை எதிர்ப்பட்டுத் தலைவி அவன் பரத்தமை கண்டு ஊட, அவன் சூளுற்றுத் தெளிக்க, அவள் ஊடல் தீர்ந்து குறியிடம் கூறியது.*

1. இறுத்தவாய் – தங்கிய இடம்; 5, அகல் – ஆங்கண் ஊர்; அளைமாறி – மோர்விற்று; 7. இகலாட்டி – மாறுபடுபவளே; 8. அஃது மோர் விற்பது; 13, புத்தேள் – கடவுள்; 14. வாய்வாளேன் - வாய் திறவேன்; 18. சொல்லாற்றுகிற்பார் – பேச்சுக் கொடுப்பவர்; 19. சொல்லாதி – சொல்லாதே; 20, தகைத்தனேன் – தடுத்தேன்; 21. மண்டாத – விரும்பாதனவற்றை; 22. கடவர் – கடன்பட்டவர்; 23. படிற்றால் – தன்மையால்; நிற்கொண்டது – நின்பால் கொண்டது. 27. தளவம் – செம்முல்லை; ததைந்த – நெருங்கி வளர்ந்த, 29. தளமா – இருப்பிடமாக; 31. புகா – உணவு; உய்த்துக் கொடுப்பதோ – கொண்டு கொடுக்குமோ? 35. தெழி – கடையும் ஒலி; 36. அண்ணணித்து – மிகவும் அண்மைக்கண்; 40. துஞ்சுஅன்ன – தூங்கினாற்போல்; அறை – சிறுகுன்று; 40. தடிகண் – வெட்டிய நுங்குக்குழி; புரையும் – ஒக்கும்; 48. யா – பசுக்களை; முனியா – வெறுக்காத; 49. கட்குத்தி – பார்த்திருக்கும் பொழுதே கவர்ந்து கொள்பவன்; 53. இனைவனப்பு – இத்தகைய அழகு; 58. தேங்கொள் பொருப்பன் – பாண்டியன்; 59. வேந்தூட்டு அரவம் – வேந்தன் வாழத் தெய்வத்திற்குப் பலியிட்டு வழிபடும் விழா; ஆரவாரம்; பயிர் – ஒலித்துக் கூப்பிடு.

# 9

## மோரோடு வந்தாள்

அழகும் இளமையும் ஒருங்கே வாய்ந்த ஆயர் மகள் அவள். காதில் குழை; கழுத்தில் வடம்; கூந்தலில் தாய் சூட்டிய கண்ணி; இவற்றால், அவள் அழகு மேலும் சிறந்து விளங்கிற்று. அத்தகையாள், தலையில் மோர்க் கூடை ஏந்திச் சென்று, மாநகர் வீதிகளில் "மோரோ மோர்!" என விலை கூறி விற்று விட்டு, அதற்கு விலையாகப் பெற்ற நெல், கூடை நிறைய நிறைந்து விடுவதால், மகிழ்ச்சியால் மிகுந்து, கை வீசி நடந்து, வீடு வந்து சேர்வள்; இந்நிகழ்ச்சி நாள்தோறும் நிகழும்.

அவள், தயிர்க் கூடையைத் தலையில் சுமந்து செல்லும்போதும், நெல் நிறைந்த வட்டியோடு வீடு திரும்பும்போதும், ஒவ்வொரு நாளும், அவள் செல்லும் வழியில் இருந்து, அவளைப் பார்த்து, அவள் பேரழகால் அறிவு பிறழ்ந்து வருந்தினான் ஓர் இளைஞன். காதல் நோய் மிக்க அவ்விளைஞனால், தன் காதலை அவளுக்கு

அறிவித்து, அவள் அன்பைப் பெறுவது இயலாது போயிற்று. ஆயர்குல வழக்கப்படி ஏறு தழுவி அவளை அடைதற்கும் வாய்ப்பில்லை. அவள் தந்தை, அவளுக்கு மண முயற்சி மேற்கொண்டு, 'ஏறு தழுவ வருக!' என இன்னமும் பறையறையவில்லை. மேலும், ஏனைப் பெண்கள்பால் சென்று, காதல் பேச்சுக்கள் பேசுவது போல், அவள்பால் பேசுவது இயலாது; அவள் பிறந்த குடி அத்துணைச் சிறப்புடையது; மேலும், அவள் பெரிய கோபக்காரி.

அதனால், அவள் அருகிற் செல்ல அஞ்சிச் சேய்மைக் கண் இருந்தவாறே அவள் அழகைக் கண்டு கருத்திழந்த அவன், "மழை காலத்தில் பெய்தமையால் நிறையப் புல் முளைத்திருக்கும் காவல் அமைந்த நிலத்தில் புகுந்து, நெடிதுபொழுது நின்று, அப்புல்லை வயிறார மேய்ந்து, நீர் குடித்து, நிழலில் உறங்கிக் குடம் குடமாகப் பால் கறக்கும் நல்ல வளம் மிக்க, பசுக் கூட்டத்தில், 'இதன் உடல் வளத்தைப் பார்; இதன் நடையைப் பார்; இது தரும் பாலின் அளவைப் பார்; அப்பாலின் சுவையைப் பார்!' எனப் பிற பசுக்களுக்கு எடுத்துக்காட்டாகக் கூறத்தக்க வளம் மிக்க ஒரு பசு, போர் என்றவுடனே பாயவல்ல கொல்லேற்றோடு கூடிப் பெற்ற ஒரு காளைக்கன்று, வளர்ந்து வன்மை பெற்ற நிலையில் வண்டியில் பூட்டப் பெற்று, அதை ஈர்த்துச் செல்லுங்கால், இளமைச் செருக் கால் இறுமாந்து செல்வதுபோல், தலையில் தயிர்க்கூடை விளங்க, சிற்றூர் மக்களும், பேரூர் மக்களும் இவள் வருகை கண்டு மகிழ்ந்து ஆரவாரிக்கப் பெருமித நடை போட்டு நடந்து வரும் நடை அழகை, நெஞ்சே! நீ பார்! இவள்

இன்னாள் போல் உள்ளாள் என எவரோடும் உவமை காட்டிக் கூறலாகா இவள் அழகின் திருவுருவைப் பார்!" எனக் கூறிப் புலம்பிப் பெருமூச்செறிந்தான்.

"நெஞ்சே! இவள் தாய் அருமையாகப் பறித்து அழகாகச் சூட்டிய கண்ணி, இவள் கூந்தலில் ஒரு புறமே சரிந்து தொங்கும் சீரைப் பார்; கூந்தலில் சூட்டிய மலரையும் தாங்க மாட்டாது தளரும் இவள் இடை யழகைப் பார்; இவள் அழகால் என் உள்ளம் வேகிறது; இவள் என்னை மட்டுமோ வாட்டுகிறாள்? முற்றுந்துறந்த முனிவர்களையும் துன்புறுத்த வல்லதன்றோ இவள் கண்ணழகு? இவள் கண் ஒன்றோ வருத்துகிறது? இவள் உடலின் ஒவ்வொரு உறுப்பும் என்னை வருத்துகின்றதே! இவள் உடல் உறுப்புகளெல்லாம், வருத்தும் தொழில் மேற்கொண்ட கண்களாக மாறிக் காட்சி அளிக் கின்றனவே!" எனக் காதல் நோய் மிகுந்து கதறிக் கதறிப் புலம்பினான்.

அவன் அவ்வாறு புலம்பிக் கொண்டேயிருந்தான்; தயிர்க் கூடையோடு போனவள் திரும்பி விட்டாள்; வரும் போது தயிர்க் கூடையோடு, தயிருக்கு விலையாகப் பெற்ற வகை வகையான நெல் நிறைந்த வட்டியொன்றையும் உடன் கொண்டு வந்தாள். தயிர்ப் பானை வெறும்பானை தானே என்ற துணிவு; சுமையடையைப் பொருந்த வைக்க வேண்டும் என்ற எண்ணமும் அவளுக்கு இல்லை. இடுப்பில் உள்ள நெல் வட்டியை மட்டும் ஒரு கையால் தழுவிக் கொண்டாள்; மோர் விலையாகி விட்டது; அதுவும் அத்துணை விரைவில்; அவ்வளவு பெருவிலைக்கு என்ற மகிழ்ச்சி; அதனால், கைவீசி நடந்தாள். நடை விரைவால், காதிலும் கழுத்திலும் தொங்கிய மகரக்குழை

ஆடி ஒளிவீசின; குலுங்கக் குலுங்க நடக்கும் நடையால், உருவு சிறுத்து, ஒருவர்க்கும் புலனாகாத இவள் இடை, ஒடிந்து வீழ்வதுபோல் ஆடிக் காட்டிற்று.

அழகின் திருவுருவம் நடந்து வருவது போல் நடந்து வரும் அவளை இளைஞன் கண்டான். காமவெறி தலைக்கேறி விட்டது; அழகின் பிறப்பிடம் எனப் பாராட்டப் பெறும் திலோத்தமை, ஊர்வசி என்ற தேவ மகளிர் இருவரும், தங்கள் அழகையெல்லாம் இவள்பால் தந்து விட்டனரோ? இவள் இத்துணை அழகாய்க் காட்சியளிக்கின்றனளே! இவள் அழகைக் கண்டு நான் வருந்துவது ஒரு வியப்போ? இவள், பால்மடை ஏந்திக் காமவேள் கோட்டம் புகுந்தால், இணையிலா அழகி இரதிதேவியின் கணவனும், காதற் கடவுளுமான அக் காமவேளும் இவள் அழகால் அறிவிழந்து, தன் கைப்படை அழிய அழுது வருந்துவன். அவனே அவ்வாறாயின், என் நிலை என்னாம்?

“நெஞ்சே! இவள் அழகிதான்; ஆனால் அவள்பால் அழகிருக்குமளவு அன்பு இல்லை; தன்னைக் கண்டவர் உள்ளத்தில் காதல் நோயை உண்டாக்கத் தெரிந்த இவளுக்கு, அதைப் போக்கி இன்பம் தரத் தெரியவில்லை; தெரியவில்லை என்பதன்று; தான் தந்த நோயைத் தானே போக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் இல்லை. இவ்வாறு, தன் கண்ணில் படும் ஆடவர்களைத் தன் ஆசைக்கு அடிமையாக்கிக் கொள்ள வல்லவள் இவள் என்பதை அறிந்து கொண்டமையாலன்றோ, இவ்வூர்ப் பெண்கள், ‘ஏடி! பெண்ணே! நாங்கள் மாங்காய் ஊறுகாய் வைத்து உண்ணக் கற்றுக் கொண்டோம். இனி எங்களுக்கு மோர் வேண்டாம்; இனி மோர்க் கூடையேந்தி

இங்கு வர வேண்டாம்; அதோ, உன் தாயும் தமரும், உன் தோழியரும் புறப்பட்டு விட்டார்கள். அவர் அருகில் இருப்பதால், ஆடவரை மயக்கும் உன் ஆணவம் அடங்கும். ஆகவே, எழுந்து அவரோடு செல்,' என்று கூறி இவளை விரட்டுகின்றனர்; விரட்டுவதோடு அமையாது, இவள் மாலையிலும் வரக்கூடும்; ஆகவே, இவள் வருகை அறிந்து இவளை விரட்டுவதினும், தம் கணவர்மார் இவளைக் காணாதிருத்தற் பொருட்டு, அவரை இரவு பகல் எப்பொழுதும் வீட்டிற்குள்ளேயே வைத்து, அவர் வெளியே செல்லாவாறு வாயில் அடைத்துக் காத்துக் கொள்வதே நலமாம், எனத் துணிந்து, அவ்வாறே இவளுக்காக, விருந்தினர்க்கு அடையாத தம் வாயில்களை அடைத்து வாழ்கின்றனர். அத்தகைய கொடிய அழகியன்றோ இவள்!" எனக் காம நோய் மிகுதியால் கலங்கி ஏதேதோ கூறித் துயருற்றுக் கிடந்தான்.

"கார் ஆரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
பேராது சென்று பெரும்பதவப் புல்மாந்தி,
நீரார் நிழல குடம்சுட்டு இனத்துள்ளும்,
போர் ஆரா ஏற்றின் பொருநாகு, இளம்பாண்டில்
தேர் ஊரச் செம்மாந்ததுபோல் மதைஇனள்;
பேரூரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள்போல்
மோரோடு வந்தாள் தகை கண்டை; யாரோடும்
சொல்லியாள் அன்றே வனப்பு!

பண்ணித் தமர் தந்து ஒருபுறம் தைஇய
கண்ணி எடுக்கல்லாக் கோடு ஏந்து அகல் அல்குல்;
புண்நில்லார் புண்ணாக நோக்கும்; முழுமெய்யும்
கண்ணளோ, ஆயமகள்?

இவள்தான், திருத்தாச் சுமட்டினள், ஏனைத் தோள்வீசி
வரிக்கூழ வட்டி தழீஇ, அரிக்குழை
ஆடற்றகையள்; கழுத்தினும் வாலிது!
நுண்ணியதாய்த் தோன்றும் நுசுப்பு;

இடைதெரியா ஏளர் இருவரும் தத்தம்
உடைவனப்பெல்லாம் இவட்கு ஈத்தார் கொல்லோ?
படையிடுவான்மன்கண்டீர் காமன், மடையடும்
பாலொடு கோட்டம் புகின்.

இவள்தான், வருந்த நோய் செய்து இறப்பின் அல்லால்,
மருந்தல்லள்:
யார்க்கும் அணங்காதல் சான்றாள் என்று ஊர்ப்பெண்டிர்,
மாங்காய் நறுங்காடி கூட்டுவேம்; யாங்கும்
எழுநின் கிளையோடும் போகென்று தத்தம்
கொழுநரைப் போகாமல் காத்து முழுநாளும்
வாயில் அடைப்ப வரும்."

*காமம் - சாலா இளமையுடையாள் ஒரு தலைவியை - ஒரு தலைவன் காதலித்துத் தீராக் காதல் நோயுற்றுத் தானே வருந்திக் கூறியது இது.*

1. கார் — மழை, ஆர — நிறைய, கடிகொள் — காவல் அமைந்த, 2. பேராது — நெடிது நின்று, சென்று பேராது என மாற்றுக. 4. போர் ஆரா — போர் வெறிமிக்க, பொருநாகு — உவமித்துக் கூறவல்ல பசு, பாண்டில் — வண்டி, 6. கௌவை — ஆரவாரம், 7. தகை — அழகு, 8. சொல்லியாள் — உவமித்துக் கூறத்தகாதவள். 11. புண் நில்லார் — பாவம் தரும் செயல் புரியாத துறவிகள். 14. வரிக்கூழ — வகைவகையான நெல்லைஉடைய, வட்டி — கூடை 15. வாலிது — ஒளி வீசவல்லது. 17. ஏளர் — அழகு 20. கோட்டம் — கோயில்.

**10**

# ஏடா! எமர் காண்பர்!

**நா**ற்புறமும் வேலி சூழ்ந்து நல்ல காப்பமைந்த பெரிய ஆயர்பாடியில், நல்லினத்து ஆயரும், புல்லினத்து ஆயரும், கோட்டினத்து ஆயரும் கலந்து வாழ்ந்திருந்தனர். அவருள் ஆட்டிடையர் குடியில் பிறந்த ஒரு பெண்ணை, மாட்டிடையர் குடியில் பிறந்த ஓர் இளைஞன் காதலித்தான்; ஒரு நாள் அவளை ஊர் மன்றில் கண்டு தன் காதலைக் கூறினான். காதல் இன்றேல் சாதலே தன் துணிவு எனத் தெளிவாக எடுத்துக் காட்டினான். அவன் பிறந்த குடி பசு வளமும், பால் வளமும் மிக்க பெரிய குடி என்பதையும், அவன் அறிவும் ஆண்மையும் அழகும் வாய்ந்தவன் என்பதையும் அறிந்து, அவளும் அவனைக் காதலித்தாள். ஆனால், அவன் காட்டும் அவசரம் அவளுக்குப் பிடிக்கவில்லை. இருவரின் எதிர்கால வாழ்வை வகுக்கும் அந்நிகழ்ச்சியில், அமைதியும், ஆழ்ந்த ஆராய்ச்சியும் தேவை என அவள் எண்ணினாள். அதனால், அவனைக் காதலித்தவள், அதைக் காட்டிக்

கொள்ளாது, அவனுக்கு எதுவும் விடை கூறாது, அவ்விடம் விட்டு அகன்றாள்.

இளைஞன் மிகவும் வருந்தினான்; அவன் சிந்தனை அவளையே சுற்றிச் சுற்றி வந்தது. அவளை விட்டுச் சிறிது பொழுது பிரிந்து வாழ்வதும் அவனால் இயலாது போயிற்று. அவள் காதல் கிட்டாது போயின், தன் வாழ்வு பயனற்றுப் போய்விடும் என அஞ்சினான். அந்நிலையில், மீண்டும் ஒரு நாள், அவளை ஊர் மன்றில் கண்டான்; மோரும் வெண்ணெயும் விற்கும் பணி மேற்கொண் டிருந்தாள் அவள். அவளை ஆங்குக் கண்டதும், காதல் கட்டறுத்துக் கொண்டு ஓடவே, அவன் அவளை ஆரத் தழுவிக் கொண்டான்.

'மோரோ மோர்!' 'நெய்யோ நெய்!' என விலை கூறி விற்றுச் சென்றவள், ஓர் இளைஞன் தன்னைத் திடுமெனத் தழுவிக் கொண்டமையால் நடுங்கிவிட்டாள்; இளைஞன் யார் என்பதை அறிந்ததும், நடுக்கம் நீங்கி, அவன் செயல் கண்டு நகைத்தாள். கட்டித் தழுவிக் கொண்டதைத் தடுக்காது, நகைத்து நிற்பதைக் காணவே, அவள் தன் காதலுக்கு இசைந்து விட்டாள் எனத் துணிந்தான் இளைஞன்; கூட்டத்தை விரும்பிற்று அவன் உள்ளம்; அதை அவளுக்கு மெல்ல அறிவித்தான்.

அது கேட்டாள் அவள், "ஏடா! உன் காதலென்ன தேள்கடி மருந்தோ? மருந்திட்டவுடனே நோய் தீர்ந்து விடுதல் போல், உன் உள்ளத்தில் காதல் வேட்கை தோன்றியதும், கூடித் தீர்ந்துவிட விரும்புகின்றனையே! அவ்வளவு அவசரம் காதல் நிகழ்ச்சியில் கூடாது; மேலும்,

நான் உன்னைக் காதலிக்கிறேன், உன்பால் எனக்கு அன்பு இருக்கிறது என்று யார் கூறினார்கள்? காதலால் கருத்திழந் திருக்கும் உன்நிலை கண்டேன்; ஒரு விளையாட்டு விளை யாட எண்ணினேன்; அதனால், நீ அணைத்துக் கொள்ள இடங்கொடுத்துக் கடிந்து கொள்ளாது விட்டேன்; அதைக் கொண்டு, ஏடா! கூட்டத்திற்கே துணிந்து விட்டாயே! ஏடா! ஒன்று பார்; ஒருத்தர் யாரேனும் மோர் ஆசைப் பட்டால் மோர் விற்பவள், அவருக்குச் சிறிது மோர் வார்ப்பதால் தன் பொருளுக்குப் பெருங்கேடு வந்து விடாது என அறிந்து வார்ப்பாள். ஆனால், மோர் குடித்து மகிழ்ந்த அவர், 'இவள் ஓர் ஏமாளி; வெண்ணெய் வேண்டி னாலும் விரும்பித் தருவள்!' என்று எண்ணி, வெண்ணெய் தருமாறு அவளைக் கேட்பரோ? அவர்தான் கேட்டாலும், அரிய மதிப்பு வாய்ந்த, விலையாகப் பெரும் பொருள் தரவல்ல வெண்ணெயை அவள் தருவளோ? தராள்; அது போலப், பெரியதோர் இழுக்கு இல்லை என்ற உணர்வால் அணைக்க உடன்பட்ட நான், கூட்டத்திற்கு இசைவேன் என எண்ணாதே!" எனக் கூறி அகன்று நின்றாள்.

அவள் அது கூறவே, அவன் உள்ளமும் உடலும் குன்றின; அயர்ந்து விட்டான் அவன். "பெண்ணே! உன் கருத்து அதுவாயின், நன்று. நீ போ. நான் என்ன செய்வேன்? என் வாழ்வின் முடிவு அது!" எனக் கூறித் தளர்ந்தான்.

சிறிது நாழிகைக்கெல்லாம், அடங்கியிருந்த அவன் காதல் கட்டவிழ்த்துக் கொண்டு பெருகிற்று. அதனால், அவளை மீண்டும் நெருங்கி, "பெண்ணே! ஆயர் மகளிர், தயிரை மத்திட்டுக் கடையுங்கால், அம்மத்தில் சுற்றப்

பெற்ற கயிறு, மத்தை விட்டு அகலாது, அதையே சுற்றிச் சுற்றி வருவதுபோல், உன் நலன் பெறும் விருப்பத்தால் உன்னையே சுற்றிச் சுற்றி வரும் என் நெஞ்சு, உன் கடுஞ் சொல் கேட்டதும் அஞ்சி என்பால் ஓடிவந்து விடுகிறது. சிறிது பொழுதிற்கெல்லாம் நின் நினைவு எழவே, மீண்டும் உன்பால் வந்து உன்னை வளைய வளைய வருகிறது. இவ்வாறு, நாள்தோறும் ஒரு நிலையில் நில்லாது தடுமாறுகிறது அது. யான் என் செய்வேன்?

“பெண்ணே! இரவில் தாயருகிற் கிடந்து உறங்கிய கன்றைப், பகலில், அத்தாய்ப் பசுவின் கண்ணிற்படும் அண்மையில் அமைந்துள்ள தொழுவினுள் விட்டு வைக்கின்றனர் ஆயர். தன் கன்றினுக்கு இன்னல் நேர, இது இரவு அன்று; மேலும் அது தான் காணமாட்டாத் தொலைவிலும் சென்று விடவில்லை என எண்ணி, அமைந்திராது, அத் தாய்ப் பசு, தன் கன்றை அடையத் தொழுவைச் சுற்றிச் சுற்றி வருவதுபோல், என் நெஞ்சு, நீ என்னால் எளிதில் மணந்து கொள்ளத் தக்கவள் என்பதை யும், இவ்விடம், பலரும் வழங்கும் மன்றம் என்பதையும், காலம், காதல் விளையாட்டைப் பிறர் கண்டு நகைக்கத் தக்க பகற் காலம் என்பதையும் உணர்ந்திருந்தும், தான் கொண்ட காதல் நோய் மிகுதியால் உன்னையே சுற்றிச் சுற்றி வருகிறது.

“பெண்ணே! மருந்திட்டு வெண்ணெய் எடுத்து விட்ட பச்சைப் பால் காய்ச்சிப் பிரை குத்தினால், இறுகித் தயிராகுமாயினும், அது தன் சுவையிழந்து போதல் போல், என் உயிரும் காதற் பயனை இழந்து விட்டமையால், யாதொரு பயனுமில்லாத நடைபிணமாகி விட்டது; செய்வது அறியாது தளர்கிறது அது!” என்று, எதை

எதையோ கூறித் தன் உள்ளத் துயரை அவளுக்கு உணர்த்தினான்.

அவன் காதல் உறுதி வாய்ந்தது என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அதனால் அவனுக்கு இசைந்து, "ஏடா! அன்று, என்னை ஊர் மன்றத்தில் கண்டு உரையாடிய பொழுது, 'உயர்குடிச் சான்றோர் பெற்ற பெருமகளே! உன் காதல் இன்றேல் என் உயிர் வாழாது!' என்பன போலும் அன்பு மொழிகள் பலப்பல கூறினாய். அவற்றின் உண்மையை அன்று அறிந்திலேன்; இன்று அறிந்து கொண்டேன். ஆயினும், ஈண்டு இனியும் இவ்வாறே நின்று பேசிக் கொண்டிருந்தால், என் பெற்றோர் என்னைத் தேடிக் கொண்டு வந்து விடுவர்; அவர்கள் உன்னைப் பார்த்து விடுவர்; அதனால் நம் காதலுக்குக் கேடாம். இன்றேபோல் நாளையும் வருவேன்; நாளைக்கு மோர் விற்கச் செல்லாது; கன்று மேய்க்கும் கருத்துடையவள் போல், எம் விளைபுலத்திற்கு வருவேன்; ஆங்கு வருக; இன்று, இனியும் நில்லாது நீங்கிவிடுக!" எனக் கூறி அனுப்பிவிட்டுத் தன் வீடு வந்து சேர்ந்தாள்.

"கடிகொள் இருங்காப்பில் புல்லினத்து ஆயர்
குடிதொறும் நல்லாரை வேண்டுதி; எல்லா!
இடுதேள் மருந்தோ நின்வேட்கை? தொடுதரத்,
துன்னித் தந்தாங்கே நகைகுறித்து, எம்மைத்
திளைத்தற்கு எளியமாக் கண்டை; அளைக்கு எளியாள் 5

வெண்ணெய்க்கும் அன்னள் எனக் கொண்டாய்
ஒண்ணுதால்
ஆங்குநீகூறின், அனைத்தாக; நீங்குக.

அச்சத்தால் மாறி அசைவினால் போத்தந்து
நிச்சம் தடுமாறும் மெல்லியல் ஆய்மகள்
மத்தம் பிணித்த கயிறுபோல் நின்நலம்
சுற்றிச் சுழலும் என் நெஞ்சு.

விடிந்தபொழுதிலும் இல்வயின் போகாது
கொடுந்தொழுவினுள் பட்ட கன்றிற்குச் சூழும்
கடுஞ்சூல் ஆநாகுபோல் நிற்கண்டு, நாளும்
நடுங்கு அஞர் உற்றது என்நெஞ்சு.

எவ்வம் மிகுதர, எந்திறத்து எஞ்ஞான்றும்
நெய்கடை பாலின் பயன் யாதும் இன்றாகிக்
கைதோயல் மாத்திரை யல்லது செய்தி
அறியாது; அளித்து என் உயிர்.

அன்னையோ,
மன்றத்துக் கண்டாங்கே, சான்றோர் மகளிரை
இன்றியமையேன் என்று இன்னவும் சொல்லுவாய்
நின்றாய்நீ, சென்றீ; எமர் காண்பர்; நாளையும்
கன்றோடு சேறும் புலத்து."

*தலைவன் தலைவிக்குத் தன் ஆற்றாமை கூற, அவன் கூட்டத்திற்கு இசைந்து குறியிடம் கூறியது இது.*

1. கடி — காவல், இரு — பெரிய, 5. திளைத்தல் — கூடி மகிழ்தல், அளை — மோர்; 13. கொடுந்தொழுவு — வளைத்துக் கட்டப்பெற்ற தொழுவு, 14. கடுஞ்சூல் — முதற்சூல்; ஆநாகு — பசு, 15. அஞர் — துன்பம் 16. எவ்வம் — நோய், 18. செய்தி அறியாது — செய்வது அறியாது 20. அன்னை — அத்தன்மையுடையை 22. சொல்லுவாய் நின்றாய் — சொல்லி நின்றாய், 23. சென்றீ — செல்.

# 11

## சிற்றில் புனைகோ சிறிது!

ஆனிரை ஓம்பும் நல்லினத்து ஆயர் குலத்தில் வந்தவள் அவள். பால் வளம் தரும் பசுக்கள் பல கொண்ட பெரிய குடியில் பிறந்தவள். பெற்றோரால் பேரன்பு காட்டி வளர்க்கப் பெற்றவள். செல்வ வாழ்வால் செருக்குற்றுச் சீரழிந்து போகும் சிறுமைக் குணம் சிறிதும் இல்லாதவள். வளம் கொழிக்கும் வீட்டில் பிறந்தும், வீட்டு வேலைகளை விரும்பிச் செய்யும் விழுமிய குணமுடையவள். ஆனால், வீடே கதி என்று எந்நேரமும் வீட்டினுள்ளேயே அடங்கி யிருக்கவும் அவள் விரும்பாள். வீட்டில் தன் கடமைகள் முடிந்ததும், வெளியே சென்று, தன்னொத்த இளம் பெண்களோடு ஆடியும் பாடியும் அகம் மகிழ்வதில் ஆர்வம் உடையவள். இவ்வாறு புற அழகோடு, அச்சம் நாணம் மடம் முதலாம் அக அழகுகளையும் நிறையப் பெற்றுச் சிறந்து விளங்கினாள், அவ் ஆயர்மகள்.

அத்தகையாள் ஒரு நாள் காலையில் எழுந்தாள். தந்தையும் தமையன்மாரும் கறந்து தந்த பாற் குடங்களை, அவற்றை வைக்க வேண்டிய இடத்தில் கொண்டு சென்று வைத்தாள். புல் மேய்க்க ஓட்டிச் செல்லும் ஆனிரை களோடு ஓடிவிடாவாறு, அவற்றின் கன்றுகளைத் தாம்பு களில் தனித்தனியே பிணித்து, அத் தாம்புகளைத் தன் மனையில் வரிசையாக நிற்கும் கம்பங்களில் கட்டினாள். தன் கடன் முடிந்ததும், தாயிடம் சென்றாள். தாய் அவள் தலையை வாரிப் பூச் சூட்டி விட்டாள்; தாய் அளித்த, பூத்தொழில் அமைந்த கரையும் நீலவண்ண உடலும் கொண்ட உயர்ந்த ஆடையை அழகாக அணிந்து கொண் டாள். தன் வீட்டிற்கு அணித்ததாக இருந்த தோட்டத்திற்கு ஓடினாள். பாங்கர், முல்லை முதலாம் கொடிகள் படர்ந்து, மணம் வீசும் ஆங்கு, ஆட்டிடையர் மகளிரும், மாட்டிடையர் மகளிரும், கோட்டினத்து ஆயர் மகளிரும் கூடி, மணல் வீடு கட்டி மகிழ்ந்தாடக் கண்டாள். அவர் களோடு கலந்து கொண்டு, தானும் ஆடத் தொடங்கினாள்.

சிறிது நேரம் கழிந்தது. இளைஞன் ஒருவன் ஆங்கு வந்தான். அம் மகளிரைப் போலவே, அவனும் ஓர் ஆயர் மகன்; குருந்தம்பூ மலர் கொண்டு கட்டிய மணமிக்க மாலையைத் தன் தலையில் சூடிக் கொண்டு வந்த அவன், அவள் கட்டும் மணல் வீட்டிற்கு அருகே நின்றான். அவளை அவன் முன்னரே அறிவான்; அது மட்டுமன்று; அவள் மீது அவனுக்குக் காதலும் உண்டு. அவளைக் காணும் ஆர்வ மிகுதியினாலே, அவன் அந்நேரத்தில் ஆங்கு வந்தான். வந்தவன், அவள் அருகில் இருந்தவாறே, அவள் அணிகளின் சிறப்பு, அவ்வணிகள் அவளுக்கு

அளிக்கும் அழகின் பெருமை, இப்புற அழகுகளை வெல்லும் அவள் அக அழகு ஆகியவற்றைக் கண்டான். அவள் தன்னால் மணந்து கொள்ளத் தக்க நல்லவளாதல் அறிந்து மகிழ்ந்தான். மகிழ்ச்சி மிகுதியால் தன்னை மறந்தான்; அவன் வாய், அவனை அறியாமலே, அவள் நலங்களை வாய் விட்டுக் கூறிப் பாராட்டிற்று.

குனிந்து மணல் வீடு கட்டிக் கொண்டிருந்தவள், குரல் கேட்டுத் தலை நிமிர்ந்து அவனை நோக்கினாள். அவனை அவளும் அறிவாள்; அவனைப் போலவே, அவளுக்கும் அவன் மீது காதல் உண்டு. இருவரும் அதற்கு முன்னரே பலமுறை கண்டு பழகியுள்ளனர். ஆனால், அன்று அவனைக் கண்டதும் அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி பிறக்கவில்லை. மாறாக, அவள் மனம் அவனை மிகவும் வெறுத்தது. தன்னைக் கண்டு, தன் மீது காதல் கொண்டு பலநாள் பழகிய பினனரும், விரைந்து வந்து வரைந்து கொண்டிலனே என்ற வருத்தம் அவளுக்கு. அதனால் வரைவிற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளாது, வறிதே வாளா வந்து நிற்கும் அவனைக் கண்டும், காணதவள் போல், தன் கருத்தை மணல் வீடு கட்டுவதில் போக்கினாள்.

ஆனால், அவ்விளைஞன், காதலியின் வெறுத்த நோக்குண்டு கலங்கவில்லை; மாறாகத் தன் சொல்லாற்ற லால் அவள் சினத்தைப் போக்கி விடலாம் எனத் துணிந்தான். அத் துணிவோடு அவளை நெருங்கினான்; "பெண்ணே! மணல் வீடு கட்டும் உன்னோடு யானும் ஒத்துழைக்கலாமோ? உனக்குத் துணையாய் யானும் சிறிது கட்டித் தரலாமோ?" எனக் கேட்டுக் கொண்டே, அவள் அருகில் அமர்ந்தான். அவன் செயலைக் கண்டு சினந்து

எழுந்தவள், "ஏடா! தாய் தந்தையர் உழைப்பால் உருவான வீட்டில், வறிதே கிடந்து மகிழத் தெரிவதல்லது, நமக்கு என ஒரு வீடு வேண்டும். அவ்வீட்டில் நமக்கென ஒரு வாழ்வு வேண்டும் என எண்ணி, உனக்கு என ஒரு வீடு அமைத்துக் கொள்ளும் உணர்வு உனக்கு என்றுமே உண்டாகாதோ?' எனக் கடிந்துரைத்து விட்டுத் தன் காரியத்தை மேற்கொண்டாள்.

குனிந்திருக்கும் அவள் கூந்தலைக் கண்டான்; அக்கூந்தலில், அவள் தாய் அழகாகச் சீவி முடித்துச் சூட்டி வைத்திருக்கும் மணமும், மகரந்தமும் சொரியும் மலர் மாலையைக் கண்டு மகிழ்ந்தான். மகிழ்ச்சியால் மயங்கி, அவளை மேலும் நெருங்கிப், "பெண்ணே! கூந்தல் மலர் சரிந்துள்ளது; சரிந்ததைச் சிறிதே சீர்படுத்தலாமோ?" எனக் கேட்டவாறே, கூந்தலைக் கையாற் பற்றத் தலைப்பட்டான். அவன் அன்பு மொழி கேட்டும் அவள் சினம் தணிந்திலது. அவன் கைப்பட விருந்த கூந்தலை விரைந்து ஈர்த்துக் கொண்டாள். "ஏடா! ஊரும் உறவும் அறிய மணந்து கொண்டு மனைவி என்ற உரிமையோடு மலர் சூட்ட உனக்கு மனம் இல்லை; தாய் பறித்துக் கொணர்ந்த மலரை மிகவும் உரிமையோடு சூட்ட வந்து விட்டனை! என் கூந்தலைத் தொடும் உரிமை உனக்கு இல்லை; எட்டி நில்!" எனக் கூறிச் சினந்தாள்.

எதிர்நின்று தன்னைச் சினந்துரைக்கும் அவள் நிலை கண்டான்; அவள் சினத்தைப் போக்கி விடலாம் என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தை விட்டு அப்பொழுதும் அகலவில்லை. அவள் மார்பைப் பார்த்தான்; அம்மார்பில், அவள் தாய், தொய்யில் குழம்பால் தீட்டிய ஓவியங்கள், ஆங்காங்கே அழிந்து போக, ஆங்கெல்லாம்

பொன்னிறத் தேமல்கள் புறத்தே தோன்றக் கண்டான்;- "பெண்ணே! அழிந்த அத்தொய்யிலை எழுதிச் செம்மை செய்யின், உன் சினம் மாறுமோ?" எனப் பணிந்த சொற்களால் வினவினான்.

தாய் எழுதும் தொய்யிலினும், தம் கணவன்மார் எழுதும் தொய்யிலையே மகளிர் பெரிதும் விரும்புவர். தாம் விரும்பும் மகளிர் மார்பில் தொய்யில் வரையும் உரிமை, ஆடவர்க்கு, அம்மகளிரை மணந்து கொண்ட பின்னரே உண்டாம். அந்த உரிமையை அவன் இன்னமும் அடையவில்லை. அதனால், அவனால் தொய்யில் எழுதப் பெற்று மகிழும் பேறு அவளுக்கும் வாய்க்கவில்லை. தாய் முன் அமர்ந்து தொய்யில் எழுதிக் கொள்ளும் போதெல்லாம் அதை எண்ணி எண்ணி வருந்தினாள் அப்பெண். தொய்யிலைச் செம்மை செய்யவோ, என அவன் கேட்டதும், அவ்வருத்தம் மிகுந்தது. அதனால் கடுஞ்சினம் கொண்டாள். "ஏடா! வரைந்து கொண்டு விரும்பியவாறெல்லாம் தொய்யில் எழுதும் விருப்பம் உனக்கில்லை. தாய் எழுதியதில், அழிந்த சிலவற்றை எவரேனும் கண்டு கொள்வரோ எனும் அச்சத்தால், அவசர அவசரமாகச் செம்மை செய்வதில் மகிழ்ச்சி காணுகிறது உன் உள்ளம். ஆனால், என் தோளிலும் மார்பிலும் தொய்யில் எழுதத் தாயின் துணையையும், சீர் அழிந்ததைச் செம்மை செய்ய உன் துணையையும் நாடி நிற்கும் நிலையில், இனியும் உயிர் வாழ்ந்திலேன்; இந்நிலை நெடிது நில்லாது!" எனக் கூறி மறுத்து விட்டாள். இவ்வாறே, அவன் ஆசை ஒவ்வொன்றையும் மறுத்து அழித்தாள்; தன்னை எதிர்த்துப் பேசித், தன் ஆசையை நிறைவேற வொட்டாது ஆக்கிய அவள் செயலால் அவன்

உள்ளம் குன்றிற்று; உள்ளமும் உடலும் நாண, அவன் அவ்விடம் விட்டு அகன்றான்.

அவன் செல்வதைக் கண்டாள் அப்பெண்; விரைந்து வந்து வரைந்து கொண்டிலனே எனும் ஏக்கத்தால், அவள் அவ்வாறு நடந்து கொண்டாளாயினும், வருந்திச் செல்லும் அவனைக் கண்டு அவளும் வருந்தினாள். "வருந்திச் செல்லும் அவன் வருத்தத்தை உடனே போக்கு தல் வேண்டும்; இன்றேல் வருத்த மிகுதியால், அவன் உயிர்விடவும் துணிவன்; அந் நிலையை என்னால் தாங்கிக் கொள்வது இயலாதே!" என எண்ணி வருந்தினாள். ஆனால், வருந்திச் சென்றவனை மீண்டும் அழைத்து அவன் வருத்தத்தைப் போக்குவது அவளால் இயலாது,. வருந்தும் அவன் நிலைகண்டு வருந்தும் தன் உள்ளத் துயர் தாங்கி உயிர் வாழ்தலும் இனி இயலாது; அவன் துயரும் அவள் துயரும் ஒருங்கே அழிதல் வேண்டும். அதற்கு இருவரும் மணந்து கொள்ளுதல் வேண்டும். ஆனால், திருமண முயற்சி மேற்கொள்வது அவளால் இயலாது; ஒன்று, அவன் மணம் பேசி வந்து மணந்து கொள்ளுதல் வேண்டும்; அல்லது, அவளை அவள் பெற்றோர், தாமே முயன்று, அவனுக்கு மணம் செய்து கொடுத்தல் வேண்டும். இதை அவ்விரு திறத்தார்க்கும் அறிவிப்பதும் அவளால் இயலாது; ஆனால் வாய்மூடி வாளா கிடக்கவும் அவளால் முடியவில்லை. அதனால் அதற்கு வழி யாது என எண்ணிப் பார்த்தாள். இந்நிலையில் தனக்கு உற்ற துணை புரிவாள் தன் உயிர்த் தோழி ஒருத்தியே என உணர்ந்தாள்; உடனே அவளை அழைத்தாள்; அவள் வந்ததும், தன் காதலை அறிவித்தாள்; அன்று அவன் வந்தது, அவனுக்கும் தனக்கும் இடையே நடைபெற்ற

*உரையாடல், அவன் துயர், அதனால் ஆகக்கூடிய விளைவு கண்டு தான் கொள்ளும் அச்சம் ஆகிய அனைத்தையும் கூறித், "தோழி! அவன்பால் சென்று, ஏறு தழுவி மணக்கும் ஆயர் மணமுறையை அவனுக்கு அறிவித்து, வரைந்து கொள்ள வருமாறு அவனை வேண்டிக் கொள்வதோ, அல்லது, என் காதலைத் தாய்க்கும் தந்தைக்கும் அறிவித்து, என்னை அவனுக்கு மணம் செய்து தருமாறு அவரை வேண்டிக் கொள்வதோ, இன்றே, இப்பொழுதே மேற்கொள்ள வேண்டுவது உன் கடன்; அதனால், அவன் நோயும் தணியும்; என் நோயும் தணியும்; இருவரைப் பற்றி வருத்திய பெருநோய் போக்கிய புண்ணியம் உனக்கும் உண்டாம்; ஆகவே, தோழி! இன்றே புறப்பட்டுப் போ!" என அவளுக்கு அன்புக் கட்டளை இட்டாள்.*

தீம்பால் கறந்த கலம் மாற்றிக், கன்றெல்லாம்
தாம்பில் பிணித்து மனைநிறீஇ, தாய் தந்த
பூங்கரை நீலம் புடைதாழமெய் அசைஇப், பாங்கரும்
முல்லையும்தாய பாட்டங்கால், தோழி! நம்

புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்
ஒருங்குவிளையாட, அவ்வழிவந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன், மற்று என்னை
'முற்றிழை, ஏஎர், மடநல்லாய்! நீஆடும்
சிற்றில் புனைகோ சிறிது?' என்றான்; 'எல்லா! நீ

பெற்றேம் யாம் என்று பிறர் செய்தஇல் இருப்பாய்;
கற்றதுஇலை மன்ற; காண்!' என்றேன்; 'முற்றிழாய்!
தாதுசூழ் கூந்தல் தகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கு?' என்றான்; 'எல்லா! நீ
ஏதிலார் தந்த பூக்கொள்வாய்; நனிமிகப்

பேதையை, மன்ற பெரிது!' என்றேன்; 'மாதராய்!
ஐய பிதிர்ந்த சுணங்கு அணி மென்முலை மேல்
தொய்யில் எழுதுகோ மற்று?' என்றான். 'யாம்பிறர்
செய்புறம் நோக்கி இருத்துமோ? நீ பெரிது
மையலை மாதோ! விடுகு!' என்றேன்; தையலாய்!
சொல்லியவாறெல்லாம் மாறுமாறு யான் பெயர்ப்ப,
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான்; அவனை நீ
ஆயர் மகளிர் இயல்பு உரைத்து, எந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின், யான் உற்ற
நோயுங் களைகுவை மன்."

*தலைவி, ஆடும் இடத்தில் தலைவனைக் கண்டதையும், ஆங்கு அவனோடு நடாத்திய சொல்லாடலையும் தோழிக்குக் கூறித், தலைவனை வரைவு கடாவி, யாய்க்கு அறத்தோடு நிற்பாயாக என அவளை வேண்டிக் கொண்டது.*

3. பாங்கர் – ஒரு கொடி, 4. பாட்டம் – தோட்டம். பாட்டங்கால் – தோட்டத்தில், 7. பொதுவன் – ஆயன்; 8. முற்றிழை – சூடிய அணிகளை உடையாய், ஏளர் – அழகு 11. கற்றது இலை – தனக்கென ஒன்றிருக்க வேண்டும் என அறியவில்லை, 12. தகை – அழகு, தைஇய – சூடிய, 16. ஐய – வியக்குமாறு, பிதிர்ந்த – ஆங்காங்கே தோன்றும், சுணங்கு – தேமல், 17. பிறர் – ஈண்டு, தாய். 18. செய்புறம் – கோலம் செய்தல், இருந்துமோ – உயிர் வாழ்வேமோ, 19. மையலை – அறிவு மயக்கம் உற்றனை 20. பெயர்ப்ப – மறுக்க 21. அல்லாந்தான் – ஏமாந்து வருந்தினான், பெயர்ந்தான் – மீண்டு போயினான், 23. உரைத்தீயின் – உரைப்பாயாயின். 24. யான் உற்ற நோயும் என்ற உம்மையால் அவன் உற்ற நோயும் என்பது பெறப்பட்டது.

# 12

## சொல்லலோம்பு என்றார்!

ஆயர் குலத் தொழிலைப் பிறர் கற்றுத் தர வேண்டாது, இயல்பாகவே அறிந்திருந்த அக்குல இளைஞன் ஒருவன், ஒருநாள், கன்றுகளை மேயவிட்டுக் காவல் மேற்கொண்டிருந்த ஆயர் குலக் கன்னி யொருத்தியைக் கண்டான். அவள் அழகிற்கு அடிமையாகி அவளைக் காதலித்தான்; அவள் காதலைப் பெற விரும்பினான். அரிய பொருள் ஒன்றை அளித்து அவளை அடையத் துணிந்தான். மகளிர்க்கு இயல்பாகவே மலர்மீது ஆசை அதிகம்; அதிலும் எளிதில் கிடைக்காத மலரில் மட்டில்லா மகிழ்ச்சி காண்பர். இதை அறிந்த இளைஞன், தன் நிலத்தை அடுத்திருந்த மருத நிலத்திற்குச் சென்று, ஆங்குள்ள நீர்நிலைகளில் மலர்ந்து, காற்று ஆட்ட ஆடி மணம் வீசிக் கொண்டிருக்கும் அழகிய தாமரைப் பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து அவளுக்குக் கொடுத் தான். தான் பார்த்தறியாத அப்புது மலரைக் கண்டு அவள் மகிழ்ச்சி கொண்டாள். ஆர்வத்தோடு வாங்கித் தன்

கூந்தலில் சூட்டிக் கொண்டாள்; அரிய பொருள் அளித்த அவன்மீது அன்பு கொண்டாள். அன்றைய தொடர்பு அம்மட்டோடு நின்றது.

மாலை வரவே, அவள் கன்றுகளை ஓட்டிக் கொண்டு தன் மனைக்குச் சென்றாள்; ஆங்கு மகள் கூந்தலில் தாமரை மலரைக் கண்டாள் தாய்; தாமரை தங்கள் மண்ணில் மலராது; தண்ணீர் வளமிக்க மருத நிலத்து மண்ணிலேயே அது மலரும். மருத நிலத்திற்குள் மகள் சென்றிருக்க மாட்டாள்; ஆங்குச் சென்று அதைப் பறித்துக் கொணரும் துணிவு தோழிப் பெண்களுக்கும் இராது. ஆகவே, இதை இவளுக்கு யாரோ ஓர் இளைஞனே கொண்டு வந்து கொடுத்திருத்தல் வேண்டும் என உணர்ந்தாள். அதனால், மகளை அழைத்து, "மகளே! மலர் தந்த அந்த இளைஞனோடு இனிப் பேசாதே!" என எச்சரித்தாள்.

அன்போடு அவன் மலர் அளித்தான்; அரிய மலர் அளித்த அவனோடு பேசாதே என்கிறாள் தாய்; ஏன் இம் முரண்? அவனுந்தான், ஏதும் தொடர்பில்லாத எனக்கு, அரும்பாடு பட்டு மலர் பறித்துத் தருவானேன் எனச் சிந்தித்தாள்; அது, அவன், தன்பால் கொண்ட காதலின் விளைவு என்பதை அறிந்து கொண்டாள். அதனால், அவள் உள்ளத்திலும் காதலுணர்வு அரும்பிட்டது; அந்நிலையே, அவனைக் காண வேண்டும்; கண்டு, பேசி மகிழ வேண்டும் எனத் துடித்தாள். தாயின் தடையுத்தரவை மறந்தாள்; அவனைக் காணும் ஆர்வ மிகுதியால், இளம் கன்றுகளை ஓட்டிச் செல்லக் கூடாத கடும் வெய்யில் காய்வதையும் பொருட்படுத்தாது,

நண்பகற் பொழுதிலேயே புறப்பட்டாள்; நேற்று அவனைக் கண்ட இடத்தில், அவன் தனக்காகக் காத்திருப்பான் என்ற நம்பிக்கையால் ஆங்குச் சென்றாள். அந்நம்பிக்கை வீண் போகவில்லை; அவள் மீது கொண்ட காதலால், அவனும் அவளைப் போலவே, அவள் வருவாள் எனும் நம்பிக்கையால், ஆங்கு வந்து, அவள் வருகையை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தான்.

அவளும் வந்தாள்; வந்தவள் வேண்டுமென்றே அவனைப் பாராதவள்போல, அவனைக் கடந்து சென்றாள். அதைக் கண்ட அவன் உடனே விரைந்து எழுந்து, அவள் முன் சென்று நின்று அவளை வழிமறித்து நிறுத்தினான். உடனே அவள், "என்னை வழிமறித்து நிறுத்தியவன் யாவன்?" என வினவியவாறே, திரும்பி அவனை நோக்கினாள். "ஏடா! அன்று நடந்த நிகழ்ச்சியை என் பெற்றோர் அறிந்து கொண்டனர். 'ஏடி! மகளே! தன் குலத் தொழிலைக் கல்லாது, உனக்குத் தாமரை மலர் பறித்து அளித்த அந்த இளைஞனோடு பேசாதே! பேசினும், உன்னை அவன் ஏமாற்றி விடாவாறு விழிப்பாயிரு!' என்று என் தாய் எனக்குத் தடை விதித்து விட்டாள். ஆகவே, ஏடா! இனி என் முன் நில்லாதே; சென்றுவிடு!" என்றாள்.

அன்று அவள் அழகு, முன்னாளினும் பன் மடங்கு மிக்குத் தோன்றிற்று. கருநீல மலர்போல், மைதீட்டிய இரு கருவிழிகளும், தொய்யிற் கரும்பு எழுதிய தோள்களும் அவன் காதல் நோயை அதிகப் படுத்தின. அதனால், காமவெறி பிடித்துவிட்ட அவன், 'பெற்றோர் உன்னோடு பேசக் கூடாது என்றனர்,' என அவள் கூறக் கேட்டதும்,

"ஏடி பெண்ணே! உன் பெற்றோர் உனக்குக் கூறிய கட்டளையை நீ கூறினாய்; அதற்கு அடங்கி நடக்கவும் விரும்புகின்றாய்; நனிமிக நன்று. அதைப் போலவே, நானும் என் பெற்றோர்க்கு அடங்கி நடக்க விரும்புகிறேன். எனக்கு என் பெற்றோர் இட்ட கட்டளை என்ன தெரியுமோ? 'கண்டவர் உள்ளத்தில், கண்டவுடனே காமத் தீ மூளுமாறு நோக்கவல்ல கண்களையும் விளையாத கரும்பு வனப்புறத் தீட்டப் பெற்ற தோள்களையும் உடைய மகளிரைக் கண்டால் அவர்களை விடாதே; அவர்களைக் காதலித்துக் கடிமணம் புரிந்து கொள்!' என்பதே அவர் இட்ட கட்டளை. ஏடி! நான் அதன்படி நடந்து கொள்ள வேண்டாவோ?' என்றான்.

அவன் சொல் அவளுக்கு மகிழ்ச்சி அளித்தது. "ஏடா! உன் பெற்றோரும், அவர்கள் உனக்குக் கூறிய அறிவுரையும் நன்று நன்று!" என நகைத்தாள். பின்னர், "ஏடா? மகளிரைக் கண்டால், அவரை வழிமறித்து நிறுத்தி, அவர் மீது காதல் கொண்டு, அவர் பல்லழகையும் தோளழகையும் புகழ்ந்து பாராட்டு என்ற நனி மிக்க நல்லற வழி காட்டியுள்ளனரே! நன்று அவர் திறம்! அன்னார், என் பெற்றோர்பால் சென்று, என்னை மணம் பேசி முடிப்பதில் மிகவும் வல்லவர் போலும்!" என அவனையும், அவன் பெற்றோரையும் இகழ்வாள் போல் கூறினாள்.

உள்ளத்தில் காதல் கொண்டு, உதட்டில் பகையுடை யாள்போல் கூறிய சொல் கேட்டு, அவனுக்கு நகைப்பதா, அழுவதா என்றே தோன்றவில்லை. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் அவள் நடிப்பை

வெளியாக்க விரும்பினான். “ஏடி! எவரும் வெளியில் தலைகாட்ட இயலாவாறு கொடிய வெய்யில் காயும் உச்சிப் பொழுது இது; இளங்கன்றுகள் வெய்யில் வெப்பத்தால் தளர்ந்து வருந்தும்; அதனால், இந்நேரம் கன்று மேய்ப்பதற்குத் தகுதியற்ற காலமாய் இருக்கவும், கன்றுகளை ஓட்டி வந்து மேய்க்கும் உன்னைக் கண்ட என் பெற்றோர், உன் காதல் உள்ளத்தை உணர்ந்து கொள்ளாரோ? உணர்ந்து கொண்ட அவர்கள், தங்கள் மகனாகிய எனக்கு உன் வருகையை உரையாரோ? இதை அவர்கள் உரைக்காது போயின், அவர் உறவு உறவாக மதிக்கப் பெறுமோ?” எனக் கூறி அவள் உள்ளத்தில் ஒளிந்து கிடக்கும் காதலைப் புலப்படுத்தினாள்.

அதற்கு அவள் எதுவும் விடையளிக்கவில்லை. ஆனால், “ஏடா! நீ கூறியது முற்றும் உண்மை; அது உண்மை என்பதை நானும் அறிவேன்; நன்று; இனி உன் பேச்சை விடு!” என அதை ஏற்றுக் கொள்ளாதவள் போல் கூறினாள்.

புறத்தில் பொய்க் கோபம் காட்டுகிறாளாயினும், அவள் உள்ளம் இசைந்து விட்டது என்பதை உணர்ந்தான். அவன் காதலுக்குத் துணிவு பிறந்து விட்டது; உரிமை யோடு, “ஏடி பெண்ணே! இனி உன்னை விடேன். அங்ஙனமாகவும் நான் கூறியவற்றை இன்னமும் ஏற்றுக் கொள்ள மறுப்பது ஏன்? நான் கூறிய அனைத்தும் உண்மை. மேலும் உன் பெற்றோர் கட்டளை என்னோடு பேசக் கூடாது என்பதுதானே! சரி; பேச வேண்டாம். பேசக்கூடாது என்றவர்கள், ‘பெண்ணே! அவன்பால் அன்பு காட்டாதே; அன்பு காட்டி அவனைத் தழுவிக்

கொள்ளாதே!' என்று கூறவில்லையே! ஆகவே, என்னைத் தழுவுவதில் தவறு இல்லை. அருகில் வந்து அன்போடு அணைத்துக் கொள்வாயாக. உன் வாயில் ஊறும் தேன் நீர் உண்டு மகிழ்ச்சி கொள்கிறேன் நான்!" எனக் கூறிக் கொண்டே அவளை அணுகினான்.

அவன் காதல் பேச்சு அவளுக்குக் களிப்பூட்டி விட்டது. ஆயினும், இன்று காதலிக்கும் இவன் நாளை கைவிட்டால், நம்நிலை என்னாவது என எண்ணினாள்; அவள் சிந்தனை செயலாற்றத் தொடங்கி விட்டது. "நெஞ்சே! இவன் கூறியது எத்தன்மையவோ? உறுதி உடையவோ? அல்லது அழிந்து போகவல்லவோ?" என்று ஐயுற்றுக் கலங்கினாள். அது சிறிது பொழுது. காதல் வெறி மிகவே, ஒரு முரட்டுத் துணிவு கொண்டாள். "பொய்யுரைத்துப் பழகிய இப்பொதுவன் உரைத்த உறுதி மொழிகள் உண்மையுடையவாயின், அவனை மணந்து மனையறம் ஏற்று மாண்புறுவேன். அவ்வாறில்லாமல், அது பொய்யாகிப் போயின், அதனாலும் கேடில்லை. அவன் உள்ளத்தில் காதற் கனலை மூட்டி, அதனால் அவன் அணிந்த மா்லையும் வெந்து கருகுமளவு அவன் உடல் நலத்தைக் கெடுக்கும் என் கண்கள் நாளை அவன் கைவிட்டால் கலங்கிப் பசலை படர்ந்து பாழாகும்; என் தோள்கள் மெலிந்து தளரும். என்றாலும் இன்று ஒரு பொழுது, அவனோடு பெறும் இன்பத்தால், அவை கவின் பெற்றுக் காட்சி அளிக்கும் அல்லவோ? அது ஒன்றே போதும். அவன் கைவிடினும், இவ்வொரு நாள் இன்பத் தால், காலமெல்லாம் மகிழ்ந்திருப்பேன்." என, இவ்வாறு தனக்குள்ளே எண்ணித் துணிந்து அவன் காதலை ஏற்றுக் கொண்டாள்.

"யார் இவன் என்னை விலக்குவான்? நீர் உளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை; நீ மாறு; நின்னொடு
சொல்லல் ஓம்பு என்றார் எமர்;

எல்லா! கடாஅய கண்ணால் கலைஇய நோய்செய்யும்
நடாஅக் கரும்பு அகன்ற தோளாரைக் காணின்,
விடாஅல்; ஓம்பு; என்றார் எமர்;

கடாஅயார், நல்லாரைக் காணின் விலக்கி நயந்தவர்
பல்இதழ் உண்கண்ணும் தோளும் புகழ்பாட
நல்லது கற்பித்தார் மன்ற; நுமர் பெரிதும்
வல்லர் எமர்கண் செயல்;

ஓஒ வழங்காப் பொழுது, நீ, கன்று மேய்ப்பாய் போல்
வழங்கல் அறிவார் உரையாரேல், எம்மை
இகழ்ந்தாரை அன்றோ எமர்?
ஒக்கும்; அறிவல்யான்; எல்லா! விடு.

விடேன்யான்; என் நீ குறித்தது இருங்கூந்தல்!
நின்னை என் முன்நின்று
சொல்லல் ஓம்பு என்றமை அன்றி, அவனைநீ
புல்லல் ஓம்பு என்றது உடையரோ? மெல்ல
முயங்கு; நின்முள்ளெயிறு உண்கும்; எவன் கொலோ

மாயப் பொதுவன் உரைத்த உரையெல்லாம்
வாயாவதாயின், தலைப்பட்டாம்; பொய்யாயின்,
சாயல் இன்மார்பின் கமழ்தார் குழைத்தநின்
ஆயிதழ் உண்கண் பசப்பத், தடமென் தோள்
சாயினும், ஏஎர் உடைத்து."

*தலைவன், தலைவியை ஆற்றிடை எதிர்ப்பட்டுச் சிலமொழி கூறிய வழி அவள் கூட்டத்திற்கு உடன்பட்டது.*

1. உளர் – அசையும், 2. விரவுத்தார் – பல மலர் கொண்டு கட்டிய மாலை 3. மாறு – விலகிச் செல்; 5. கடா அய – காதல் வேட்கை தந்த; தலைஇய – மனத்தைக் கலக்கிய; 6. நடாக்கரும்பு – தோளில் எழுதிய தொய்யிற் கரும்பு; அமன்ற – பொருந்திய; 19. புல்லல் – தழுவிக் கொள்ளுதல்; 20. முயங்கு – தழுவிக் கொள்; எயிறு உண்கும் – பல்லிடையே ஊறும் நீரை உண்கிறேன்; 22. வாயாவதாயின் – உண்மையாயின்; தலைப்படுதல் – மணந்து கொள்ளுதல்; 23. குழைத்த – கருகி அழித்த; 25. சாயினும் – மெலியினும்; ஏர் – அழகு.

# 13

## எல்லை வருவான் விடு!

ஆவும் ஆனேறும் ஓம்பி வளர்க்கும் ஆயர்குடியில் வந்த ஓர் இளம்பெண், நாள்தோறும் தன் ஆனிரைகளைக் காலையில் ஓட்டிச் சென்று, காடுகளில் மேயவிட்டு, மாலையில் வீடு திரும்பும் வழக்கம் மேற் கொண்டிருந் தாள். அவ்வூரில் வாழ்ந்த ஆட்டிடையர் குடியில் வந்த ஓர் இளைஞன், அவளைப் போலவே, தானும் தன் ஆட்டு மந்தையை, அவள் செல்லும் காட்டிற்கே ஓட்டிச் சென்று மேய்க்கும் வழக்கம் மேற்கொண்டிருந்தான்; ஒரு நாள் ஆனிரையின் பின்வரும் அவளைக் கண்டான். பார்த்தவர் கண்களைப் பறிக்கும் பேரழகு வாய்ந்த பருத்த தோள்கள், கண்டவர் கருத்தைக் கவரும். கவின் மிக்க கண்கள், நாட்டவர் போற்றும் அவள் நற்பண்பு ஆகிய அவள் நலங்கள் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன; அவள் மீது மாறாக் காதல் கொண்டான். அன்று முதல், ஒவ்வொரு நாளும் அவள் வருகையை எதிர் நோக்கியிருந்து, அவள் வந்ததும், அவளழகைக் கண்டு மகிழத் தொடங்கினான்.

நாளடைவில் அவளை மனைவியாகப் பெற்று மகிழத் துடித்தது அவன் உள்ளம். ஆனால் அதற்கேற்ற வாய்ப்புக் கிட்டாது அவன் வருந்தினான். அவன் உள்ளத்தைப் பற்றி வருத்திய அக்காதல் நோய், இன்னுஞ் சிலநாள் சென்றால் அவன் உயிரையே அழித்து விடுமளவிற்கு வளர்ந்து விட்டது. இனி வாளா இருந்து பயன் இல்லை; இதற்கு ஒரு வழி காண வேண்டும் எனத் துணிந்தான்.

மறுநாள், வழக்கம்போல் அவள் வந்தாள். மாடு களை மேய விட்டாள். வயிறார மேய்ந்த மாடுகள், கானாற்று நீர் குடித்து, அவ்வாற்றின் கரைக்கண் வளர்ந் திருந்த மரநிழலில் படுத்து ஓய்வு கொண்டன. மாடுகளை மேயவிட்ட அவள், தன்னைப் போன்று ஆங்கு வந்திருக்கும் தன் தோழிப் பெண்களோடு கானாற்று மணலுக்கும், அதன் கரைக்கண் உள்ள குளிர்ந்த மலர்ச் சோலைக்கும், அதை அடுத்திருந்த அகன்ற பாறைக்கும் ஓடி, ஆடியும் பாடியும் மகிழ்ந்தாள். முல்லை, குருந்தம் போன்ற மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டிக் கூந்தலில் சூடிக் கொண்டாள். இளைஞன், அவளையும், அவள் தோழிமாரையும், நிழல்போல் பின்தொடர்ந்து சென்று, அவர் ஆடல் பாடல்களில் கலந்து கொண்டு அகமகிழ்ந்தான். ஞாயிறு மறையும் பொழுதாயிற்று. பகலெல்லாம் அவள் பின் திரிந்து ஆடியும் பாடியும் மகிழ்ந்தமையால் அவன் காதல் நோய் முன்னிலும் அதிக மாயிற்று; அதைத் தாங்கிக் கொள்வது அவனால் இயலாது போயிற்று; அதனால், அவனுக்குத் துணிவு பிறந்துவிட்டது. அவளைத் தனித்துக் கண்டு, தன் காதலைக் கூறி, அவள் அன்பைப் பெறத் துணிந்தான். இந்நிலையில் ஞாயிறு

மறைய, மாலைப்பொழுதும் வந்து விடவே, அவன் விரைவு அதிகமாயிற்று. அவன் ஆசைக்கு வாய்ப்பளிக்கும் வகையில், அவளைப் பிரியாது, இடைவிடாது பின் தொடர்ந்து திரிந்திருந்த தோழிப் பெண்களும் அவளைத் தனியே விடுத்துப் போயினர்; அவள் தனித்திருந்தாள். அதனால், அவன், அவள் முன் திடுமெனத் தோன்றி, அவள் புற அழகையும் அக நலத்தையும் பாராட்டி விட்டுப், "பெண்ணே! உன்மீது கொண்ட காதல் நோய் என்னைப் பற்றி வருத்துகிறது. என்னைக் காத்தல் உன் கடன். அந் நோயினின்றும் பிழைத்து நான் உயிர் வாழ ஒருவழி காட்டிவிட்டு அப்பாற் செல்!" எனக் கூறி வழிமறித்தான்.

அம் மேய்ப்புலத்தில், அவள் அவனை அதற்கு முன்னர்ப் பலமுறை பார்த்துள்ளாள்; பார்த்தது மட்டு மன்று, அவன், தன் ஆடல் பாடல்களில் கலந்து கொண்டு, துணைபுரியக் கண்டு, அவன்மீது சிறிதே காதலும் கொண்டிருந்தாள். ஆனால், ஆடிடங்களில் பார்த்துள் ளாளே யல்லாது, அவன் யார், அவன் பெற்றோர் யாவர் என்பன குறித்து எதுவும் அவளுக்குத் தெரியாது. அவனைத் தனிமையில் கண்டு, அவன் யார் என்பதை அறிய வேண்டும்; அவன் அன்பைப் பெற வேண்டும் என்ற ஆசை அவளுக்கும் உண்டு; ஆயினும், அவன் இவ்வாறு திடுமென வந்து வழிமறித்துக் கொள்வான் என அவள் எதிர்பார்க்கவில்லை. அதனால், அவனைக் கண்டதும் சிறிதே நடுங்கிவிட்டாள். அவள் அறிவும் நிலை தடுமாறி விட்டது. அதனால், "ஏடா! நீ யார்? உன்னை யான் இன்னான் என்று அறியேன். அறியாதிருப்பார் முன்,

திடுமெனத் தோன்றி, வழி மறித்துக் கொண்டு, வாயில் வந்தனவற்றைக் கூற நீ என்ன பித்தேறினவனோ?" எனக் கேட்டுவிட்டாள்.

அவன், அவள் தளர்ச்சியைத் தடுமாற்றத்தைக் கண்டான். தன்னை இன்னான் என அறியாமையால் வந்தது அது என எண்ணினான். அதனால், "பெண்ணே! நான் இவ்வூர் ஆட்டினத்து ஆயர் குடியில் வந்தவன்; பகை கண்டு அஞ்சாது பெரும் போர் புரியவல்ல ஆட்டுநிரை பல கொண்ட குடி நான் பிறந்த குடி!" எனத் தன்னை இன்னான் என அறிவிக்கும் முகத்தான், தன் குடிப் பெருமையையும், குறிப்பாகக் காட்டிப் பெருமை கொண்டான்.

நீ யார் என்று தான் கேட்க, அதற்கு அவன் இன்னான் என அறிவிப்பதோடு நில்லாது, தன்னுடைய குலப் பெருமை கூறிப் பாராட்டக் கேட்ட அவளுக்கும் பொறாமை மிகுந்தது. அவன் குலத்தினும் தன் குலம் தாழ்ந்ததன்று; மாறாகச் சிறந்ததே என்பதை அவனுக்கு அறிவுறுத்த விரும்பினாள். உடனே, "ஏடா! உன் உடைமை களாய அவ்வாடுகள் அஞ்சாது போர் புரியவல்ல ஆற்றல் வாய்ந்தனவேனும், அவை புல்லினம் எனப் பழிக்கப் பெறும். நீ அப் புல்லினத்து ஆயர்குடியில் பிறந்தவன். ஆனால் நானோ நல்லினத்து ஆய்ச்சி; அதிலும் நல்லினம் எனப் பாராட்டப் பெறும் ஆக்களின் இயல் பறிந்து, அவற்றைப் பார்த்த அளவிலேயே, அவை தரும் பால் அளவினை வரையறுத்துக் கூறவல்ல குடஞ்சுட்டு ஆயர்குடியில் வந்தவள் நான். அறிந்துகொள்!" எனக் கூறினாள்.

அதுகேட்ட அவன், "நீ யார் என்று இவள் என்னைக் கேட்டாள்; அதன் பின்னரே நான் இன்னான் என்பதை அறிவித்துக் கொண்டேன். ஆனால் நான் இவளைப் பற்றி எதுவும் கேட்கவில்லை; அவ்வாறாகவும் இவள் தன்னைத் தானே அறிமுகம் செய்து வைத்தாள்; அதுமட்டுமல்லாமல் தன்குலப் பெருமையையும் பாராட்டிக் கூறுகிறாள்; ஆகவே என்னைப் போன்றே இவளும் என்னைக் காதலிக் கிறாள். 'உனக்கு மனைவியாகும் மாண்புடையவள் நான்!' எனக் கூறாமல் கூறுகிறாள்," என இவ்வாறு எண்ணினான். அதனால் அவனுக்குச் சிறிது அதிகமாகவே துணிவு பிறந்தது. அதனால் அவளை அணுகி, "அவ்வாறாயின், பெண்ணே! உன்னோடு சிறிது நேரம் இருந்து பேசி மகிழ் வதில் குற்றம் இல்லை என எண்ணுகிறேன்," என்றான். அது கேட்ட அவள், "ஏடா! நீ விரும்புமாறு சிறிது பொழுது இருந்து பேசி மகிழ்வதில் குற்றம் இல்லை; அதில் எனக்கும் விருப்பமே!" என இசைந்து விடையளித்தவள், பொழுதாகி விட்டதாலும், தாங்கள் நெருங்கி நின்று பேசுவதைப் பிறர் பார்த்து விடுவர் என்ற அச்சத்தாலும், "ஆயினும், ஏடா! அதற்கு இப்பொழுது நேரம் இல்லை, நாளைக்கு வருகிறேன்; இப்போது போக வழி விடு!" எனக் கூறிப் போக முயன்றாள்.

அவனை ஏமாற்றிப் போய்விட வேண்டும் என்று அவள் கருதவில்லை. உண்மையில், பொழுதும் போய் விட்டது, பிறர் காண்பதற்கும் ஏதுவாம் என்ற அச்சம் காரணமாகவே அவள் போக விரைந்தாள். ஆனால் காம வெறியால் கருத்திழந்து நிற்கும் அவனால் அதை உணர்ந்து கொள்ள முடியவில்லை. அதனால், 'நாளை வருகிறேன்;

இன்று போக வழிவிடு!' என அவள் கூறியதை ஏமாற்றுரையாக எண்ணி விட்டான். அதனால் அவளை விட மறுத்தது அவன் உள்ளம். ஆனால், தன் கருத்தை அவ்வாறே அவளுக்குக் கூறின், அவள் தன் மனத்தின் குறைபாடு கண்டு, மதியாது வெறுத்து விடுவாளோ என அஞ்சினான். அதனால், வழிவிடு எனக் கூறி நிற்பாளுக்கு, வழிவிடாது நின்றவாறே, "பெண்ணே! என் வேண்டு கோளை ஏற்று, என் காதலுக்கு உடன்பட்ட நீ, போக வேண்டும் என்பதற்குக் கூறும் காரணம் முற்றிலும் சரி. உன் சொற்கள் இனிமை பயக்கின்றன என்பதை நான் உணர்கின்றேன்; உணர்ந்து, உன்னைப் போக விடவும் துணிகிறேன். ஆனால், அதற்கு என் உள்ளத்தின் உடன் பாடும் வேண்டும். ஆனால், அதுவோ, காம மிகுதியால் அறிவிழந்து கிடக்கிறது. அதனால், காதலி நாளை தவறாது வருவள்; அவள் சொல்வதை நம்பி, இன்று போகவிடு எனக் கூறும் என் கட்டளையை ஏற்க மறுக்கிறது அது. அதனால் நானும் உன்னைப் போக விடுவதற்கில்லை!" எனத் திறம்படக் கூறித் தடுத்து நிறுத்தினான்.

அவனைத் தன் காதலனாக உளமார ஏற்றுக் கொண்டு, மறுநாள் வருவதற்கு உண்மையிலேயே இசைய வும், அவன் அதை ஏற்றுக் கொள்ளாது, தான் ஏதிலாள் போலவும், அவன் உள்ளமே உறவுடையது போலவும் கருதித் தன் சொல்லை நம்பாது, தன்னைப் போகவிட மறுக்கும் அவன் செயல் கண்டு அவள் சினம் கொண் டாள். சினம் வெறுப்பாக மாறிற்று. "ஏடா! காமவெறி உன் உள்ளத்தை மிகவும் கலக்கி விட்டது; அதனால் உன் உள்ளத்தை அடக்கி ஆளும் ஆற்றலை நீ இழந்து விட்டாய்;

அந்நிலையில் என்னை ஏதிலாள் போலவும், நான் கூறிய உண்மை யுரையைப் பொய்யுரை போலவும் கருதியதில் வியப்பில்லை; தன் நெஞ்சைத் தான் அடிமை கொள்ளாது, அதற்கு அடிமைப்பட்டுப் போன ஒருவனுக்கு, ஏதிலார் யார் - இனியார் யார், பொய்யுரை எது - மெய்யுரை எது எனத் தெரிந்து கொள்ளும் தெளிவான அறிவு எங்கே வாய்க்கப் போகிறது!" எனக் கூறிச் சலிப்புற்றாள்.

அவள் கூறிய சுடுசொல், அவன் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது. 'வருவேன்; வழிவிடு!' எனக் கூறிய அவள் சொற்கள் உண்மைச் சொற்களே; ஏமாற்றுரை அல்ல என்பதை இளைஞன் உணர்ந்தான். தன் உள்ளம் உணர்வு பெற்றதை அவளுக்கு உரைத்தான்; அவள் விரும்பிய வாறே, அவளுக்கு வழிவிடவும் விரும்பினான்; ஆனால், அந்நிலையில், அவர்கள் முன்னே மேய்ந்து கொண்டிருக்கும் மாட்டு மந்தையில் அவன் கண்ட காட்சியால், அவன் மனம் மீண்டும் மாறி விட்டது.

இடிபோல் ஒலிக்கும் குரலும், போர் வெறியும் மிக்க ஒரு கொல்லேறு, பெண்ணெருமை ஒன்றைக் கண்டு, அதன் மீது கொண்ட காதலால், அதையே சுற்றிச் சுற்றி வருவதைப் பார்த்து விட்டான். அக் காட்சி அவன் உள்ளத்தில் அடங்கிய காமவெறியை மீண்டும் தூண்டி விட்டது; விலகி நின்று வழிவிடக் கருதியவன், மீண்டும் வழி மறித்துக் கொண்டு, தான் கண்ட காட்சியை அவளுக்கும் காட்டிப், "பெண்ணே! பொழுதும் போய் விட்டது; வீட்டிற்குப் போகாது இங்கிருத்தல் இனியும் இயலாது; ஆனால் குறைப்பட்ட உள்ளத்தோடு போவதும் பொருந்தாது. ஏற்றையும், இள நாகையும் கண்ட உனக்கு

*நான் கூறுவதன் உண்மை விளங்காது போகாது. ஆகவே, விரைந்து வீட்டைடதற்கு வழி செய்ய வேண்டுகிறேன்!" எனக் கூறிக், கூட்டத்தை விரும்பும் தன் உள்ளக் கருத்தைக் குறிப்பால் உணர்த்தினான்.*

"நலமிக நந்திய நயவரு தடமென் தோள்
அலமரல் அமர்உண்கண் அந்நல்லாய்! நீ உறீஇ
உலமரல் உயவு நோய்க்கு உய்யுமாறு உரைத்துச் செல்;

பேரே முற்றார் போல முன்நின்று விலக்குவாய்;
யார்? எல்லா! நின்னை அறிந்ததூஉம் இல்வழி;

"தளரியால்! என்னறிதல் வேண்டின், பகைஅஞ்சாப்
புல்லினத்து ஆயர் மகனேன், மற்று யான்;

ஒக்குமன்;
புல்லினத்து ஆயனை நீ, ஆயின், குடஞ்சுட்டு
நல்லினத்து ஆயர் எமர்;

எல்லா!
நின்னொடு சொல்லின் ஏதமோ இல்லைமன்;

ஏதம் அன்று; எல்லை வருவான் விடு;

விடேன்;
உடம்பட்டு நீப்பார் கிளவி, மடம்பட்டு
மெல்லியவாதல் அறியினும், மெல்லியால்!
நின்மொழி கொண்டு யானோ விடுவேன், மற்று
என்மொழி கொண்டு
என்நெஞ்சம் ஏவல் செயின்;

நெஞ்சு ஏவல் செய்யாது என் நின்றாய்க்கு, எஞ்சிய
காதல்கொள் காமம் கலக்குற, ஏதிலார்
பொய்ம்மொழி தேறுவது என்?

தெளிந்தேன் தெரியிழாய்! யான்

பல்கால் யாம் கான்யாற்று அவிர்மணல், தண்பொழில்,
அல்கல் அகல் அறை ஆயமொடு ஆடி,
முல்லை குருந்தொடுமுச்சி வேய்ந்து எல்லை
இரவுற்றது இன்னம் கழிப்பி;
அரவுற்று உருமின் அதிரும் குரலபோல் பொருமுரண்

நல்லேறு நாகுடன் நின்றன;
பல்லான் இனநிரை நாம் உடன் செலற்கே."

*தலைவியை ஆற்றிடைக் கண்டு, விலக்கி, கூட்டத்திற்கு உடம்படுத்தும் தலைவன் கூறியது இது.*

1. நந்திய — பெருகிய, நயவரு — விருப்பம் விளைக்கின்ற; 2. அலமரல் — மருண்டு நோக்கல்; அமர் — விருப்பம்; உறீஇ — உற்றதனால்; 3. உலமரல் — ஓயாது அலைக்கும்; உயவு — வருந்தும்; 4. பேரேமுற்றார் — பெரிதும் பித்து ஏறியவர்; 13,. எல்லை — நாளை; 15. நீப்பார் — நெஞ்சால் உடன்படாதார்; கிளவி — சொல்; மடம் பட்டு — அறிவிழந்து; 20. அவள் மீது கொண்ட வெறுப்பால். தன்னை ஏதிலாள் எனவும், தன் சொல்லைப் பொய்ம்மொழி என்றும் கூறினாள். 21. என் — எவ்வாறு உண்டாகும்; 24. அகல் அறை — அகன்ற பாறை; அல்கல் — தங்குதல்; 28. நாகு — பெண் எருமை.

# 14

# இரு மணம் இயல்பன்று

**கா**னாற்று மணற்பரப்பில் மகளிர் சிலர் மணல்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தனர். அம்மகளிர் அக்காட்டாற்றிற்கு அணித்தாக இருந்த ஆயர்பாடியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஆடிக் கொண்டிருக்கும் பொழுது இளைஞன் ஒருவன் ஆங்கு வந்தான். வந்தவன், அம்மகளிருள் நனிமிக அழகு வாய்ந்த நங்கை ஒருத்தியைக் கண்டான்; காதல் கொண்டான்; அவள் அவ்வாயர்பாடித் தலைவன் மகள். தன் மணல் வீட்டிற்கு அருகே நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அவனை அவளும் பார்த்தாள். ஒழுங்காக வாரி வரிந்து முடியப் பெற்று முதுகில் தாழ்ந்து கிடக்கும் தலைமயிர் முதலாக அவன் உறுப்பு நலங்கள் அனைத்தையும் ஒருமுறை ஊன்றி நோக்கினாள்; அழகின் திருவுருவாய்க் காட்சியளித்த அவனழகில் அவளும் மயங்கி விட்டாள். அன்று முதலாக அவர்கள் இருவரும், எவரும் அறியாவாறு எதிர்ப்பட்டு இன்புறத் தொடங்கினர். ஆனால் பலர் அறிய மணந்து

கொண்டவர்போல், வெளிப்படையாக, விரும்பியபோதெல்லாம் கலந்து பழக முடியவில்லை. மறைவாகப் பழகியதில் எத்தனையோ இடையூறுகளுக்கு உள்ளாயினர். அவள் அவனைக் காணவும் மாட்டாது பலநாள் வருந்தினாள். காதலனை ஒரு நாள் காணாதிருப்பதும் அவளால் இயலாது; அவ்வளவு பெரிது அவள் அன்பு; அத்தகைய பேரன்பு உடைய அவளால், அவனைப் பாராது, பல நாள் கழிப்பது பெருந்துன்பமாயிற்று; துயர் மிகுதியால் அவள் நலமும் கெட்டது.

மகளின் நலக்கேடு கண்டனர் பெற்றோர்; அது பருவக் கோளாறின் விளைவு எனப் பொதுவாக உணர்ந்தனர்; அதனால் அவளுக்குத் திருமணம் செய்யத் துணிந்தனர்; (பெற்றோர்க்குத் தன் காதலை உணர்த்த அவள் பெண்மை தடைசெய்து விட்டது; அதனால் அதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவர்க்கு இல்லாதாயிற்று) அவள் காதலை அவர் அறியார்; ஆதலின், அவளுக்கு ஏற்ற மணமகனுக்காக எங்கெங்கோ சென்று அலைந்தனர். மணமகனுக்காக அலைந்து கொண்டிருக்கும் போதே திருமணத்திற்கான ஏற்பாடுகளையும் விரைந்து மேற்கொண்டனர்; மகளுக்கு நாள்தோறும் புதுமலர் சூட்டிப் புத்தாடை அணிவித்து மகிழ்ந்தனர்; வீட்டைத் துப்புரவு செய்து செம்மண் பூசினர்; மனை முற்றத்தில் புதுமணல் பரப்பினர்; தம் குல வழக்கப்படி எருமைக் கோடு நட்டு இறைவனை வழிபடத் தொடங்கினர்.

காதலிக்குத் திருமணம் என்ற செய்தி கேட்டு இளைஞன் வருந்தினான். வருந்தியவன், அவளுக்கும் தனக்கும் உள்ள காதலைத் தன் பெற்றோர்க்கு அறிவித்து,

அவளை மணம் பேசி வருமாறு அவள் பெற்றோரிடத்தில் அவரை அனுப்பும் அத்துணைத் துணிவு பெற்றானில்லை. அதனால் காதலிக்கு மண ஏற்பாடு நிகழக்கண்டு வருந்துவ தல்லது, அதைத் தடுத்து, அவளைத் தானே மணந்து கொள்வதை அவனால் செய்ய முடியவில்லை.

பெற்றோரின் மண முயற்சி, காதலை வெளியிடா வாறு தடுக்கும் தன் பெண்மை, தம் காதலை வெளிப் படுத்தித் தன்னை மணந்து கொள்ளும் வாய்ப்புடைய அவன் வாளா இருத்தல் ஆகிய இவை அனைத்தையும் எண்ணி எண்ணி வருந்தினாள் அப்பெண். இறுதியில், இவ்வாறு தானும் வருந்தி வாளாயிருந்துவிடின், தன் கற்பு கெடுமாதலின், தன் திருமணத்திற்குத் தானே வழி காணுதல் வேண்டும் எனத் துணிந்தாள். தன் காதலைத் தன் பெற்றோர்க்கு அறிவிப்பதால் பயனில்லை; காதலின் மென்மை அறியாத அவர்கள், அஃதறிந்து சினம் கொண்டு, செய்வதறியாது தன்னைப் பிறன் ஒருவனுக்கு வலிய மணம் செய்து தரவும் துணிந்து விடுவர். காதல் உண்மையாயின், மணம் பேசி அவனே வருக என வாளா இருந்து விடினும் விடுவர். ஆகவே, அவருக்குக் கூறுவது கூடாது; பெற்றோர்க்கு அஞ்சி வாய்மூடிக் கிடப்பதால் ஒரு பெண்ணின் வாழ்வு பாழாம் என்பதை அவனுக்கு அறிவித்து, அவன் உள்ளத்தில் ஊக்கம் ஊட்டின், அவன் துணிந்து மணமுயற்சி மேற்கொள்வன் என நம்பினாள்.

தோழியை அழைத்தாள். அவள்பால் தன் நிலை கூறி அழுவிட்டு, “தோழி! வருந்தாது வாய்மூடிக் கிடப்பின், பெற்றோர் என்னை வேறு ஒருவனுக்கு வரைவு நேர்ந்து விடுவர்! அறநெறியில் பிறழா ஆயர்குடியில் பிறந்தவள்

நான். ஆயர் மகளிர் மறுமணம் செய்து கொள்ளார்; ஒருவனைக் காதலித்த பின்னர், பரந்த கடல் சூழ்ந்த இப்பெரிய உலகமே வந்து வாய்க்கினும், அவர் மனம் பிறன் ஒருவனைக் காதலிக்காது; இரு மணம் ஆயர் குடிக்கு இயல்பன்று; அது அவர்க்கு இழுக்குத் தரும்; அக்குடியில் பிறந்தவள் நான்; அவனை அன்று கானாற்றங்கரையில் கண்டு காதல் கொண்ட போதே, நான் அவனுக்கு உரியவளாகி விட்டேன்; இனி அயலான் ஒருவனை மணப்பது இயலாது; இதையெல்லாம் மறந்து, நடப்பது நடக்கட்டும் எனத் துணிந்து இருப்பது இயலாது; ஆகவே, தோழி! அவ்விளைஞனைக் கண்டு, 'ஏடா! உன் காதலியின் திருமணம் நீ இல்லாமலே நடைபெறப் போகிறது. அவள் உன்னை விட்டு வேறு ஒருவனுக்கு உரிமையாகப் போகிறாள்; அதைத் தடுத்து, அவளை உனக்கு உரிமையாக்கிக் கொள்ளும் நினைப்பு அற்று நிற்கின்றாய் நீ; அறிவிழந்து நிற்கும் நின் நிலை கண்டு இரங்குகிறது என் நெஞ்சம்; தலை மயிரைக் கோதி முடித்து, முதுகில் வீழுமாறு கோலம் செய்து கொண்டு, பெண்களைக் கண்டு காதல் கொள்ளக் கற்றுக் கொண்ட நீ, அக்காதலை உன் பெற்றோர்க்கு உணர்த்த அஞ்சி அடங்கிக் கிடக்கின்றனை; உன் ஆண்மையின் அழகே அழகு!' என இடித்துக் கூறி எள்ளி நகையாடியும், 'நீ அவள் பால் கொண்டுள்ள காதலை உன் பெற்றோர்க்கு உணர்த்தி, அவளை மணம் பேசி வருமாறு அவரை அனுப்பும். அறிவிழந்து நிற்கும் நின் பேதைமையின் விளைவால், அவள் திருமணம் உன்னை விட்டு அகலும்; அதுவும் விரைவில் அகன்று விடும்; அவள் திருமணம்

*பிறன் ஒருவனோடு நடைபெறாது, அது உன்னோடு நடைபெறுதற்காம் வழிவகைகளை இப்பொழுதே மேற்கொள்வாயாக!' என அவன் உள்ளம் துணிவு கொள்ளுமாறு அறிவூட்டி வருவாயாக. தோழி, நீ இப்பொழுது கூறப் போகும் அறிவுரை, பண்டு ஒருமுறை, வரைந்து கொள்ளுமாறு அவனுக்குக் கூறிய அறிவுரையைப் போலவே பயனற்றுப் போய்விடப் போகிறது. அவ்வாறு ஆகாமல், கேட்கும் அவன், இன்றியமையாக் கடமை அது எனக் கொண்டு, அதை அன்றே மேற்கொள்ளும் வகையில், அவன் உள்ளத்தில் ஆழப் பதியுமாறு அறிவுறுத்தி வருவாயாக!" எனக் கூறி அனுப்பினாள்.*

"வாரி நெறிப்பட்டு இரும்புறம் தாஅழ்ந்த
ஓரிப்புதல்வன் அழுதனன் என்பவோ?
புதுவமலர் தைஇ, எமர் என்பெயரால்
வதுவை அயர்வாரைக்கண்டும், மதியறியா
ஏழையை என்று அகலநக்கு வந்தீயாய் நீ,
தோழி! அவனுழைச் சென்று;

சென்று யான் அறிவேன்; கூறுக மற்று இனி;
சொல் அறியாப் பேதை! மடவை! மற்று எல்லா!
நினக்கு ஒரூஉம் மற்று என்று அகல்; அகலும் நீடின்று;

நினக்கு வருவதாக் காண்பாய்; அனைத்து ஆகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு;

தருமணல் தாழப் பெய்து, இல்பூவல் ஊட்டி,
எருமைப் பெடையோடு எமர் ஈங்கு அயரும்
பெருமணம் எல்லாம் தனித்தே ஒழிய

வரிமணல் முன்துறைச் சிற்றில் புனைந்த
திருநுதல் ஆயத்தார் தம்முள், புணர்ந்த
ஒருமணந்தான் அறியுமாயின்; எனைத்தும்
தெருமரல் கைவிட்டிருக்கோ? அலர்ந்த
விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல் இயல்பன்றே."

*தலைவனுக்கு, வேற்று வரைவு வந்தமை அறிவித்து, வரைவுகடாவி வருக எனத் தலைவி, தோழிக்குக் கூறியது இது.*

1. நெறிப்பட்டு – முடிந்த; இரும்புறம் – பெரியமுதுகு; ஓரி – கூந்தல்; 3. தைஇ – சூட்டி; 4. மதி அறியா ஏழையை – உணர்ந்து கொள்ளாத அறிவுக் குறைபாடுடையை; 5. அகல – பெரிதாக; வந்தீயாய் – வருக 8. சொல்லறியா – பெற்றோர்க்குச் சொல்லத் தெரியாத, 9. ஒரூஉம் – நீங்கும், மற்று – அசை 10. நினக்கு வருவதா – உனக்கு வருமாறு, 11. வியங்கொள – உள்ளத்தில் படும்படி, 12. பூவல் ஊட்டி – செம்மண் பூசி 14. தனித்து – காதலன் இல்லாமல் தனித்து 18. தெருமரல் – வருந்துதல். 19. விரிநீர் – கடல் 21. இல் இயல்பு – குடிப்பழக்கம்.

# 15

## அடைசூழ்ந்தார் நின்னை!

ஆயர் இனத்தில், நாகரிகம் மிக்க நல்ல குடியில் பிறந்த ஒரு பெண்ணும், அவ்வாயர்பாடியில் ஆடு வளர்க்கும் குடியில் பிறந்த ஓர் இளைஞனும் ஒருவரை யொருவர் கண்டு காதல் கொண்டனர்; அவ்வாயர் பாடிக்கு அணித்தாகவுள்ள மறைவிடங்களில், மாலை யிலும் காலையிலும், பிறர் அறியாவாறு எதிர்ப்பட்டு மகிழத் தலைப்பட்டனர். வண்ணத்தாலும் வாசனை யாலும் பல்வேறு வகைப்பட்ட மலர்களைப் பறித்து, அவற்றை ஒரு காழ்வடமாகவும், தலைமாலையாகவும் கட்டிக் கொண்டு வந்து தருவதில் அவனும், அவற்றைப் பிறர் எவரும் அறியாவாறு தன் கூந்தலில் சூடிக் கொள்வதில் அவளும் இன்பங் கண்டனர்; இவ்வாறு சில நாட்கள் கழிந்தன.

அப் பெண்ணுக்கு உடை உடுத்தி, உணவும் உணர் வும் ஊட்டி வளர்க்கும் பொறுப்புடையளாய செவிலி, ஒரு

நாள், அவள் தலைக்கு வெண்ணெய் தேய்க்க விரும்பினாள்; அவளை அழைத்து அருகில் அமர்த்தி அவள் கூந்தலை அவிழ்த்து விரித்து விட்டாள்; உடனே, அன்று அவன் சூட்டிய மலர், அவள் கூந்தலிலிருந்து கீழே விழுந்தது; எதிர்பாராதது நிகழ்ந்து விட்டது; வழக்கமாக, மாடுகளை மேய்க்கவும், பாலும் தயிரும் விற்கவும் வெளியில் சென்றிருப்பவராய தந்தையும் தாயும், அன்று வீட்டிலேயே இருந்தனர்; தான் வளர்க்கும் மகள் கூந்தலில், தான் சூட்டாத புதுப்பூ இருக்கக் கண்டு செவிலி நாணினாள்; தன் வளர்ப்பு முறையில் தவறு நேர்ந்து விட்டது; உடனிருந்து வளர்க்கும் தான், அதை அதுகாறும் அறியாதிருந்தது அவளைப் பெரிதும் நாணப் பண்ணிற்று.

தன் மகள் கூந்தலிலிருந்து தான் பார்க்காத புதுப்பூ வீழ்ந்ததையும், தன் மகளை வளர்க்கும் சிறந்த தாயாகிய செவிலி, அதைக் கண்டு கலங்குவதையும் பெண்ணைப் பெற்றவள் பார்த்து விட்டாள். நாகரிகம் அறிந்தவள் அந்நற்றாய்; பருவத்தின் விளைவு இது என உணர்ந்த பண்புடையவள்; மகள் மணப்பருவம் பெற்று விட்டாள்; அவள் தனக்குரிய காதலனையும் தானே தேர்ந்து கொண்டாள்; இனி, அவளுக்கு மணம் முடித்து விடுதல் வேண்டும் என்ற முடிவினை அப்பொழுதே கொண்டாள்; அதனால், புதுப்பூவைப் பார்த்தவள், 'ஏது இப்புது மலர்? சூட்டியவர் யார்? புதுமலர் சூட்டிக் கொள்ள எங்குக் கற்றுக் கொண்டாய்? எத்தனை நாட்களாக இப்பழக்கம்?' என எதையும் கேட்டிலள். மகள் மீதோ, அவளை வளர்க்கும் பொறுப்புடையளாய செவிலி மீதோ சிறிதும் சினம் கொண்டிலள்; பார்த்தும் பாராதவள் போல் போய் விட்டாள். ஆனால், மகள் கொண்ட காதல் என்னென்ன

விளைவுகளை உண்டாக்கி விடுமோ? அவளைக் காதலிப்பவன் யாவனோ? அவன் நல்லவனாக இருப்பானோ? ஆயர்குல வழக்கப்படி ஏறு தழுவும் ஆற்றல் அவன்பால் அமைந்திருக்குமோ? மகள் காதலித்த அவனுக்கே, இவள் தந்தை இவளை மணம் செய்து தருவனோ? என்ற ஐயங்கள் அடுக்கடுக்காக அவள் மனதில் எழவே, சிறிதே நடுங்கி விட்டாள். நெருப்பை அறியாது தொட்டவர், அந்நெருப்பு கையைச் சுட்டதும், நடுநடுங்கிக் கைகளை உதறிக் கொள்வதுபோல், அவள் உடல் முழுதும் ஒரு சிறிது நேரம் நடுங்கிற்று; புறக்கடைப் பக்கம் போய் விட்டாள்.

அப் பெண் தலை குனிந்தவள் குனிந்தவளே! இதன் விளைவு என்னாமோ என அஞ்சிற்று அவள் உள்ளம். விரித்த கூந்தலை முடித்துக் கொண்டாள்; நிலம்வரை நீண்டு தொங்கிய தன் நீல ஆடையைக் கைகளால் பற்றித் தூக்கிப் பிடித்துக் கொண்டாள்; அச்சத்தால் உடல் நடுங்க, மெல்ல அடிமேல் அடி வைத்து நடந்து, மனைக்கு அணித்தாக இருந்த, எவராலும் அறிந்து கொள்ள இயலாத குறுங்காட்டிற்குள் புகுந்து ஒளிந்து கொண்டாள். நிற்க.

மகள் மனநிலையை உணர்ந்து கொண்ட தாய் அவள் தோழியை அழைத்து, அவள் காதல் விளையாட்டு அனைத்தையும் அறிந்து கொண்டாள்; அவள் காதலன் நல்லவன் என்பதையும் அறிந்து கொண்டாள். உடனே, கணவனையும் மக்களையும் கூட்டி, அவர்க்கு மகள் காதலைக் கூறி, அவள் திருமணத்திற்கு இசைய வைத்தாள். அவரும் இசைந்து, அதற்கு வேண்டியவற்றை விரைவில் முடிக்க முனைந்தனர்.

மகிழ்ச்சி தரும் அச் செய்தியை அப் பெண்ணுக்கு அறிவிக்கத் துடிதுடித்தாள் அவள் தோழி. அவளை வீடெங்கும் தேடிப் பார்த்தாள்; காணவில்லை. அவளோடு பழகி, அவள் காதலுக்குத் துணை போனவள் அத்தோழி. அதனால் அவள் சென்றிருக்கும் இடம் அறிந்து ஓடினாள். உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்க ஒளிந்திருந்த அப் பெண், தோழியைக் கண்டதும், அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, அன்று வீட்டில் நடந்ததைக் கூறி, "மறைந்து மறைந்து மதுவுண்ணும் ஒருவன், மது மயக்கம் தலைக்கேறியதும், யார் யாரைக் காண நாணி, மதுவை மறைந்து உண்டானோ, அவர் முன்னிலையில் நாணாது சென்று, அவர் கண்டு நடுங்கத் தன் மதுப் பழக்கத்தை மலை மேல் ஏற்றிய விளக்கென விளக்கமாக உரைப்பது போல, என் களவு வாழ்க்கையை அம்மலர் காட்டிக் கொடுத்து விட்டதே, தோழி! இனி யான் என் செய்வேன் தாய் முகத்தில் எவ்வாறு விழிப்பேன்?" எனக் கூறி அழுதாள்.

அவள் கூறாமுன்பே அனைத்தையும் அறிந்திருந்த தோழி, "பெண்ணே! இதற்காக ஏன் இவ்வாறு நடுங்குகிறாய்? நம்மைப் பெற்றவர்களின் பண்பாடு அறியாத பேதை நீ. நீ அவன் அளித்த மலரைச் சூட்டிக் கொண்டாய்; அது அறிந்த நம் பெற்றோர் உன்னை அவனுக்கே மணம் செய்து தர உறுதி பூண்டனர்; அதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன; நம் பெரிய வீட்டிற்கு வெள்ளை அடித்துச் செம்மண் பூசி ஆயிற்று; முற்றத்தில் புதுமணல் பரப்புகின்றனர்; ஆங்கே பந்தல் அமைத்துத் திருமணத் திரையும் கட்டியாயிற்று. தாயும்,

*தந்தையும், தமையன்மாரும் இரவு பகலாகக் கூடிப் பேசியதெல்லாம் உன் திருமணப் பேச்சே! ஆகவே, அஞ்சுவது விடுத்து வந்து அவற்றையெல்லாம் கண்ணாரக் கண்டு களிப்பாயாக!" எனக் கூறிக் கூட்டிச் சென்றாள்.*

"தோழி! நாம் காணாமை உண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க உரைத்தாங்குக்
கரந்ததூஉம் கையொடு கோட்பட்டாம் கண்டாய் நம்
புல்லினத்து ஆயமகன் சூடி வந்ததோர்
முல்லை ஒரு காழும் கண்ணியும், மெல்லியால்!
கூந்தலுள் பெய்து முடித்தேன் மன்; தோழியாய்!
வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே,
அன்னையும் அத்தனும் இல்லரா, யாய் நாண
அன்னைமுன் வீழ்ந்தன்று அப்பூ;

அதனை, வினவலும் செய்யாள்; சினவலும் செய்யாள்
நெருப்புக்கை தொட்டவர்போல விதிர்த்திட்டு
நீங்கிப்புறங்கடைப் போயினாள்; யானும் என்
சாந்துளர் கூழைமுடியா, நிலம் தாழ்ந்த
பூங்கரை நீலம் தழீஇத், தளர்பு ஒல்கிப்
பாங்கரும் கானத்து ஒளித்தேன்; அதற்கு எல்லா!

ஈங்கு எவன் அஞ்சுவது?
அஞ்சல்! அவன்கண்ணி நீ புனைந்தாயாயின், நமரும்
அவன்கண் அடைசூழ்ந்தார் நின்னை; அகன்கண்
வரைப்பில் மணல்தாழப் பெய்து, திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப; அதுவே, யாம்
அல்கலும் சூழ்ந்த வினை."

*தன் களவு வெளிப்பட்டது என்று தலைவி அஞ்ச, தமர் உன்னை அவனுக்கே கொடுக்க இசைந்தார் எனத் தோழி கூறியது இது.*

1. மெய் – உடலில்; கூர – மிக; 2. உரைத்தாங்கு – உரைத்தது போல் 3. கரந்தது – மறைத்தது; கோட்பட்டாம் – பிடிபட்டோம்; 6. பெய்து – இட்டு; 7. உரைஇ – தேய்க்க; கதுப்பு – கூந்தல் 8. அத்தன் – தந்தை; இல்லரா – வீட்டில் இருக்க 11. விதிர்த்திட்டு – நடுங்கி உதறி; 13. சாந்துளர் கூழை – மயிர்ச் சாந்து பூசிய கூந்தல்; 14. தளர்பு – தளர்ந்து, ஒல்கி – மெல்ல நடந்து; 15. பாங்கு – அண்மையில் உள்ள; 18. அடை – கொடுத்தலை; சூழ்ந்தார் – ஆராய்ந்து முடிவு செய்தார். அகன்கண் – அகன்ற இடத்தை உடைய, வரைப்பு – மனைமுற்றம்; 20. வதுவை – திருமணம், அயர்ப – மேற்கொள்வர்; 21. அல்கலும் – இரவிலும்; சூழ்ந்த – ஆராய்ந்த.

# 16

## நாடி வருவை நாணிலி!

குடும்பப் பொறுப்புணர்ந்த குமரி அவள். தான் பிறந்த ஆயர் குடியில், அவரவர்க்குரிய கடமைகளை அவரவர் செவ்வனே செய்து முடித்தல் வேண்டும் என்ற சிறந்த உள்ளமும் உடையவள்; அவரவர்களின் ஆண்டு நிறைவிற்கும், ஆற்றலுக்கும் ஏற்பவே, அவள் வீட்டில் கடமைகள் வரையறுக்கப் பெற்றிருந்தன. தந்தையும் தமையன்மாரும் ஆனிரைகளை ஓட்டிச் செல்ல, அவ் வானிரையோடு சேணெடும் தூரம் செல்ல மாட்டாமை யால், வீட்டில் விடப்பட்டுள்ள கன்றுகளைத் தன் வீட்டிற்கு அணித்தாக உள்ள தோட்டங்களுக்குக் கொண்டு சென்று மேய்ப்பதும், ஆனிரை மேயும் இடத் திற்குக் கறவைக் கலங்களோடு சென்று, அவர்கள் கறந்து தந்த பாற்குடங்களை வீட்டிற்குக் கொண்டு வருவதும் அவளுக்கு ஒதுக்கிய பணிகள். அதில் அவள் பெரிதும் கருத்துடையவள்.

கன்னிப் பருவம் கழிந்து, கடிமணப் பருவத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் அவள் உள்ளத்தில், காதல் உணர்ச்சி மெல்ல அரும்பீனத் தொடங்கியிருந்தது; அதற்குத் துணை புரிந்து அன்பு நீர் ஊற்றி வளர்க்க முன்வந்தான் ஓர் இளைஞன். கன்றுகளை ஓட்டிச் செல்லும் போதும், கறவைக் கலங்களோடு செல்லும் போதும், இடைவழியில் நின்று, அவளைக் கண்டு மகிழ்வதும், அவளை அணுகிப் பேச்செடுத்து அவள் சொல் கேட்டு இன்புறுவதும், அவன் வழக்கமாகி விட்டது. அதில் அவளும் பேரின்பம் கண்டாள். காதல் உணர்ச்சியோடு, தன் காதல் திருவிளையாட்டைத் தாய் கண்டு கொண்டால் கடிந்து கொள்வாள்; ஊரார் உணர்ந்தால் அலர் கூறிப் பழிப்பர் என்ற அச்சமும் அவள் உள்ளத்தில் ஒருபால் ஆட்சி செய்தது; அதனால் தன் காதலை அஞ்சி அஞ்சி வளர்த்து வந்தாள்.

இந்நிலையில், ஒருநாள், அவள் கன்றுகளை ஓட்டிக் கொண்டு புறப்பட்டாள். அவளை ஊர்க் கோடியிலேயே பார்த்துவிட்ட இளைஞன், அவள் கைப்பற்றிச் செல்லும் தாம்பின் ஒரு தலையைப் பற்றியவாறே, அவளைப் பின் தொடர்ந்தான். பேசாமல் பின் தொடர்ந்து சென்றவன், காடும் மலையும் சூழ, இடையே எவரும் எளிதில் புகமாட்டா இடத்தில் இருந்த தோட்டத்திற்குள் அவள் புகுந்ததும், அவள் முன்னே புகுந்து, வழிமறித்து நிறுத்தினான். பின் தொடர்ந்து வந்தவன், திடுமென முன் புகுந்து வழிமறித்தமையாலும், இந்நிலையை எவரேனும் கண்டு கொண்டால் தன் நிலை என்னாம் என எண்ணியதாலும் அஞ்சிவிட்டாள். "ஏடா! ஏது இவ்வாறு

வந்து வழிமறித்து விட்டாய்? மனம் என்ன பித்தேறி மயக்கம் உற்றுவிட்டதோ? விலகி எனக்கு வழிவிடு!" எனப் படபடக்கக் கூறினாள்.

சினந்து நிற்கும் அவள் தோற்றம் கண்டு அவன் சிந்தை களித்தது; காதல் வெறி தலைக்கேறிற்று; அவள் மேனியைத் தழுவி மகிழும் ஆசை அவனைப் பற்றிக் கொண்டது; நெறி பிறழா நல்லோனாதலின், அவளிசைவு பெறாது அவளை அணைத்துக் கொள்வது பெரும் பிழையாம் என எண்ணினான்; அவளே விரும்பி வந்து தன்னைத் தழுவிக் கொள்ள மாட்டாளா எனப் பெரிதும் ஆசைப்பட்டான்; நற்பண்பு நிறைந்த அவனால் அதையும் வாய்விட்டுக் கூற இயலவில்லை. அதனால், 'வழிவிட்டு விலகு!' என அவள் கூறியதும், "பெண்ணே! நான் வழி விடேன்; வீட்டை விட்டு, வெளியே வந்து நிற்கும் நீ, தன்னைப் பிடிக்க வருவாரை முட்டிக் கீழே தள்ளிவிட்டு மூர்க்கமாக ஓடி மறையும், கொடிய வலிமை வாய்ந்த பெண்ணெருமைக் கன்றுபோல், வழி மறித்து நிற்கும் என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டுச் செல்வாயாக!" எனக் கூறி அசையாது நின்றான்.

அவன் சொல்லும் செயலும் அவளுக்கு இன்ப மூட்டின. அந்நிலையிலேயே நிற்கவும், ஏன், அவன் விரும்புமாறு அவனைத் தழுவிக் கொள்ளவும் அவளும் விரும்பினாள். ஆனால் தாய் வந்து விடுவாளோ? பிறர் பார்த்து விடுவாரோ என்ற அச்சம் அவளை அலைக் கழித்தது. அதனால், "ஏடா! என்மீது பேரன்புடையவள் என் தாய்; எனக்குக் கேடு செய்ய எண்ணுவாரைக் கொடுமைக் குள்ளாக்கும் கடுமையுடையவள்; துள்ளி

விளையாடும் தன் கன்றைப் பற்றித் தளைப்பார் மீது பெருஞ்சினம் கொண்டு பாயும் கன்றீன்ற பசுவைப் போல் என்னைத் தடுத்து நிற்பதைத் தாய் கண்டால் நின்னைப் பற்றித் துயர் செய்வள்: தாயின் சினம் உன் சிந்தையில் இருத்தல் நலம்; ஆகவே, மேலும் வழிமறித்து நிற்காதே; விலகு!" என்றாள்.

தன்மீது அவளுக்கும் காதல் உளது; ஆனால் தன் களவுக் காதலை எவரேனும் அறிந்து கொள்வரோ என்று அஞ்சுகிறாள் என்பதை அவன் அறிந்து கொண்டான். தாயையும், ஊர்த் தலைவனையும் பற்றிய அச்சம் அவனை விட்டகன்றது; அதனால், "பெண்ணே! உன் பேரன்பு கிட்டும் பேறு எனக்கு வாய்க்காது போய் விடுமோ என்றே யான் இதுகாறும் அஞ்சி வாழ்ந்தேன்; அதை இன்று அடைந்து விட்டேன்; அதைப் பெற்ற பின்னர், உன் அருட் பார்வை என் மீது வீழ்ந்து விட்ட பின்னர், இவ் வுலகில் எதற்கும் அஞ்சேன்; காதல் வெள்ளத்தில் களித்திருக்கும் இந்நிலையில் தாயே வரினும் தளரேன்; ஊரே திரண்டு வரினும், ஊர்த் தலைவனே வரினும் தளரேன்; அவரைக் கண்டு அஞ்ச வேண்டிய தேவையும் இனி இல்லை!" எனக் கூறிப் பல்லிளித்தான்.

தாய் வருவள்; அவள் நனிமிகக் கொடியள் எனத் தான் கூறியதை ஏற்றுக் கொள்ளாது, ஏற்று வழி விடக் கருதாது, பெருமழை பெய்யும் பொழுது, அம் மழையினின்றும் ஓடி ஒளியக் கருதாது, தலை சாய்த்து, மெல்ல அடியிட்டு நடந்து செல்லும் எருதுபோல், தன் முன் தலை வணங்கி நின்று, தான் கூறும் ஒவ்வொன்றிற்கும் தடையாக வேறு சில கூறிக், காதல்

வெறியால் கருத்திழந்து, காதல் வெளியானால் உண்டாம் விளைவுகளை உணராது நிற்பானைக் கண்டாள். காதல் வெறியால் நாண் இழந்து நிற்பவன் அறிவு, தன் காதல் நிறைவேறினாலல்லாது தெளியாது என உணர்ந்தாள். அதனால், "ஏடா! இங்கு எல்லோரும் வருவர்; இவ்விடம் நம் காதல் நிகழ்ச்சிக்கு ஏற்றதன்று; கறவைக் கலம் ஏந்தி மேய்புலம் நோக்கிச் செல்வேன்! அப்போது ஆங்கு வருக!" எனக் கூறி, அவன் காதலுக்கு இசைந்து அவனை அனுப்பினாள். காதல் நிறைவேறிய களிப்போடு அவனும் அவ்விடம் விட்டு அகன்றான்.

"பாங்கு அரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம்;எம்
தாம்பின் ஒருதலை பற்றினை, ஈங்கு எம்மை
முன்னை நின்றாங்கே விலக்கிய, எல்லா! நீ,
என்னையே? முற்றாய்; விடு.

விடேஎன்; தொடீஇய செல்வார்த் துமித்து எதிர்மண்டும்
கடுவய நாகுபோல் நோக்கித், தொடுவாயில்
நீங்கிச் சினவுவாய் மற்று.

நீ நீங்கு; கன்று சேர்ந்தார் கண் கதவு ஈற்றாச் சென்றாங்கு
வன்கண்ணன் ஆய்வரல் ஓம்பு;
யாய் வருக ஒன்றோ; பிறர் வருக; மற்றுநின்
கோவரினும் இங்கே வருக; தளரேன்யான்
நீ அருளி நல்கப் பெறின்

நின்னையான் சொல்லினவும் பேணாய், நினைஇக்
கனைபெயல் ஏற்றின் தலைசாய்த்து எனையதூஉம்
மாறு எதிர்கூறி மயக்குப் படுகுவாய்!

கலத்தொடு யாம் செல்வுழி, நாடிப் புலத்தும்
வருவையால் நாணிலி நீ!"

*தலைவன், தலைவியை வழியிடைக் கண்டு காதல் கூற, அவள் அதற்கு இசைந்து குறியிடம் கூறியது இது.*

1. பாங்கு – அண்மை; அரும் – செல்லுதற்கு அரிய; பாட்டங் கால் – தோட்டத்தில்; 4. என்னையோ? – என்ன பித்தேறினாயோ; முற்றாய் – தடுக்காதே; 5. தொடீஇய – தொட; துமித்து – கெடுத்து; மண்டும் – விரைந்து ஓடும்; 6. கடு – மிக்க; லயம் – பலம்; நாகு பெண்ணெருமை; தொழு என்பது தொடுவெனத் திரிந்தது. 8. சேர்ந்தார்கண் – சேர்ந்தார் மீது, கதவு – சினம் மிக்க; ஈற்றா – கன்று ஈன்ற பசு; 11. கோ – தலைவன்; 14. கனைபெயல் – பெருமழை; ஏற்றின் – எருதைப் போல்; ஏனையதூஉம் – எல்லாவற்றிற்கும்; 17. நாணிலி – நாண் அற்றவன்.

# 17

## சேரிக் கிழவன் மகளேன் யான்

ஆயர்குல இளைஞன் ஒருவன், தன் ஆயர்யாடியை யடுத்த காட்டு வழியில், ஆடு மாடுகளை மேய விடுத்துக் காத்துக் கிடந்தான்; மாலைக் காலம் வந்தது. அப்போது அவ்வழியாக, அவ்வாயர்பாடித் தலைவன் மகள், கையில் ஒரு மலர்க் கூடையை ஏந்தியவாறே, காட்டிலிருந்து வந்து கொண்டிருந்தாள். அவளை அவன் முன்னரே அறிவான்; அறிந்திருந்தது மட்டுமன்று, அவள்பால் அவனுக்குக் காதலும் உண்டு; அவளும் அவனைப் பண்டே கண்டு காதல் கொண்டிருந்தாள்; ஆனால் அன்றுவரை, ஒருவர் உள்ளத்தை யொருவர் அறிந்து கொள்ளும் வாய்ப்பு வாய்க்கவில்லை. அது அன்று வாய்த்து விட்டது; மேலும், அப் பெண்ணின் அன்றைய தோற்றம் இளைஞன் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது. கலப்பற்ற பொன்னை ஓட உருக்கி அதில் நீலமணி வைத்து இழைத்த அணியின் நிறத்தை வென்றிருந்தது அவள் மேனி. கோங்கின் முற்றாத இளம் முகைபோல் வளர்ந்து

வனப்பளித்தன, தொய்யில் வரைந்த அவள் இள முலை கள். அப்பெண்ணின் இவ்வழகிய திருவுருவைக் காணக் காண, அவள்பால் அவன் கொண்ட காதல் அடக்க இயலாவாறு பெருகிற்று. அதனால், மலர்க்கூடையேந்தி, வீடு நோக்கி வருவாளை வழி மறித்து நிறுத்தினான்; அவள் மேனியழகு, வளர் முலை வனப்புகளைப் பாராட்டினான். அவன் அவ்வாறு பலப்பல கூறிப் பாராட்டவும், அவள் வாய் திறந்திலள். அதனால் அவன் வருத்தம் மிகுந்தது; அவள் மொழி கேட்கும் ஆர்வம், அவன் உள்ளத்தில் வளர்ந்தது. "பெண்ணே! உன் கையில் இருப்பது யாது?" என வலிய எதிர் சென்று வினவ நின்றான்.

செல்வ வாழ்விற் கேற்ற செருக்குடையவள் அப் பெண். அதனால் பிறர் அணுகவும் அஞ்சும் பெருவாழ் வினளாய தன்னைத் தடுத்து நிறுத்தியது தவறு என்பதை இளைஞனுக்கு எடுத்துக் காட்ட எண்ணி, "ஏடா! இவ்வூராளும் தலைவன் மகள் நான்!" என்று கூறினாள். செல்வச் செருக்கால், அவனை மதியாது, தன் பெருமையைப் பாராட்டியவள், அவன், தன் உள்ளம் கவர் கள்வன் என்ற உணர்வு வரப்பெற்றதும் அடங்கினாள்; அவன் வினாவிற்கு விடையளிக்கவும் விரும்பினாள். அருள் சுரக்கும் தன் கண்களால், அவனை ஒருமுறை ஆர நோக்கினாள். "அன்ப! கையில் இருப்பது ஒரு புட்டில்; விலைக்கு வாங்கியது; இவ்வூர்ப் புலைத்தி பனம்போழ் கொண்டு முடைந்து அளித்தது!" என விடை கூறி, அவ்விடம் விட்டு அகல முயன்றாள். காதலியின் சொல்லினிமை கேட்டு இன்புற்ற இளைஞன், அவள்

அழகை, அண்மையிற் சென்று, அருகிலிருந்து நுகர விரும்பினான். அதனால், "பெண்ணே! உன் கையில் இருப்பது புட்டில் என்பதை நான் அறிவேன்; பார்த்த அளவிலேயே அது புலனாகிறது. நான் அறிய விரும்பியது அதையன்று; புட்டிலுள் இருப்பது யாது? அதைக் கூறு; அல்லது அதைச் சிறிது காட்டு," எனக் கூறியவாறே அவளருகில் சென்றுவிட்டான்.

"புட்டிலுள் இருப்பது யாது? அதைக் காட்டு," எனக் கேட்டவனுக்கு, அவள், அதைக் காட்டியதோடு நில்லாது, அவனோடு மேலும் சிறிது நாழிகை உரையாடி மகிழ வேண்டும் என்ற வேட்கை மிகுதியால், புட்டிலைக் காட்டியவாறே, "புட்டிலுள் இருக்கும் இம் முல்லை மலர்கள், நானும் என் தோழிமாரும் காட்டின்கண் பறித்தவை!" என்று அவன் வேண்டாத விளக்கத்தைத் தானே வலியக் கூறினாள்.

ஆயர்பாடித் தலைவன் மகள், தன்பால் வெறுப்போ, வீட்டிற்குப் போக வேண்டும் என்பதில் விரைவோ காட்டாது, தான் வினவிய வினாக்களுக்கெல்லாம் விடையளித்தும், தான் காண விரும்பியதைக் காட்டியும் நிற்கும் அவள் செயலால், அவள் காதற் கருத்தை அறிந்து கொண்ட இளைஞன், அவளை அடைந்து, அவள்பால் காதற் பயன் பெறத் துணிந்தான். ஆனால், அதை உரைக்க அவன் நாக்கு அஞ்சிற்று. அதனால், 'புட்டிலுள் இருப்பன முல்லை மலர்கள்,' என அவள் கூறியதும், "பெண்ணே! உன்பால் இருப்பதோ, மணத்திற்கேற்ற மங்கலப் பொருளாய முல்லை மலர்; அம்மலர்களோடு உன்னைக் கண்ட காலமோ, காதற் பயன் பெறுதற்கேற்ற மாலைக்

காலம்; இடமோ, ஒருவர் உருவை ஒருவர் காணாவாறு காரிருள் சூழ்ந்த, எவரும் எளிதில் புகமாட்டா அரிய இடம்!” எனத் தயங்கித் தயங்கித் தடுமாறித் தடுமாறிக் கூறினான். அந்த அளவு கூறியவன், “சூழ்நிலை கூட்டத்திற்கு ஏற்றது; அதைப் பெறத் துடிக்கிறது என் உள்ளம்!” என்பதைக் கூறமாட்டாது விழித்தான். விழித்தது மட்டுமன்று, அந்த அளவு கூறியதற்கும், அவள் என்ன நினைத்துக் கொள்வாளோ, அதனால் என்னென்ன ஏதங்கள் நேருமோ எனவும் அஞ்சிற்று அவன் உள்ளம். அதனால், “பெண்ணே! செல் எனச் சொல்லி, உன்னைப் போகவிட விரும்புகிறேன் நான். ஆனால் என் அறிவு உன்னைப் போகவிட மறுக்கிறது; தெளிவற்றது; பிறர் பெருமை உணராதது; குறைபாடுடையது; நல்லது தீதுகளை அறியும் திறம் அற்றது என்பதை அறிந்தும், அவ்வறிவிற்கு அடிமைப்பட்ட என் உள்ளமும் உன்னைப் போகவிடாது தடுத்து நிறுத்தி விட்டது!” என்று கூறித் தன் துணிவைப் பையப் பையத் தெரிவித்தான்.

“மாண உருக்கிய நன்பொன் மணி உறீஇப்
பேணித் துடைத்தன்ன மேனியாய்! கோங்கின்
முதிரா இள முகை ஒப்ப எதிரிய
தொய்யில் பொறித்த வனமுலையாய்! மற்றுநின்
கையது எவன்? மற்று உரை.

கையதை, சேரிக்கிழவன் மகளேன்யான்; மற்று இஃதோர்
மாதர்ப்புலைத்தி விலையாகச் செய்ததோர்
போழில் புனைந்த வரிப்புட்டில், புட்டிலுள் என்உள?
காணதக்காய்! எற்காட்டிக் காண்.

காண்இனி; தோட்டார்கதுப்பின் என் தோழியவரொடு
காட்டுச் சார்க்கொய்த சிறுமுல்லை, மற்றுஇவை
முல்லை இவை ஆயின், முற்றிய கூழையாய்!
எல்லிற்றுப் போழ்தாயின், ஈதோளிக் கண்டேனால்;
செல் என்று நின்னை விடுவேன் யான்; மற்று எனக்கு
மெல்லியது ஓரா அறிவு."

*தலைவன், தலைவியை வழியிடைக் கண்டு, அவள் கையின்கண் இருப்பது வினாவிச் சென்று சேர்ந்தின் புற்றது.*

1. மாண — மாட்சிமைப்பட, நன்றாக; உறீஇ — அழுத்தி, 2. துடைத்தன்ன — இழைத்த அணி போன்ற; 2 முதிரா — முற்றாத; முகை — அரும்பு ; எதிரிய — முளைத்த 4. பொறித்த — எழுதிய 5. எவன் — யாது; மற்று — வினைமாற்று; 6. கிழவன் — தலைவன்; 7. மாதர் — அழகிய; 8. போழில் — பனநாரினால்; புனைந்த — முடைந்த 9. எற்காட்டி — எனக்குக் காட்டி; 10. தோட்டார் கதுப்பு — தோடு ஆர் கதுப்பு — மலர் இதழ்கள் நிறைந்த கூழ்தல்; 11. காட்டுச்சார் — காட்டின்கண்; 12. முற்றிய — நீண்டு வளர்ந்த.

# முல்லைக் கொடி

புலவர் கா.கோவிந்தன் எம்.ஏ.,

